
க்ரைம்
நாவல்
2011
262
ரூ 15
நீலநிற
மல்லிகை!
ராஜேஷ்குமார்

**கோயமுத்தூரிலிருந்து செல்லம் பேசுகிறேன்**

எனது அன்பான வாசக உள்ளங்களுக்கு,

வணக்கம்.

நம் தமிழ்நாடு, வருகிற மே மாதம் சட்டசபைத் தேர்தலைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டு வருகிறது. இனிவரும் இரண்டு மாதங்களிலும் மழை பொழிகிறதோ - இல்லையோ... பணமழை நிச்சயம் பெய்யும். அந்தப் பண மழையில் நனைய வாக்காளர்களும் ஆர்வமாகவே உள்ளனர். இன்றைக்கு, பணம் என்பது சர்வ சாதாரணமாய் - மேல்தட்டு மக்களிடையே மட்டும் அல்லாமல் கீழ்த்தட்டு மக்களிடையேயும் - புழங்கிக் கொண்டு இருக்கிறது. இந்தப் பணப் புழக்கத்துக்கு என்ன காரணம் என்று பொருளாதார மேதைகளைக் கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமோ? ''இந்தியப் பொருளாதாரம் வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறது. வாங்கும் சக்தி அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. முன்பெல்லாம் வீட்டில் ஒருவர்தான் வேலைக்குச் செல்வார். அவருடைய சம்பளப் பணத்தில்தான் குடும்பம் ஓடும். ஆனால், இப்போதோ நிலைமை வேறு. 60 வயதைக் கடந்தவர்கள் மட்டும் இப்போது வீட்டில் இருக்க - மற்றவர்கள் எல்லாம் வேலைக்குப் போய்க் கொண்டு இருக்கிறார்கள். எனவேதான் பணம் என்பது இப்போது எல்லோருடைய கைகளிலும் கணிசமாய்த் தவழ்ந்துகொண்டு இருக்கிறது.''



இப்படியொரு நிலைமை மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், வேறு ஒரு ஆபத்து - அந்த மகிழ்ச்சிக்குப் பின்னால் மறைவாய் நின்று, எட்டிப் பார்த்துக் கொண்டு இருக்கிறது. அதாவது, பணமே பிரதானமாகிவிட்ட



இன்றைய இந்தியாவில், வேலைக்குச் செல்லும் இளம் தம்பதிகள் - தங்களது குழந்தை பெற்றுக்கொள்ளும் உரிமையைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக்கொடுத்து வருகின்றனர். உதாரணத்திற்கு, ஒரு ஐ.டி. கம்பெனியில் கணவனும் மனைவியும் பணிபுரிகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இவர்கள் திருமணம் முடிந்து இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வரை குழந்தை பெற்றுக் கொள்வதைத் தள்ளிப் போடுகிறார்கள். மனைவி கர்ப்பமானால் அவளுடைய பணி வாய்ப்பு, இன்க்ரிமெண்ட், பதவி உயர்வு பாதிக்கப்படும் என்று நினைக்கின்றனர் கணவன்மார்கள். பணத்தின் மேல் இருக்கும் ஆசையினால், குழந்தை பெற்றுக்கொள்வதை எவ்வளவு நாட்கள் தள்ளிப் போட முடியுமோ, அவ்வளவு நாட்கள் தள்ளிப் போடுகிறார்கள். இதில் சிலர், 'எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை. என்று நினைத்து வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள முடிவுசெய்து கொள்கின்றனர். இன்னொருபுறம் இப்படிப்பட்ட தம்பதிகளுக்காகக் குழந்தைப் பெற்றுக் கொடுக்க வாடகைத் தாய்களும் உருவாக ஆரம்பித்து விட்டார்கள். முன்பெல்லாம், ஒரு தம்பதியால் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை இருந்த போதுதான் வாடகைத்தாய் எட்டிப்பார்ப்பாள். இப்போது நிலைமையே வேறு. பணத்தாசை பிடித்த ஐ.டி. பெண்களுக்கு குழந்தைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கென்றே ஒவ்வொரு நகரத்திலும் ஆயிரக்கணக்கான இளம்பெண்கள் வாடகைத் தாய்களாக உருவெடுத்துள்ளார்கள். இதில் பலர் 'பாலியல் தொழில்' செய்பவர்கள். குடும்பச் சூழ்நிலை காரணமாக வாடகைத்தாயாக இருப்பதற்கு சம்மதிக்கும் பெண்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பெங்களூர் போன்ற நகரங்களில், ஒரு பெண் வாடகைத்தாயாக இருக்க 2லட்சம் ருபாய் தருகிறார்கள். வேளா வேளைக்கு சத்தான உணவு கிடைக்கிறது. கருவைச் சுமக்கும் பத்து மாதங்களும், அவள் நல்ல ஓய்வில் இருக்கிறாள். அவளுடைய உடல்நலத்தைப் பாதுகாப்பதில் மருத்துவர்களும் தனிக்கவனம் செலுத்துகின்றனர்.

'தனக்கு குழந்தை பிறக்க வாய்ப்பு இருக்கிறது என்று

தெரிந்தும், தான் கருவைச் சுமக்க விரும்பாமல் இன்னொரு பெண் மூலம் குழந்தை பெற்றுக்கொள்வது சரியான முறை தானா..?' என்ற கேள்வி எல்லோருடைய மனசிலும் எழும். இந்தக் கேள்விக்கான பதிலை சைக்யாட்ரிஸ்ட் டாக்டர் ஒருவர் தெளிவான முறையில் சொல்லியுள்ளார்.

''மேலோட்டமாகப் பார்த்தால், இதில் எந்தப் பிரச்னையும் இருப்பது போல் தோன்றாது. ஏதோ, ஷாப்பிங் போய் ஒரு பொருளை வாங்கிட்டு வருவது போன்ற அனுபவம் மட்டுமே இருக்கும் என்று நினைப்பது தவறு. இதில் நிறைய பிரச்னைகள் உள்ளன. முதலில் வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள நினைத்தால் கணவனின் உயிர் அணுவும், மனைவியின் சினை முட்டையும் சோதனைக் குழாய் முறை யில் இணைக்கப்பட்டு குழந்தை உருவாக்கப்படும். அதன் பின்னர், அந்தக் கரு, வாடகைத் தாயின் கருப்பையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு வளர்க்கப்படும். இந்தக் குழந்தை வாடகைத்தாயின் வயிற்றில் வளர்ந்து பிறந்ததும், அந்தக் குழந்தையை அந்தக் கணவனும், மனைவியும் முழுமனதோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். 'யாரோ ஒரு பெண்ணின் வயிற்றில் வளர்ந்ததுதானே இந்தக் குழந்தை' என்ற பார்வையோடு - அந்தக் குழந்தையைப் பார்க்கக்கூடாது. மேலும், அந்தக் குழந்தை வளர்ந்து, ஓரளவுக்கு விபரம் தெரியவரும்போது - 'நீ என் வயிற்றில் பிறக்கவில்லை' என்ற கசப்பான உண்மையை முதலிலேயே சொல்லிவிடவேண்டும். அப்படிச் சொல்ல மனசு இடம் கொடுக்காத பட்சத்தில் குழந்தைகளுக்கு அதைப்பற்றிய உண்மைகள் வாழ்நாள் முழுவதும் தெரியாமல் பாதுகாக்க வேண்டும். அதையும் மீறி வெளிநபர் மூலமோ, உறவினர் கள் மூலமோ அல்லது நண்பர்கள் மூலமோ உண்மை தெரியவரும்போது, அந்தக் குழந்தையின் சந்தோஷம் பாதிக்கப்படும். அதன் காரணமாய் ஒருவித தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு பெற்றவர்களை வெறுக்கும் சூழ்நிலையும் உண்டாகலாம்.''

இதில் உள்ள இன்னொரு முக்கியமான பிரச்னை என்னவென்றால்..: வாடகைத்தாய் மூலம் பிறந்த



குழந்தைக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டால், அந்தத் திடீர் ஆரோக்கியச் சீர்கேடுக்கு என்ன காரணம் இருக்கமுடியும்? என்பதை நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வாடகைத் தாயாக இருந்த அந்தப் பெண்ணுக்கு அதுபோன்ற நோய் இருந்ததா? என்பதை உறுதி செய்துகொண்டு சிகிச்சையைத் தொடங்க வேண்டும்.

''ஸார்... இது எல்லாம் தேவையா?''

''க்ராஸ் டாக்ல யாரு..?''

''ஸார்... நான் ஸ்ரீலங்கா வாசகன். பேர் ஏ.எம்.எம். ஹசன்''

கடல் கடந்து பேசற உங்களுக்கு என்னோட வணக்கம். போனவாரம்தான் நீங்க எழுதின லெட்டர், சென்னையில் இருக்கிற ஒரு புத்தகப் பதிப்பாளர்க்குப் போய் - எனக்கு ரீ-டைரக்ட் பண்ணி வந்தது. ரொம்பவும் பெரிய லெட்டர். நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிச்சுப் பார்த்தேன். பாச மழையிலேயும், பாராட்டு மழையிலேயும் என்னைத் தெப்பல் தெப்பலாய் நனைய வெச்சுட்டீங்க. ரொம்ப நன்றி...!''

''நன்றியெல்லாம் வேண்டாம் ஸார். கஷ்டப்பட்டு க்ராஸ்டாக்ல வந்திருக்கேன்... அடுத்த மாச க்ரைம் நாவலோட தலைப்பைச் சொல்லுங்க ஸார். அகமகிழ்ந்து போயிடுவேன்.''

''இதோ தலைப்பு...''

''சொல்லுங்க... சொல்லுங்க...''

''அது...

இது...

எது...?''

''தலைப்பு ரொம்பவும் புதுமையாய் இருக்கே?''

''கதையும் புதுமைதான்... வெயிட் பண்ணுங்க.. ஹசன்!''

டொக்...! மிக்க அன்புடன்,

**ராஜேஷ்குமார்**

# ராஜேஷ்குமாரிடம்

★ நம் மீது ஒருவர் உண்மையான அன்பு வைத்து இருக்கிறாரா இல்லையா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?''

(- பா.மதனமோகன், நெல்லை)

★★ ரொம்ப ரொம்ப சுலபம். உண்மையான அன்புக்கு ஏமாற்றத் தெரியாது. ஏமாற மட்டுமே தெரியும். கொடுக்கத் தெரியும், எடுக்கத் தெரியாது. பேசுகின்ற வார்த்தைகளே, அந்த அன்பு எப்படிப்பட்டது என்று காட்டிவிடும். என்னுடைய வாசகர் ஒருவர், என் மேல் அளவு கடந்த அன்பு கொண்டவர். அவர் தன்னுடைய அன்பை எஸ்.எம்.எஸ் மூலம் செல்ஃபோனில் எப்படி தெரிவித்து இருந்தார் தெரியுமோ? கீழே படியுங்கள்.

'ராஜேஷ் ஸார்...! நீங்கள் என்னை நினைக்கும் போது, சிரமம் பார்க்காமல் ஒரு மிஸ்டு கால் கொடுங்கள். ஆனால், நான் உங்களுக்கு மிஸ்டு கால் கொடுக்க முடியாது. ஏனென்றால், ஒவ்வொரு விநாடியும் என்னால் மிஸ்டு கால் கொடுத்துக் கொண்டு இருக்க முடியாது.'

அந்த வாசகரின் SMS வார்த்தைகளில், உண்மையான அன்பு - எப்படி ஒளிந்துகொண்டு, கண்ணாமூச்சி காட்டுகிறது பாருங்கள்.

★ நாளிதழ்களில் உள்ள செய்திகளைப் படிக்கும்போது எனக்கு டென்ஷன் ஏற்படு கிறது. உங்களுக்கு..?

( - வி.ராம்கோபால், சென்னை -17)

★★ இதற்கு நான் மட்டும் என்ன விதி விலக்கா..? சில செய்திகளைப் படிக்கும் போது பி.பி. ஏறிவிடும். அண்மையில் ஒரு செய்தி படித்தேன். தலைப்பு இதுதான். மண்ணில் புதைந்தது 600 கோடி ரூபாய். தொடர்ந்து செய்தி இப்படிப் போகிறது. 'சேது சமுத்திரத் திட்டப்பணிகளுக்கு, இதுவரை செலவழித்துள்ள 600 கோடி ரூபாய்க்கான பலனைப் பெற முடியாத நிலைமையில் - பல்வேறு வழிகளில், திட்டத்திற்கான நிதி செலவு செய்யப் படுகிறது. இந்தியாவின் கப்பல் போக்குவரத்தை மேம்படுத்த மத்திய அரசால் 2400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேது சமுத்திரத்திட்டம் தொடங்கப் பட்டது. முதற்கட்டமாக, கப்பல் செல்ல வசதியாக நாகைமாவட்டம் கோடியக்கரை, தனுஷ்கோடி கடற்பகுதியில் மணல் அள்ளும் பணியை மேற்கொண்டனர். இந்தப் பணி நடந்துகொண்டு இருக்கும்போது, ராமர்பாலம் சர்ச்சை எழுந்தது. ராமர்பாலத்தை இடிக்கக்கூடாது என்று சிலர் கோர்ட்டுக்குப் போனதின் விளைவு - திட்டம் அப்படியே முடங்கிப் படுத்துக் கொண்டுவிட்டது. இதுவரை 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப் பட்டுள்ளது. இருந்தும் அதனால் பயன் இல்லை. மணல் அள்ளிய பகுதிகள், கடலின் நீரோட்டத்தால், மீண்டும் பழைய நிலைமைக்குத் திரும்பி வருகின்றன. ஒருவேளை திட்டத்தைச் செயல் படுத்தும் நிலை வந்தாலும், கடலைப் பழைய நிலை மைக்குக் கொண்டு வர மீண்டும் 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இந்தச் செய்தியை, எந்த ஒரு உண்மையான இந்தியன் படித்தாலும் - ஒரு கெட்ட வார்த்தையை யாவது உபயோகப்படுத்தாமல் இருக்கமாட்டான்.

★ ஸார்! நான் ஒரு பெண்ணை உயிர்க்கு உயிராய்க் காதலித்தேன். இருந்தாலும் என் காதல் தோல்வியில் முடிந்துவிட்டது. என் மனம் ஆறுதல் அடையும்படியாய் ஏதாவது சொல்ல முடியுமா?

(- எஸ்.தேசிங்குராஜா, ஈரோடு.)

★★ தாராளமாகச் சொல்லலாமே...! காதல் என்பது ஒரு உணர்ச்சியின் கலவையே தவிர, அதற்குள் எந்த ஒரு புனிதமும் தெய்வீகமும் கிடையாது. உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும், ஒரு குறிப்பிட்ட பருவம் வந்ததும் - அது ஆணாக இருந்தாலும் சரி; பெண்ணாக இருந்தாலும் சரி - ஹார்மோன்களால் தூண்டப்படு

# கேளுங்கள்

கின்றன. அப்போது உடம்பில் ஒரு வன்முறை உற்பத்தியாகிறது. அந்த வன்முறைக்குப் பெயர்தான் காதல். நமக்கு உண்டாகும் கோபம், பசி, தாகம், வருத்தம், சந்தோஷம் போன்ற ஒரு உணர்வுதான் காதல். சிலர் இந்தக் காதல் என்கிற உணர்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விடுவதால் - அது தோல்வியில் முடியும் போது, தற்கொலையின் விளிம்புவரைக்கும் போய்விடு கிறார்கள். அண்மையில், ஒரு இளைஞர் - காதலில் ஏற்பட்ட தோல்வியின் காரணமாகத் தற்கொலைக்கு முயன்று விஷம் சாப்பிட்டுள்ளார். உடனடியாய் ஹாஸ்பிட்டலுக்குக் கொண்டுசெல்லப்பட்டதால் உயிர் பிழைத்தார். அந்த இளைஞர் உயிர் பிழைத்துக் கண்விழித்துப் பார்த்ததும், பக்கத்தில் நின்றிருந்த அந்த இளைஞனின் தாய் கண்ணீர் மல்க இப்படிக் கேட்டார்:

''டேய்..! நீ தற்கொலை பண்ணிகிட்டு செத்துப் போயிட்டா - அந்தப் பொண்ணுக்கு, வேற ஒரு பையன் மாப்பிள்ளையா கிடைப்பான். எனக்கு, உன்னோட வயசுல - மறுபடியும் ஒரு மகன் கிடைப்பானா?''

அந்தத் தாய் கேட்ட கேள்வியை, உங்கள் தாய் உங்களைப் பார்த்துக் கேட்டதாக ஒருவிநாடி நினைத்துப் பாருங்கள். உங்கள் மனதில் இருக்கும் காதல் தோல்வி என்கிற எண்ணம் காணாமல் போய்விடும்.

★ ஒரு 'A' ஜோக் சொல்லக்கூடாதா..?

( -சி.பரகராம், பெருந்துறை.)

★★ இந்தப் பகுதியில் அது மாதிரியான ஜோக்குகளுக்கு இடமில்லையென்றாலும், உங்கள் ஆசையைக் கெடுப்பானேன்? இதோ ஒரு ஜோக்.

உதட்டில் வைத்து
ஒரே ஒரு
முத்தம்.
பத்தே விநாடியில்
கர்ப்பமானாள்.
அவள் யார்?

பலூன்.



★ இந்த சினிமா உலகில் ஜீரணிக்க முடியாத விஷயம் எது ஸார்...?

(-வெ.தாமோதரன். காரைக்குடி.)

★★ அது, எது என்று நான் சொல்வதைவிட - இந்தியாவில் பிரபலமாக உள்ள நடிகை நந்திதாதாஸ் சொன்னதை, அப்படியே மொழி பெயர்த்து விடுகிறேன். நந்திதாதாஸ் அப்படி என்ன சொன்னார் என்று கேட்கிறீர்களா..? இதோ... அவர் ஒரு பொது நிகழ்ச்சி மேடையில் பேசியது:

''சினிமா என்பது எல்லா மொழிகளிலும் ஒரு சில பிரபலமான நடிகர்களின் கைகளில் சிக்கிக் கொண்டு இருக்கிறது. இந்த நடிகர்கள் எல்லோருமே சொல்லி வைத்தாற்போல் 50 வயதில் இருந்து 65 வயதுக்குள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வயதை ஒரு ஓரமாய் தள்ளி வைத்துவிட்டு, 'விக்' அணிந்து தங்கள் மகள் அல்லது பேத்தி வயதுடைய இளம் நடிகைகளோடு டூயட் பாடி - ஓடிப்பிடித்து விளையாடுகின்றனர். ஆனால், 25 வயதைத் தாண்டிய நடிகைகளை 'ஆன்ட்டி'களாக்கி விடுகிறார்கள். என்ன கொடுமை இது! சினிமா உலகம் ஆணாதிக்க ஏரியாவாக உள்ளது. இந்த நிலை மாற வேண்டும். அப்போதுதான் சினிமா என்கிற ஒரு விஷயம் எதார்த்தமாக இருக்கும். மதிப்பு மிக்கதாக இருக்கும்'' - இப்படிச் சொல்லிப் பொருமியிருக்கிறார் நடிகை நந்திதாதாஸ். அவருடைய பொருமல் நியாயமானதா இல்லையா? என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

★ ஓஷோவின் கருத்துக்கள் உங்களுக்குப் பிடிக்குமா..?

(- வி.கௌரிசங்கர். மயிலாடுதுறை)

★★ எனக்கு மட்டுமல்ல, அவருடைய புத்தகங்களைப் படித்துப் பார்த்தால் உங்களுக்கும் பிடிக்கும். அண்மையில், 'கடவுள் யார்?' என்ற கேள்விக்கு அவர் சொல்லியிருந்த பதில் எனக்கு மிகவும் பிடித்தது. **கடவுளை அறியும் வாய்ப்புக்கள் இந்த உலகம் பூராவும் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால், நாமோ புராணங்களில் கடவுளைத் தேடு கிறோம். 'சாமியார்கள் கடவுளைக் காட்டுவார்கள்'**

என்று நம்புகிறோம். நம்மைப் பொறுத்தவரை கடவுள் எனப்படுபவர் - கட்டுக் கட்டாக நாம் அடுக்கி வைத்து இருக்கும் பேராசைகள் அனைத்தையும் நிறைவேற்றவல்ல ஒரு சக்தி. மூட்டை மூட்டையாய் நாம் சுமந்துகொண்டிருக்கும் பயங்கள் அனைத்தையும் போக்கவல்ல ஒரு மந்திரவாதி.

ஆசையால் உந்தப்பட்டு 'கடவுளே! எனக்கு இதைக் கொடு; அதைக் கொடு' என்று கேட்கவும், பயத்தால் கலவரப்பட்டு 'காப்பாற்று.... காப்பாற்று' என்று கதறவும் நம்மாலேயே உருவகப்படுத்தப் பட்டிருக்கும், ஒரு பிம்பம்தான் கடவுள். மனதால் ஆசைகளையும், பேராசைகளையும் மட்டுமே உணர முடியும். ஆகவே, கடவுளையும் ஆசை வலைக்குள் கொண்டும் வரும் மனமானது, அவரைக் காணவும், அவரை அடைவதையுமே ஓர் ஆசையாகக் கொண்டு துன்பப்படத் தொடங்குகிறது. உண்மையில் ஆசைகள் நம்மை விட்டு விலகும்போது அங்கு எழுந்தருளும் சக்தியின் பெயர்தான் கடவுள். மரங்கள் பசுமையாகவும், மலர்கள் மணமாகவும், மேகங்கள் வானில் மிதந்து கொண்டும் இருப்பது போலவே இறைவனும் நம்முள்ளே எந்நேரமும் நீக்கமற நிறைந்து இருக்கின்றான்.

**★ ஏழை மக்களுக்கு, முன்பெல்லாம் தங்கம் தான் வாங்க முடியாமல் இருந்தது. ஆனால், இன்று காய்கறிகள் கூட வாங்க முடியவில்லையே! இந்த நிலை என்று மாறும்?**

(- பா.சுகுணா, திருப்பூர்.)

★★ பணம் படைத்தவர்களுக்கு, விலைவாசி என்பது ஒரு விஷயமே கிடையாது. எது, எந்த விலையானாலும் வாங்கும் சக்தி அவர்களுக்கு உண்டு. 'அப்பர் மிடில் கிளாஸ்' என்னும் பிரிவில் கணவன் - மனைவி இருவருமே நல்ல வேலைகளில் இருப்பதால் அவர்களுக்கும் இந்த பிரச்னை பாதிப்பை உண்டாக்குவது இல்லை. இந்த விலைவாசிப் பிரச்னையில் பாதிக்கப் படுவர்கள் யார் என்று பார்த்தால்



நடுத்தர மக்களும், அன்றாடம் கூலி வாங்கும் கீழ்த்தட்டு மக்களும்தான். இந்த விலைவாசி பிரச்னை, ஏதோ நம்நாட்டில் மட்டும்தான் இருப்பதாக நினைத்துக் கொள்ளாதீர்கள். எல்லா நாடுகளிலும் உண்டு. இரண்டு வருடங்களுக்கு முன்பு, ஜிம்பாப்வே நாட்டில் மளிகைப் பொருட்களுக்கும், காய்கறிகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. அதன் காரணமாக விலைவாசி உயர்ந்தது. மக்கள் பணத்தைக் கற்றை கற்றையாய்க் கொண்டு போய்க் கொடுத்து, மளிகைப் பொருள்களை வாங்கி வந்தார்கள். எந்த ஒரு நாட்டிலும் பணவீக்கம் 3அல்லது 4 சதவீதத்துக்குள் இருந்தால், அங்கே விலைவாசி உயராது. ஆனால், இந்தியாவில் இப்போது பணவீக்கம் 17 சதவீதமாய் இருக்கிறது. இந்த 17 சதவீத பணவீக்கத்தை ஒற்றை இலக்க எண்ணுக்குக் கொண்டுவர அரசாங்கம் முயற்சித்துக்கொண்டு இருக்கிறது.

அதே சமயத்தில், பணவீக்கத்தைக் குறைக்கும் பொறுப்பு ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்கிறது. செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். வீண் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். சம்பாதிப்பது எவ்வளவு பணமாக இருந்தாலும் சரி; அதில் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேமிக்க வேண்டும். வீட்டின் பின்புறம் இடம் இருக்குமானால், அங்கே - சிறியதொரு காய்கறித் தோட்டத்தைப் போடலாம். அதேபோல் பள்ளிகளில் மாணவர்களை வைத்தே பெரிய அளவில் காய்கறிகள் பயிரிடலாம். இந்தியாவில் உள்ள மொத்தப் பள்ளிகளும், இதை நடைமுறைக்கு கொண்டுவந்தால், காய்கறிகளுக்குத் தட்டுப்பாடே வராது. தற்போது பிலிப்பைன்ஸ் நாடு இதைப் பின்பற்றி நல்ல பலன் கண்டு வருகிறது. எந்த ஒரு பிரச்னைக்கும் முடிவு மக்களின் கைகளில்தான் இருக்கிறது.

தங்கத்தின் விலையைக்கூட மக்களால் குறைக்க முடியும். உயிர் வாழ்வதற்கு தங்கம் ஒன்றும் அவசியம் கிடையாது என்பதை உணர்ந்து, இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த மக்களும் 5 வருட காலத்துக்கு ஒரு கிராம் தங்கம்கூட வாங்காமல் கட்டுக்கோப்போடு இருந்தால் - தங்கத்தின் விலை பாதியாய்க் குறைந்துவிடும். ஆனால், நம் நாட்டுமக்கள் வாங்காமல் இருக்கமாட்டார்களே! கடன் வாங்கியாவது தங்கம் வாங்கிவிடுவார்களே!

★ இன்றைய உலகில் வாழ்வதற்கு, லட்சங் கள் வேண்டுமா... லட்சியங்கள் வேண்டுமா?

(- ஜி.பாலச்சந்தர், சென்னை -33)

★★ நான் படித்த ஒரு பொன்மொழியைச் சொல்கிறேன். புரிந்து கொள்ளுங்கள்.

''லட்சியம் இல்லாத வாழ்க்கை
முள் இல்லாத
கடிகாரம் போன்றது.
அது -
நின்றாலும் பயனில்லை;
ஓடினாலும் பயனில்லை.''

★ வீட்டுக்குக் கொசுக்கள் வராமல் இருக்க என்ன வழி?

(- பி.பத்ரிநாத், கோவை - 2)

★★ மொத்தம் 4 வழிகள் இருக்கு பத்ரிநாத்.

1. முதலிலேயே வீட்டு அட்ரஸைத் தப்பாய்க் கொடுத்துடணும்.

2. அப்படியே, அது தேடிக் கண்டுபிடிச்சு வந்துட்டாலும் - லைட்டையெல்லாம் ஆஃப் பண்ணிட்டு சத்தம் போடாமே படுத்துக்கணும். அப்பத்தான், "வீட்ல யாரும் இல்லைன்'னு நினைச்சுட்டு கொசு போயிடும்.

3.அப்படியும் ஏமாறாமே, கொசு வீட்டுக்குள்ளே வந்ததுன்னு வையுங்க - பேங்க்ல லோன் வாங்கி - சஹாரா பாலைவனத்தில் 'சைட்' வாங்கி வீட்டைக் கட்டிக்க வேண்டியதுதான்.

4. சஹாரா பாலைவனத்துக்கும் கொசு வந்ததுன்னா - நிலாவில ஒரு ப்ளாட் வாங்க இண்டர்நெட்ல இப்பவே புக் பண்ணி வையுங்க.

'அப்படியும் கொசு வந்தா என்ன பண்றது?'ன்னு கேக்கறீங்களா..? கேள்வி கேட்ட உங்களுக்கும் சரி, பதில் சொன்ன எனக்கும் சரி 100 வயசு முடிஞ்சிருக்கும். அதுக்கப்புறமும் நாம இந்த உலகத்தில் இருந்து கொசுக்கடி வாங்கணுமா என்ன?

★ ஸார்..! நான் என் மனைவியை உயிருக்கு



உயிராய் நேசித்து வருகிறேன். மணம் முடித்து 10 ஆண்டுகள் முடிந்து போயிருந்தாலும் என் அன்பு குறையவில்லை. சமீபத்தில் வார இதழ் ஒன்றில் ஜோக் ஒன்று படித்தேன். மனதுக்கு வேதனையாக இருந்தது. அது, ஜோக் என்றாலும்கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த ஜோக்கை அப்படியே எழுதியிருக்கிறேன். படித்துப் பார்த்துவிட்டு உங்கள் கருத்தைக் கூறுங்கள்.

''ஸார்..! என் பொண்டாட்டியைக் காணோம் ஸார்!''

''யோவ்! இது போலீஸ் ஸ்டேஷன் இல்ல. போஸ்ட் ஆபீஸ்!''

''ஐயோ, சந்தோஷத்துல எங்கே போறதுன்னே தெரியாமே வந்துட்டேன் ஸார்.''

(- எம்.மணிகண்டன், பொள்ளாச்சி.)

★★ இது மாதிரியான ஜோக்குகள், காலம் காலமாய் வந்து கொண்டிருந்தாலும் கணவன் - மனைவி என்ற உறவில், இரண்டு பேர்களில் யார் ஒருவர் இல்லாமல் போனாலும், நிலைமை எப்படியிருக்கும் என்பதைக் கவியரசு கண்ணதாசன் அவர்கள் இரண்டே வரிகளில் சொல்லிவிட்டு போய்விட்டார். அவர் சொன்னதுதான் உண்மையானது; சத்தியமானது.

அந்த இரண்டு வரிகள் இதோ:

''தந்தை வாழ்வு முடிந்து போனால் தாயின் மஞ்சள் நிலைப்பது இல்லை.

தாயின் வாழ்வு முடிந்து போனால் தந்தைக்கென்று யாரும் இல்லை.''

★ புரிந்தது; புரியாதது - இதற்கு உதாரணமாக எதைச் சொல்லலாம்?

(- டி.காசிராஜன், நடுவட்டம் - ஊட்டி.)

★★ ''எதுவுமே புரியாத போது
வாழ்க்கை
தொடங்குகிறது.
எல்லாம் புரியும் போது
வாழ்க்கை
முடிந்து விடுகிறது.''

★ 'கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை. தெய்வத்தோடும் மக்களோடும்தான் கூட்டணி என்று சொல்லி வந்த விஜயகாந்த் இப்போது அ.தி.மு.க. வோடு கூட்டணி வைத்துக் கொண்டாரே! இது பற்றி உங்கள் கருத்து என்ன?

(-த.ஜெயகாந்தன், புன்செய் புள்ளியம்பட்டி)

★★ ஜெயலலிதாவை அவர் தெய்வமாக நினைத்து இருக்கலாம்.

★ காதல் தோல்வி அடைந்துவிட்டால் ஆண்கள் மட்டும் கவிஞர்களாய் மாறுவது ஏன்?

(- தே.மலர்மன்னன், காரைக்குடி.)

★★ ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல் ஏற்படும்போது - பெண் பர்ஸைப் பார்க்கிறாள். ஆண், அந்தப் பெண்ணின் இயத்தைப் பார்க்கிறான். காதல், தோல்வியில் முடியும் போது அவன் தாடி வளர்த்துக் கவிஞனாக மாறுவது இதனால்தான்.

''இதோ! அப்படிப்பட்ட ஒரு காதல் கவிஞனின் கவிதை.

அவள் சொன்ன பொய்களிலேயே
எனக்குப் பிடித்த பொய்.
''ஐ.லவ்.யூ''

★அரசியல்வாதிகள் எவ்வளவு பெரிய ஊழலைச் செய்து இருந்தாலும், கடைசியில் கோர்ட் நடவடிக்கைகளிலிருந்து, தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்களே எப்படி?

(- பி.தெய்வநாயகம், புதுப்பேட்டை.)

★★ இரவு நேரம். ஒரு கிராமத்தின் தென்னந்தோப்பு. திருடன் ஒருவன் தோப்பில் புகுந்து தேங்காய் பறிக்க மரம் ஒன்றில் ஏறினான். தோப்பில் இருந்த காவலாளி அதைப் பார்த்துவிட்டு சத்தம் போட - கிராமமே கூடி விட்டது. பஞ்சாயத்து தலைவரும் வந்து டார்ச் அடித்துப் பார்த்தார்.



ருடன் மரத்திலிருந்து மெதுவாய் இறங்கிக் கொண்டி ந்தான்.

தலைவர் சத்தம் போட்டார்.

''ஏண்டா..! தேங்காய் திருடவா வந்தே...?''

''இல்லீங்கய்யா..! கருவேப்பிலை பறிக்க வந்தேன்.''

''அதுக்கு ஏண்டா தென்னை மரத்து மேல ஏறினே?''

''அதான் கீழே இறங்கறேனே...!'' என்று சொல்லிக் கொண்டே கீழே குதித்து இருட்டில் தப்பியோடி விட்டான்.

## பரிசுக்குரிய கேள்வி

★ 'விதி' என்று ஒன்று இருக்கிறதா?

(- கே.வேல்ராஜ், கோவில்பட்டி.)

★★ எங்கேயோ... எப்போதோ படித்தது. இப்போது நினைவுக்கு வருகிறது. மாவீரன் நெப்போலியன் - போரில் தோல்வியுற்று, சிறை பிடிக்கப்பட்டு செயிண்ட் ஹெலினா தீவில் சிறை வைக்கப்பட்டான். அவனைப் பார்த்துப் பேச நண்பர்களும் உறவினர்களும் அனுமதிக்கப் பட்டனர். அப்போது நெப்போலியனைப் பார்க்க வந்த ஒரு நெருங்கிய நண்பர், அவனிடம் பேசிவிட்டு, சிறையில் பொழுது போவதற்காக செஸ் போர்டையும், செஸ் விளையாட்டுக் காய்களையும் பரிசாகக் கொடுத்துவிட்டுப் போனார். நெப்போலியன் அதை வைத்துத் தனியாகவே விளையாடி மகிழ்ந்து நேரத்தை செலவிட்டுக்கொண்டு இருந்தான். தண்டனைக் காலம் முடிவதற்குள் இறந்தும் போனான். 1821 - ம் ஆண்டு நெப்போலியன் இறந்தான். அதற்குப் பிறகு சில ஆண்டுகள் கழித்து, அந்த செஸ்போர்டும் காய்களும் ஏலத்தில் விடப்பட்டன. ஒரு பெரிய பணக்காரர் அதை ஏலத்தில் எடுத்தார். அவருடைய காலத்திற்குப் பிறகு அது மறு ஏலம் விடப்பட்டு - வேறொருவரின் கைக்குப் போயிற்று. பிறகு, பலர் கைகளுக்கு மாறியது. அண்மையில், அதை ஏலம்

எடுத்தவர் வீட்டுக்குப் போனதும் ஒரு செஸ் காயைத் எடுத்து திருகியபோது - அதன் பின்பக்கம் சட்டென்று திறந்து கொண்டது. அதற்குள், ஹெலினா தீவிலிருந்து தப்பித்துச் செல்வதற்கு வழிகாட்டக் கூடிய வரைபடம் ஒன்று இருந்தது. நெப்போலியன் மட்டும், அதைத் திறந்து பார்த்து இருந்தால் தப்பித்துப் போயிருக்க முடியும். அப்படியே தப்பியிருந்தால் இப்போது நாம் படித்துக் கொண்டிருக்கும் சரித்திரமும் மாறியிருக்கும். இப்போது சொல்லுங்கள்... 'விதி' என்று ஒன்று இருக்கிறதா இல்லையா?

★ கல்யாணம் முடிந்து பெண்கள் புருஷன் வீடு செல்லும்போது அழுவது ஏன்?

(- எஸ்.சிவசைலம், கும்பகோணம்.)

★★ ஹைய்யோ... ஹைய்யோ..! இவ்வளவு அப்பாவியா இருக்கீங்களே! கல்யாணத்தின் போது பொண்ணு அழுதுகிட்டு இருந்ததுன்னா அதுவே அவளுக்குக் கடைசி அழுகை. மாப்பிள்ளை சிரிச்சுக்கிட்டு இருந்தான்னா அதுவே அவனுக்குக் கடைசி சிரிப்பு.

இந்தப் பகுதிக்குக் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:-

**ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்**

க்ரைம் நாவல்,
ஜீயே பப்ளிகேஷன்ஸ்,
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 5.

## அர்த்தமுள்ள அரட்டை

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் நடைபெற்றுக் கொண்டிருந்த உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் மேட்சை, சிப்ஸை மென்றபடி பார்த்துக்கொண்டிருந்த விவேக்கிற்கு முன்பாய் வந்து நின்றாள் ரூபலா. கையில் வைத்து இருந்த பிளாஸ்டிக் வலைக் கூடையில் மளிகைச் சாமான்கள்.

''என்ன ரூபி... பர்சேஸ் முடிஞ்சுதா..?''

''ம்.. முடிஞ்சுது...'' என்று சொல்லி சலித்தவாறே சோபாவில் விவேக்கை ஒட்டி உட்கார்ந்தாள்.

''என்ன ரூபி... போகும்போது சந்தோஷமாய்ப்

## - ராஜேஷ்குமார் -

போனே... வரும் போது ரெண்டு டன் டயர்டோடு வந்திருக்கே... என்ன விஷயம்..? யாராவது ஏதாவது சொன்னாங்களா?''

''இல்லீங்க...''

''பின்னே என்ன..?''

''மனசுக்கு வருத்தமான நிகழ்ச்சி ஒண்ணு நடந்தது''

விவேக் வியப்பாய் ரூபலாவைப் பார்த்தான். ''அப்படி என்ன நடந்தது..?''

''டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்ல பர்ச்சேஸ் பண்ணிட்டு வெளியே வரும்போது, காலேஜ்ல என்னோடு படிச்ச என் ஃப்ரண்ட் சரண்யாவோட அம்மாவைப் பார்த்தேன். அந்த அம்மா ரோட்டோரமாய் நின்னுட்டு இருந்தாங்க. காலேஜ் டேஸ்ல நான், சரண்யா வீட்டுக்குப் போகும் போதெல்லாம் அந்த அம்மா என்னோட கன்னத்தைத் தடவிவிட்டு பிரியமாய்ப் பேசுவாங்க. இப்போ அந்த அம்மாவுக்கு வயசாகி யிருந்தாலும், முகம் மட்டும் அப்படியே ஜாடை மாறாமல் இருந்தது. இத்தனை வருஷம் கழிச்சு அந்த அம்மாவைப் பார்த்ததும் எனக்கு சந்தோஷமாய் இருந்தது. போய் எதிர்ல நின்னேன்.''

''உன்னைப் பார்த்ததும் பரவசமாகியிருப் பாங்களே

''அதுதான் இல்லை...''

''என்னதான் ஆச்சு..?''

''நான் அந்தம்மா எதிர்ல போய் நின்னேன். என்னை பார்த்தாங்க.... பார்த்தாங்க... பார்த்துட்டே இருந்தாங் எனக்கு ஒரு மாதிரி ஆயிடுச்சு... 'என்னம்மா... இப்படி பார்க்கறீங்க... என்னை உங்களுக்கு தெரியலையா'ன்னு கேட்டேன்... அதுக்கு அவங்க திருதிருன்னு முழிச்சு பார்த்துட்டு 'நீ யார்'ன்னு என்னைக் கேட்டாங்க. நான் அப்படியே திகைச்சுப் போயிட்டேன். 'என்னம்மா இப்படி கேட்கறீங்க.... நான்தான் ரூபலா.. உங்க பொண்ணு சரண்யாவும் நானும் ஒரே காலேஜ்ல படிச்சோம். உங்க வீட்டுக்கு அடிக்கடி நான் வருவேன். என்னை மறந்துட்டீங்களா?'ன்னு கேட்டேன்.''

''ம்... அப்புறம்...''

''அதுக்கு அந்த அம்மா... என்னை உற்றுப் பார்த்துட்டு 'நீ யார்ன்னு எனக்குத் தெரியலையே...! இதுக்கு முந்தி நான் உன்னைப் பார்த்தது கூட இல்லையே'ன்னு சொல்லிட்டாங்க... எனக்கு என்ன பண்றதுன்னு தெரியாமே முழிச்சுட்டிருக்கும்போதே நல்ல வேளையாய் சரண்யா வந்துட்டா. என்னைப் பார்த்ததும் 'ஏய் ரூபி எப்படியிருக்கே'ன்னு கட்டிப் பிடிச்சுட்டா... 'நான் எப்படியிருக்கேன்றத அப்புறமா சொல்றேன். மொதல்ல உன்னோட அம்மாவைப்பத்திச் சொல்லு... அம்மா ஏன் இப்படி இருக்காங்க...? என்னை அவங்களுக்கு சுத்தமாய் அடையாளம் தெரியலை... என்னாச்சு அவங் களுக்கு?'ன்னு நான் கேட்டதும் சரண்யாவோட முகம் அடியோடு மாறிப் போச்சு. 'உன்னையும் அம்மாவுக்குத் தெரியலையா'ன்னு வருத்தப்பட்டா. அப்புறம் விஷயத் தைச் சொன்னா. சரண்யாவோட அம்மாவுக்கு இப்போது அறுபது வயசாகுதாம். ஆறுமாசத்துக்கு முன்னாடி - மூக்குக் கண்ணாடியை மறந்து வெச்சுடறது, கதவைத் தாழ்ப்பாள் போட மறந்துடறது, குடியிருக்கிற தெருவோட பேரை மறந்துடறது, தன்னோட பேரையே மறந்துடறது மாதிரியான ஞாபகமறதி நோயால கஷ்டப் பட்டாங்களாம். டாக்டர்கிட்டே கொண்டு போய்க் காட்டினாங்களாம். டாக்டர் டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டு 'இது ஓல்ட் ஏஜ்ல வர்ற ஞாபகமறதிப் பிரச்னை. இதை மருந்துகளால



குணப்படுத்த முடியாது'ன்னு சொல்லிட்டாராம். மொதல்ல சிறிய அளவில் இருந்த ஞாபகமறதி நோய் கொஞ்சம் கொஞ்சமாய் டெவலப்பாகி, நெருங்கின சொந்தக்காரர்களோட பேர்களையெல்லாம் ஒவ்வொண்ணா மறக்கிற நிலைமைக்கு வந்துருச்சாம்.''

''ஓ...! அந்த லிஸ்ட்ல...உன்னோட பேரும் இருக்கு...''

''கேக்கும்போதே மனசுக்கு கஷ்டமாயிருக்கு... நம்ம வீட்டுக்கு எதிர்ல இருக்கிற பாட்டிக்கு 80 வயசாகுது. அந்தப் பாட்டிக்கு இந்த 'மெமரி லாஸ்' பிரச்னையே இல்லையே... எல்லாரையும் தெரியுதே... சரண்யாவோட அம்மாவுக்கு மட்டும் ஏன் இந்த மெமரி லாஸ் வந்திருக்கு...?''

''ரூபி..! வயதாயிட்ட எல்லார்க்கும் ஞாபக மறதி நோய் வந்துடாது. 100 பேர்ல ஒரு 5 அல்லது 6 பேர்க்கு வரலாம். இது மூளை சம்பந்தப்பட்ட விஷயம். சரண்யாவோட அம்மாவுக்கு, சிறு வயதிலேயே ஏதாவது நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்னை வந்து இருக்கலாம். மொதல்ல சின்னச் சின்னதாய் இந்தப் பிரச்னை ஆரம்பமாகும். இதை மருத்துவத்துல 'எம்.சி.ஐ'(MCI)ன்னு சொல்லு வாங்க. இதன் விரிவாக்கம் என்னான்னா மைல்ட் காக்னிடிவ் இம்பயர்மெண்ட் (MILD COGNITIVE IMPAIR-MENT). அதாவது சிறிய அளவில் ஏற்படற ஞாபகமறதி நோய். இந்த 'எம்.சி.ஐ', நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாய் டெவலப்பாகி **'அல்ஜெமர்ஸ்' (ALZHEIMERS)** எனப்படுகிற ஞாபகமறதி பிரச்னையாக உருவாகலாம். இன்னிக்கு வயதானவர்களின் மத்தியில் அல்ஜெமர் என்கிற ஞாபகமறதி நோய்தான் பரவலாய் காணப்படுது.''

ரூபலா குறுக்கிட்டாள்.

''ஒருத்தர்க்கு வந்து இருக்கிறது 'எம்.சி.ஐ' யா அல்லது அல்ஜெமர்' நோயான்னு எப்படிக் கண்டுபிடிக்கிறது..?''

''தைராய்ட் சுரப்பியோட பணி, வைட்டமின் பி-12 இன் குறைபாடு - இந்த ரெண்டையும் சோதனை, பண்ணிப் பார்த்தாலே, அது 'எம்.சி.ஐ'யா அல்ஜெமரான்னு தெரிஞ்சுடும். பெரும்பாலும், அல்ஜெமர் மறதி நோய் - 65 வயதுக்கு மேல் வருவதாக மருத்துவம் கண்டுபிடித்துள்ளது. இந்தியாவில் 100 இந்தியர்களில் 3பேர்க்கு. இந்த நோய் உள்ளதாகப் புள்ளி விபரங்கள்

கூறுகின்றன. 2006 - ம் ஆண்டு டெல்லியில் உள் நிம்ஸ் (NIMS) என்ற மருத்துவ அமைப்பில், அல்ஜெம மறதி நோய்க்கான காரணத்தைக் கண்டறிய ஒரு பிரி தொடங்கப்பட்டது. நரம்பியல் மற்றும் மனோதத்து முறை, ஸ்கேன் மூலம் அறிதல் போன்றவற்றைத் தீவி ஆராய்ச்சி செய்தனர்.''

''அது சரிங்க... இந்த ஞாகபமறதி நோயைக் குணப்படுத்த முடியாதா..?''

''பாதிப்பு, ஆரம்பநிலையில் இருந்தால் சரியான பயிற்சிகள் மூலம் ஓரளவுக்குக் குணப்படுத் திடலாம். இல்லேன்னா அது 'டிமென்சியா'வில் போய் முடியும்.''

''அது என்ன டிமென்சியா?''

''டிமென்சியாங்கிறது முழு மறதி நோய். அல்ஜெமர் நோய் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாகி, மூளையில் இருக்கிற உயிர் அணுக்கள் முற்றிலுமாய் அழிந்து விடுவதுதான் டிமென்சியா. இந்தியாவில், ஏறக்குறைய 3 கோடி மக்கள், இந்த நோயால் அவதிப்பட்டுகிட்டு இருக்காங்க.''

''இந்த நோய் வந்தவங்களோட செயல்பாடுகள் எப்படி இருக்கும்?''

''அவங்களோட செயல்பாடுகளில் நிறைய குளறுபடிகள் இருக்கும். நல்ல வெய்யில் அடிச்சிட்டிருக்கும்போது, குளிருதுன்னு ஸ்வெட்டர் எடுத்துப் போட்டுக்குவாங்க. கையில் சாவி எடுப்பாங்க. அடுத்த விநாடியே இந்தச் சாவியை எதுக்காக எடுத்தோம்ன்னு யோசிப்பாங்க. சிலபேர்க்கு. எங்கே இருக்கோம்ன்னு தெரியாது. பழகிய முகமே, ஒரு புதிய முகம் மாதிரி தெரிய - நீங்க யார்ன்னு கேக்கிறது. காப்பி குடித்த டம்ளரை வாஷ்பேசினில் வைக்காமே ஃப்ரிஜ்ஜைத் திறந்து வைக்கிறது. திடீர்ன்னு, இது ராத்திரியா... பகலான்னு குழம்பிப் போறது. காலைவேளைகளில் பல் தேய்க்கவும், குளிக்கவும் மறந்து போறது. 500 ரூபாய் நோட்டைக் கையில் வைத்து இருந்தாலும், அது பணம் என்பதை மறந்து போவது. பழமொழிகளை மாற்றி மாற்றிப் பேசறது. ரோஜாவையும் மற்றப் பூக்களையும் பிரித்துப் பார்க்கத் தோன்றாமல், ஒரே மாதிரியாய் பார்ப்பது. ஒரு வாக்கியத்தைப் பேசிக்கொண்டு இருக்கும்போது. நடுநடுவே சில



வார்த்தைகளை மறந்து போவது. அப்படி மறந்து போவதால், அந்த இடத்தில் - தவறான வார்த்தைகளைப் பேசுவது. வீட்டுக்குள் யாராவது புதிய மனிதர் வந்தால், ரொம்பநாள் பழகியவர்போல பேசிக்கொண்டு இருப்பது. சமீபத்தில், வீட்டில் நடந்த கல்யாணம், கிருகப்பிரவேசம் போன்ற முக்கியமான நிகழ்ச்சிகளை மறந்து போறது. மாதம், தேதிகளை மறந்து போவது. வீட்டுக்குப் போகும் வழியை மறப்பது. பக்கத்து வீட்டுக்காரரை சந்தேகத்தோடு பார்ப்பது. இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டு போகலாம்.''

''இந்த டிமென்சியா நோயைக் குணப்படுத்தவே முடியாதா?''

''முடியாதுன்னு சொல்லுது மருத்துவம். காரணம் - 'முதுமை' என்கிற விஷயமே ஒரு நோய்தான். இந்த டிமென்சியா நோய் ஏற்பட்டவர்களின் மூளையானது. உயிர் அணுக்கள் அழிந்து சுருங்கிப் போயிருக்கும். ஒரு வாழைப்பழத்தோல் சுருங்கிப் போனால் - அது எப்படி தன்னுடைய பழைய நிலைமைக்குத் திரும்பாதோ, அதைப் போலத்தான் - சுருங்கிப் போன மூளையும் பழைய நிலைக்கு மாறாது. அது தவிர இந்நோயின் தாக்குதலுக்கு உட்பட்டவர்கள் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமாய் பாதிக்கப்படறாங்க. அவர்களது மூளையின் எந்தப் பகுதி பாதிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து. அவங்கப் பாதிப்பு உள்ளது. டிமென்சியாவின் முதல் அறிகுறியே பழக்கப்பட்ட நபர்களையும், அறிமுகமான இடங்களையும் மறந்து போவது தான்...''

''சரண்யாவோட அம்மாவுக்கு இப்போ டிமென்சியாவின் ஆரம்பம்ன்னு சொல்ல வர்றீங்களா?''

''நிச்சயமாய்...''

''பாவங்க... அந்த அம்மா...! என் மேல எவ்வளவு பிரியம் வெச்சிருந்தாங்க தெரியுமா..? வீட்டுக்குப் போனா, சாப்பிடாமே விடமாட்டாங்க... 'ஒரு அஞ்சு நிமிஷம் உட்கார் ரூபி... ரவா கேசரி பண்ணித் தர்றேன். நான் ரவா கேசரி பண்ணினா உனக்குப் பிடிக்குமாமே'ன்னு சொல்லி, கட்டாயப்படுத்தி உட்காரவெச்சு பண்ணித்தருவாங்க... இன்னிக்கு அந்த அம்மா, என்னைப் பார்த்து 'நீ யார்'ன்னு கேட்டப்ப என்னோட மனசே நொறுங்கிப் போச்சு...''

பேசப் பேச ரூபலாவின் கண்களில் நீர் பளபளத்தது.

விவேக் அவளைத் தேற்றினான்.

"இதோ பார் ரூபி... இந்த உலகத்தில் இருக்கிற எல்லா பொருள்களுக்கும் - தேய்மானங்களும் அழிவுகளும் உண்டு. காளஹஸ்தி கோயில், கோபுரம் - 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. அந்தக் கோயிலும், ஒரு நாள் இடிந்து விழுந்தது. இறைவன் குடியிருக்கும் கோயிலுக்கே அந்த நிலைமை என்றால் மனிதர்களைப்பற்றிச் சொல்லணுமா... என்ன..? உடலில் உயிர் இருக்கும் நாட்கள் வரை நோய்களோடு போராடித்தான் வாழ வேண்டும்."

"அல்ஜைமர், டிமென்சியா - இது மாதிரியான பிரச்னை உள்ளவங்களுக்கு, ஞாபகசக்தியைத் தூண்டும் மாத்திரைகளைக் கொடுத்தால், பலன் கிடைக்குமா..?"

"ரூபி..! மார்க்கெட்டில் உள்ள ஞாபகசக்தி மாத்திரைகளைப்பற்றி, டாக்டர்ஸ் என்ன சொல்றாங்க தெரியுமா..?"

"என்ன சொல்றாங்க...?"

"அப்படிப்பட்ட மாத்திரைகளே உலகத்தில் இல்லையாம். பட்டுப்போன ஒரு செடிக்கு - எவ்வளவுதான் தண்ணியை ஊற்றி உரம் போட்டாலும் அது தழைக்காது என்பது எவ்வளவு உண்மையோ... அதே நிலைமைதான் ஞாபகசக்தி மாத்திரைகளுக்கும். அது ஒரு வியாபாரம். அவ்வளவுதான். ஆனா, அமெரிக்காவின் மின்னே சோட்டா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு டாக்டர் இந்த ஞாபக மறதி நோயை வராமல் தடுக்க ஒரு டிப்ஸ் கொடுத்திருக்கார்."

"அது என்ன டிப்ஸ்..?"

"வயதாக வயதாக மனசை இளமையாய் வெச்சுக்கணுமாம். ரத்த அழுத்தம், நீரிழிவு இருந்தா அது கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கணுமாம். புகை பிடித்தல், மது அருந்துதல் கூடவே கூடாதாம். உடலோட எடையை சீராய் வெச்சுக்கணுமாம். எல்லாத்தைக் காட்டிலும், ஒருத்தர்க்கு அறுபது வயசாயிட்டா அவர் தனக்கு 60 வயசு ஆயிடுச்சுன்னு சொல்லக்கூடாதாம்..."

"பின்னே என்ன சொல்றதாம்?"

"ஐ'யாம் நாட் 60 இயர்ஸ் ஓல்டு.
ஐ'யாம் ஸ்வீட் 16 வித்



44 இயர்ஸ் எக்ஸ்பிரியன்ஸ்"

"தமிழ்ல சொல்லுங்க..."

விவேக் மேற்கண்ட ஆங்கில வரிகளை தமிழ்ப்படுத்திச் சொல்வதற்குள் -

வாசகர்களே நீங்கள் அதை தமிழ்படுத்தி கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

சரியான, அழகான, 5 மொழி பெயர்ப்பு வாசகங்களுக்குப் புத்தகங்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**அர்த்தமுள்ள அரட்டை,**
**க்ரைம் நாவல்,**
**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.

**இனி சென்றமாத 'அர்த்தமுள்ள அரட்டை' யில் கேட்கப்பட்ட கேள்வியும் அதற்கான பதிலும்.**

**கேள்வி:** 'விக்கி லீக்' இணையதளத்தின் நிறுவனர் அசாங்கே அமெரிக்காவுக்கு எதிராய்ச் செயல்பட்டாலும், தென் அமெரிக்காவில் உள்ள ஒரு நாடு அசாங்கேவுக்கு நிரந்தர அடைக்கலம் தர உத்தரவாதம் கொடுத்துள்ளது. அது எந்த நாடு?

**பதில் :** ஈக்வடார் நாடு.

**சரியான பதில் எழுதிய 5 வாசகர்கள்:**

1. எல்.வி. ஹரிமித்ரன் - பெங்களூர் - 46.
2. மி.பா. ராசாராம் - குடியாத்தம்.
3. எஸ். பாலச்சந்திரன் - பாலக்காடு (கேரளா)
4. ஆர். வசந்தி ராஜன் - போத்தனூர்.
5. கவிஞர். பூ மாறன் - ஸ்ரீ ரங்கம்.




**ஒரு மினி கேள்வியும் - ஒரு மினி பதிலும்:**

**கேள்வி:** 2012 ஆம் ஆண்டில், இந்தியாவின் அரிசித் தேவை எவ்வளவு என்பதை உணவுத்துறை மதிப்பிட்டுள்ளது. அது எவ்வளவு என்று தெரியுமா?

**பதில்:** 2012 ஆம் ஆண்டில், இந்தியாவின் அரிசித் தேவை, **12 கோடியே 80 லட்சம் டன்னாக** இருக்கும் என்றும், அந்த இலக்கை எட்ட ஹெக்டேர்க்கு **3 ஆயிரம் கிலோ** உற்பத்திச் செய்யவேண்டும் என்றும் இந்திய அரசின் உணவுத்துறை தீர்மானித்துள்ளது.




**சு**ப்ராஜா நிலைக்கண்ணாடிக்கு முன்னால் நின்று ஸ்டிக்கர் பொட்டை நெற்றியின் மையம் பார்த்துப் பொருத்திக் கொண்டிருந்த போது, அவளுடைய ப்ளாக்பெர்ரி செல்ஃபோன் - பியானோ இசையை ரிங்டோனாக வெளியிட்டது.

எடுத்து, அழைப்பது யார் என்று பார்த்தாள்.

அவளுடைய தோழி மனோரஞ்சிதம். உற்சாகத் துள்ளலோடு குரல் கொடுத்தாள்.

''குட் மார்னிங் மனோ...''

''அதே குட்மார்னிங்... உனக்கும்....''

''என்ன இவ்வளவு காலையில் ஃபோன்..?''

''ஏன்... பண்ணக்கூடாதா?''

''பார்த்தியா... சண்டைக்கு வர்றே...! என்னிக்கும் இல்லாத அதிசமாய் - காலையில் ஏழு மணிக்கெல்லாம் ஃபோன் பண்றியே! அதான் ஏன்னுகேட்டேன்...''

''காரணம் இல்லாமே ஃபோன் பண்ணுவேனா?''

''என்ன காரணம்?''

''காரணத்தை நான் சொல்லமாட்டேன்... நீதான் கண்டுபிடிக்கணும்''

''இதோ பார் மனோ..! உன்னோட மனசுக்குள்ளே என்ன இருக்குன்னு கண்டுபிடிக்கிற அளவுக்கு நான்

ஒண்ணும் அறிவு ஜீவி கிடையாது. ஒரு பேங்கில் கம்ப்யூட்டர்க்கு முன்னாடி. டென்ஷனோடு உட்கார்ந்து வேலை பார்க்கிற ஒரு சாதாரண ஸ்டாஃப். இவ்வளவு காலையில் ஃபோன் பண்ணினதுக்கு என்ன காரணம்ன்னு, நீயே சொல்லிடறது பெட்டர்."

"நோ சான்ஸ்..! நான் காரணத்தைச் சொன்னா, அது நம்ம அஞ்சு வருஷ ஃப்ரண்ட்ஷிப்புக்கு மெகா சேவுலம்... அதுக்கப்புறம் நீயும் நானும் தோழிகளாய் இருக்கவே லாயக்கில்லை..."

"என்ன... மனோ... பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசிட்டிருக்கே...? உனக்கு இன்னிக்கு என்னாச்சு..?"

"எனக்கு ஒண்ணும் ஆகலை... உன்கிட்டேதான் ஏதோ பிரச்னை...! போய் மொதல்ல ஒரு நியூராலிஜிஸ்ட் டாக்டரைப் பாரு... ஒரு சி.டி. ஸ்கேன் எடு. எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடு. டாக்டர்கிட்ட குடு. உனக்கு என்ன பிரச்னைன்னு அவர் சொல்வார்." மறுமுனையில் மனோரஞ்சிதம் பொரிந்து தள்ள, சுப்ரஜா குறுக்கிட்டாள்.

"சரி... சரி.. கோபப்படாதே... எனக்கு ஒரு அரைமணி நேரம் டயம் கொடு..."

"எதுக்கு..?"

"காரணத்தைக் கண்டுபிடிக்கத்தான்..."

"அரைமணி நேரத்துக்குள்ள கண்டுபிடிக்கலைன்னா?"

"என்னை எப்படி வேணும்ன்னாலும் திட்டு..."

"திட்டமாட்டேன்..."

"பின்னே..?"

"கட்"

"கட்டா..?"

"ம்... உனக்கும் எனக்கும் இருக்கிற ஃப்ரண்ட்ஷிப் - ரெண்டு துண்டாகி உன் வீட்டு வாசல்ல கிடக்கும்..."

"ஏண்டி மனோ... இப்படியெல்லாம் பேசறே?"

"அப்படித்தான் பேசுவேன். சரியா அரைமணிநேரம் கழிச்சு, நீ எனக்கு ஃபோன் பண்ணணும். காரணத்தைச் சொல்லணும்..."

"சொல்லிடறேன்...!"

"பார்க்கலாம்..." மனோரஞ்சிதம் இணைப்பைத் துண்டித்துவிட, சுப்ரஜாவும் தன் செல்ஃபோனை அணைத்தாள்.

ஹால் சோபாவில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டு இருந்த - சுப்ரஜாவின் அப்பா அருணகிரி - பேப்பரைத் தாழ்த்திக்கொண்டு கேட்டார்.



"ஃபோன்ல யாரம்மா... உன்னோட ஃப்ரண்ட் மனோரஞ்சிதமா?"

"ஆமாப்பா... காலங்கார்த்தால சண்டைக்கு வர்றா."

அருணகிரி சிரித்தார்.

"அவ என்னிக்குமே சண்டைக் கோழிதான்... ஆரம்பவும் தைரியமான பொண்ணும்மா... இன்னிக்கு பேப்பர்ல அருமையான ஆர்ட்டிக்கிள் ஒண்ணை எழுதியிருக்கா... படிச்சுப் பார்த்தியா..?"

"இல்லேப்பா..."

"என்னம்மா... நீ...? உன்னோட ஃப்ரண்ட் மனோரஞ்சிதம். இன்னிக்கு இருக்கிற நிலவரப்படி நெம்பர் ஒன்' பிரஸ் ரிப்போர்ட்டர். புத்திசாலியான க்ரிட்டிக். இந்தச் சமூகத்தில் நடக்கிற எந்த ஒரு அநியாயத்தையும் தன் பேனாவாலேயே குத்திக் காட்டற தைரியசாலி. அது, அரசியல் அவலமாய் இருந்தாலும் சரி... சினிமா சீரழிவாய் இருந்தாலும் சரி... அந்த சம்பவம் சம்பந்தப்பட்ட எல்லா உண்மைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவர்ற அதிரடி ஜர்னலிஸ்ட்.... அப்படிப்பட்ட பொண்ணுக்கு ஃப்ரண்டாய் இருக்கிற நீ - அவ எழுதற கட்டுரைகளைப் படிக்க வேண்டாமா?"

"அப்பா..!"

"என்ன..?"

"ஒரு உண்மையைச் சொல்லட்டுமா..?"

"சொல்லு..."

"என்னோட ஃப்ரண்ட் மனோரஞ்சிதம் ஒரு க்ரிட்டிக்காகவும் ஜர்னலிஸ்ட்டாவும் இருக்கிறது எனக்குப் பிடிக்கவேயில்லை. இந்தச் சமுதாயத்தைச் சுத்தப்படுத்தறேன்னு சொல்லி, எல்லாக் குப்பைகளையும் கிளறிக் கிளறிப் பார்த்துட்டிருக்கா. அவ எழுதற எந்த ஆர்ட்டிக்கிளைப் படிச்சாலும் சரி, எனக்கு டென்ஷன் ஏறுது. அன்னிக்கு பூராவும் என்னால பேங்க்ல உட்கார்ந்து வேலை பார்க்க முடிறதே இல்லை."

"இப்ப கடைசியாய் ஒரு வார்த்தை சொன்னியே.... இதுதான் மனோவோட பலம்... அவ எழுதற எழுத்தோட வீரியம்... அதுவும் இன்னிக்கு மனோ எழுதியிருக்கிற ஆர்ட்டிக்கள் சூபர்ப்... நீ படிச்சுப்பாரேன்..."

"அய்யோ அப்பா..! இன்னிக்கு பேங்க்ல எனக்கு ஆடிட்டிங். ஒன்பது மணிக்கெல்லாம் சீட்ல இருக்கணும். இல்லேன்னா... மானேஜர் முகத்தை, கண் கொண்டு பார்க்க முடியாது. இப்பவே கிளம்பினாத்தான் ரெண்டு பஸ்களை மிஸ் பண்ணாமே பிடிச்சு - பேங்க் போய்ச் சேர

முடியும்... நான் இன்னும் டிஃபன் வேற சாப்பிடலை
என்று சொன்ன சுப்ரஜா சமையலறையைப் பார்த்
குரல் கொடுத்தாள்.

''அம்மா..! டிஃபன் ரெடியா..?''

''ரெடியோ ரெடி... உப்புமாவைத் தட்டுல போட்
வெச்சிருக்கேன். சாப்பிடு. நீ சாப்பிட்டு முடிக்கிறது
குள்ளே, உன்னோட லஞ்ச் பாக்ஸ் ரெடியாயிடும்.''

''மத்தியானத்துக்கு என்ன லஞ்ச்..?''

''தக்காளி சாதம், தயிர் சாதம்...''

''தயிர் சாதத்துக்குள்ளே மாவடு ஒண்ணை
வெச்சடு...''

''கூடவே, ஒரு மோர் மிளகாயையும் வெச்சடறேன்
போதுமா?''

''போதும்... போதும்...''

சுப்ரஜா மறுபடியும் நிலைக்கண்ணாடிக்கு முன்பாய்
நின்று, சிலும்பிக் கொண்டிருந்த தலைமுடியைச் சீப்பால்
சீவி சரிப்படுத்திக்கொண்டு, டைனிங் டேபிளை
நோக்கிப் போனாள், பொறுத்துக் கொள்ளக்கூடிய
சூட்டோடு உப்புமா காத்திருந்தது. உட்கார்ந்து இரண்டு
வாய்ச் சாப்பிட்டிருப்பாள், செல்ஃபோன் மறுபடியும்
கூப்பிட்டது.

எடுத்துப் பார்த்தாள்.

மனோரஞ்சிதம்தான்.

காதுக்கு ஒற்றி... பேசினாள்,

''ஹாய்... மனோ..!''

''என்ன ஞாபகம் வந்ததா?''

''எது..?''

''காரணம்...!''

''யோசிச்சுக்கிட்டே இருக்கேன்...''

''உன்னை இழுத்துப் போட்டு அடிக்கலாம்ன்னு
இருக்கு...''

''இதோ பார் மனோ...! இன்னிக்கு எனக்கு பேங்கல
ஆடிட்டிங். இப்போ, என்னோட மைண்ட்ல அது
மட்டும்தான் இருக்கு.... நீ எதுக்காக எனக்கு ஃபோன்
பண்ணினேன்னு யோசனை செய்ய நேரம் இல்லை. நீயே
சொல்லிடேன்...!''

''மாட்டேன்...! நீதான் சொல்லணும்''

''என்னை ஏண்டி இப்படிப் படுத்தறே..?''

''அப்படித்தான் படுத்துவேன்..! நீ அரைமணி நேரம்
டயம் கேட்டிருக்கே... அதுக்குள்ளே நீ ஃபோன் பண்ணி
சொல்லணும். இல்லேன்னா...''



''இல்லேன்னா... என்ன பண்ணுவே..?''

''என்ன பண்றேன்னு நீயே பாரு...''

''காதகி..!''

''இருந்துட்டுப் போறேன்! அப்புறம்... இன்னிக்கு
என்னோட ஆர்ட்டிக்கிளை இடியோசை பத்திரிகையில்
பார்த்தியா..?''

''பார்த்தேன்... படிக்கலை... அப்பா படிச்சுட்டு,
ரொம்பவும் நல்லாயிருக்கு'ன்னு உன்னை ரொம்பவே
பாராட்டினார்.''

''நீ படிக்கலையா..?''

''இல்லை...''

''ஏன்...?''

''நான்தான் சொன்னேனே... இன்னிக்கு எனக்கு
பேங்க்ல ஆடிட்டிங்க்ன்னு...!''

''சுப்ரஜா..!''

''ம்...''

''நீ ரொம்பவும் மாறிட்டே... முன்னேயெல்லாம்
என்னோட ஆர்ட்டிக்கிளைப் படிச்சுட்டு, வரிக்கு வரி
பாராட்டுவே... இப்பெல்லாம் நீ கண்டுக்கிறதே
இல்லை...''

''எனக்குப் பிடிக்கலை...''

''என்ன பிடிக்கலை..?''

''நீ எழுதறது மட்டும் இல்லை... நீ பார்க்கிற அந்த
பிரஸ் ரிப்போர்ட்டர் வேலையும் எனக்குப் பிடிக்கலை.
பேசாமே அந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு, பேங்க்
வேலைக்கு அப்ளை பண்ணு...''

''சரி... பாட்டி..!''

''மனோ..! உனக்கு எல்லாமே விளையாட்டாய்
இருக்கு. எனக்கு பயம்மாயிருக்கு...''

''எனக்கு பயம் பிடிக்கும்...''

''உன்னைத் திருத்தவே முடியாது...''

''புரிஞ்சுகிட்டா... சரி..! என்ன! டிஃபன்
சாப்பிடறியா?''

''ஆமா..!''

''உப்புமாவா..?''

''எப்படிக் கண்டுபிடிச்சே..?''

''வாசம் அடிக்குதே...''

''ஏய்... சொல்லு... எப்படிக் கண்டுபிடிச்சே..?''

''கண்டுபிடிக்கிறதுக்கு இது என்ன ராக்கெட்
டெக்னாலஜியா..? வாரத்துல மூணுநாள் உங்க வீட்ல
உப்புமாதானே...? ரவை விலை ஏறிப்போனதுக்குக்

காரணமே உன்னோட அம்மாதான்...!"
"என்ன பண்றது..! அம்மாவுக்கும் சுகர். அப்பாவு
சுகர். ஃபைபர் கண்டெண்ட் உள்ள ஒரே ஃபுட்
ரவைதான்..!"
"சரி... உப்புமாவை விழுங்கிட்டு, நான் எதுக்
ஃபோன் பண்ணியிருப்பேன்னு யோசனை பண்ணு
உன்னோட கெடுவான அரைமணி நேரத்துக்கு
எனக்குக் காரணத்தைச் சொல்லியாகணு
இல்லேன்னா... இன்னிக்கு நீ பேங்க்ல வேலை பார்
முடியாது. பத்து நிமிஷத்துக்கு ஒருதடவை என்னோ
ஃபோன் வந்துட்டேயிருக்கும்."
சுப்ராஜா பதட்டமானாள்.
"அப்படியெல்லாம் ஃபோன் பண்ணிடாதே
இன்னும் அரை மணி நேரத்துக்குள்ளே, காரண
என்னங்கிறதைக் கண்டுபிடிச்சு, நானே உனக்
ஃபோன் பண்றேன்."
"ஃபோன் பண்ணணும்."
"பண்றேன்..."
"மவளே...! ஃபோன் பண்ணாமே இருந்தே... நீ. ஒ
வாரத்துக்கு நிம்மதியா சாப்பிடமுடியாது. தூங்
முடியாது..."
"ராட்சசி..! அது எனக்குத் தெரியாதா..? நா
ஃபோனை ஆஃப் பண்றேன். அம்மா, சமையலறை
யிலிருந்து என்னையே உஷ்ணப்பார்வை பார்த்துட்டு
இருக்கா... சாப்பிடும் போது ஃபோன் பேசின
அம்மாவுக்குப் பிடிக்காது. டேபிளில் இருக்கிற டம்ள
தண்ணியை எடுத்து தலையில் கொட்டிடுவா..."
"சரியா 7.35க்கு உன்னோட ஃபோனை
எதிர்பார்ப்பேன்."
"பாரு... பாரு..."
சுப்ராஜா செல்ஃபோனை அணைத்தாள். அம்மா
சொர்ணம் லஞ்ச் பாக்ஸோடு பக்கத்தில் வந்தாள்.
"ஒரு பருக்கை மீதம் இல்லாமே எல்லாத்தையும்
சாப்பிட்டுடணும்..."
"ம்....ம்..."
"ஃபோன்ல யாரு.. அந்தப் பத்திரிகைக்காரியா?"
"அழகாய், 'மனோரஞ்சிதம்'ன்னு சொல்லேன்."
"அவளை ஏதாவது சொன்னாப் போதும் - உனக்கு
உடனே கோபம் வந்துடுமே..!"
சுப்ராஜா, அவசர அவசரமாய் உப்புமாவை வயிற்றுக்கு
அனுப்பிவிட்டு எழுந்தாள். பரபரவென்று வேறு



வேலைக்கு மாறினாள். அடுத்த பத்தாவது நிமிடம், அம்மாவிடமும் அப்பாவிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டாள். தெருமுனைக்கு வந்து ஒரு ஆட்டோ பிடித்தாள்.

"க்ரீன்வேஸ் ரோடு" சொல்லிவிட்டு ஏறி உட்கார்ந்தாள்.

போக்குவரத்து அதிகம் இல்லாத சாலைகளில் ஆட்டோ வேகமாய்ப் பயணித்து க்ரீன்வேஸ் ரோட்டுக்குள் நுழைந்தது.

"செவன்த் க்ராஸ்ல கட் பண்ணுங்க ட்ரைவர்"

ஆட்டோ ஏழாவது குறுக்குத் தெருவில் நுழைந்தது.

"அதோ... அந்த ஆதித்யா அபார்ட்மெண்ட்ஸ்க்கு முன்னாடி நிறுத்திக்குங்க..."

ஆட்டோ, சாலையின் குழிகளில் தவளையைப் போல் தத்தித் தத்தி - இரண்டு நிமிட நேரத்துக்குப்பின், பல மாடிகளோடு உயர்ந்து நின்ற அந்த அபார்ட்மெண்ட்டுக்கு முன்பாய்ப் போய் நின்றது.

சுப்ராஜா ட்ரைவர்க்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு, பிரதான நுழைவாயிலுக்குள் பிரவேசித்தாள். அபார்ட்மெண்ட்டின் எல்லா ஃப்ளாட்டுகளிலும், ஆஃபீஸ்களுக்குப் போக வேண்டிய பரபரப்பு தொற்றியிருந்தது.

காத்திருந்த லிப்டில் ஏறி... ஐந்தாவது மாடியில் இருந்த அபார்ட்மெண்ட்டின் கதவுக்கு முன்பாய் நின்று, அழைப்பு மணிக்கு வேலை கொடுத்தாள்.

பதினைந்து விநாடிகளுக்குப் பிறகு -

மெல்லக் கதவு திறந்தது.

மனோரஞ்சிதம் நின்றிருந்தாள்.

சுப்ராஜாவைப் பார்த்ததும் வியப்பில், மெலிதாய் வாய் பிளந்தாள்.

"ஏய்..! என்ன இது... சர்ப்பரைஸ் விசிட்? நான் உன்னோட ஃபோனை எதிர்பார்த்துட்டு இருக்கேன். நீ என்னடான்னா நேர்லயே வந்து தரிசனம் குடுத்துட்டே"

"நான் உனக்குக் காரணத்தைச் சொல்லணுமா இல்லையா?"

"சொல்லணும்... இல்லேன்னா... உன்னை யார் விடப்போறா..! வா... உள்ளே..."

சுப்ராஜா உள்ளே போனாள். முன்னறை சோபாவிலேயே, ஒரு ரைட்டிங் பேடும் பேப்பர் - பேனாவும் தெரிந்தது. எழுதப்பட்ட தாள்கள், வரிவரியாய் ஃபேன் காற்றில் படபடத்தன.

''என்ன மனோ... ஏதோ எழுதிட்டு இருந்தே போலிருக்கு..?''

''நாளைக்கு, பேப்பர்க்கு மேட்டர் தாரணுமே..?''

''இன்னிக்கு, உன்னோட கட்டுரை ரொம்பவும் சூடாய் இருந்ததாம்! அப்பா படிச்சுட்டு சொன்னார்.''

''நீ படிக்கலையா?''

''இல்ல...''

''ஏன்..?''

''எனக்குப் படிக்கப் பிடிக்கலை...''

''அதான் ஏன்னு கேட்டேன்...''

''இதோ பார் மனோ..! இன்னிக்கு, நம்ம நாட்ல எவ்வளவோ அக்கிரமம் நடக்குது. அது எல்லார்க்கும் தெரிஞ்சுதான் இருக்கு... அதைப்பற்றி ஒருத்தர்கூட கவலைப்படறது இல்லை. அதைப் பொருட்படுத்தறதும் இல்லை. ஆனா, நீ மட்டும் இதுக்கு விதிவிலக்காய் இருக்கே.. நாட்டோட எந்த மூலையில், எந்த அக்கிரமம் நடந்தாலும் சரி, அதைப் பூதக்கண்ணாடி வெச்சுப் பார்த்து - அந்த அக்கிரமத்துக்குக் காரணமானவர்களைத் தோலுரிச்சுத் தொங்கப் போட்டுடறே...! நீ எழுதற ஒவ்வொரு வார்த்தையும் அமிலத்துல தோய்ச்சு எடுத்த மாதிரி இருக்கு. அந்தக் கட்டுரையைப் படிக்க சிலபேர் இருக்காங்கங்கிற ஒரே ஒரு காரணத்துக்காக நீ எழுதறது எனக்குப் பிடிக்கலை...''

''உன்னோட பிரசங்கத்துக்கு ஒரு ஃபுல்ஸ்டாப் வைக்கிறியா...? உன்னை மாதிரியான மனோபாவம் கொண்டவங்க, நூத்துக்கு எண்பது பேர் இருக்கிறதாலதான் தப்பு. செய்யறவங்களுக்கு - தான் பண்றது தப்புன்னு தோணறது இல்லை... மொதல்ல, லட்சங்களில் நடந்த ஊழல் இப்போது கோடிகளில் நடந்துட்டு இருக்கு... நாட்டின் நிதித்துறையும் சரி; நீதித்துறையும் சரி பெரிய பெரிய பணமுதலைகள் காலடிகளிலும் - பெரிய பெரிய தாதாக்களின் காலடிகளிலும் சரணடைஞ்சு பல வருஷமாச்சு... 1947-ல் நம்ம இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைச்ச மாதிரி, இந்த ரெண்டு துறைக்கும் என்னிக்கு சுதந்திரம் கிடைக்குதோ... அன்னிக்குத்தான் நம்ம நாட்டுக்கு விமோசனம்.''

சுப்ராஜா, தன் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி - மனோரஞ்சிதத்தைக் கும்பிட்டாள்.

''அம்மா... பரதேவதையே! நான் உன்கூட சண்டை போடறதுக்காக வரலை. இன்னிக்குக் காலையில் நீ எனக்கு ஃபோன் பண்ணினே! நீ எதுக்காக ஃபோன்



பண்ணினேன்னு எனக்குத் தெரியும். அந்தக் காரணத்தை ஃபோன்ல சொல்ல நான் விரும்பலை. நேர்ல சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். சொல்லட்டுமா வேண்டாமா..? நான் பேங்குக்கு வேற சீக்கிரமாய்ப் போகணும்.''

''சரி...சரி... காரணத்தைச் சொல்லு...''

''இன்னிக்கு ஒரு தர்மதேவதையோட பிறந்தநாள்.

அந்தத் தேவதையின் பெயர் மனோரஞ்சிதம்.''

மனோரஞ்சிதம், தன்னுடைய இடுப்பில் இரண்டு

கைகளையும் வைத்தபடி முறைத்தாள்.

''பாவாயில்லையே... ஞாபகம் வெச்சிருக்கே...!

அப்புறம் ஏன் எனக்கு ஃபோன்ல க்ரீட் பண்ணலை...?''

''ஃபோன்ல பண்ண வேண்டாம்னுதான்...''

சொன்ன சுப்ராஜா, மனோரஞ்சிதத்தைக் கட்டிப்பிடித்துக் கன்னத்தில் முத்தம் ஒன்றை வைத்து - ''ஹேப்பி பர்த் டே'' என்றாள்.

''அவ்வளவுதானா..?''

''ஒரு கிஃப்ட்டும் கொண்டு வந்திருக்கேன்...''

சொன்ன சுப்ராஜா, தன்னுடைய தோளில் தொங்கிக் கொண்டிருந்த வானிடி பேக்கைத் திறந்தாள். அதிலிருந்து ஒரு சிறிய தெர்மா ஃப்ளாஸ்கை எடுத்தாள்.

''என்னடி.... ஃப்ளாஸ்கைத் தரப் போறியா?''

''சேச்சே! அதெல்லாம் உனக்குப் பிடிக்காதுன்னு

எனக்குத் தெரியாதா என்ன..?''

''பின்னே என்ன..?''

''உனக்கு, இந்த உலகத்திலேயே பிடிச்சது என்ன..?''

''மல்லிகைப்பூ..! இதைத்தான் நான் உன்கிட்டே

லட்சம் தடவ சொல்லியிருக்கேனே...!''

''அந்த மல்லிகைப் பூக்கள்தான் இந்த ஃப்ளாஸ்க் நிறைய இருக்கு. உன்னோட பிறந்தநாளுக்கு, அந்தப் பூக்களைத்தான் கொடுக்கப்போறேன்...''

மனோரஞ்சிதம் முறைத்தாள்.

''ஏய்... சுப்! இது ரொம்பவும் அநியாயம். எனக்குப் பிடிச்சது மல்லிகைப்பூன்னு சொன்ன ஒரே ஒரு காரணத்துக்காக, அதை ஒரு ஃப்ளாஸ்க்ல போட்டுக் கொண்டு வந்துட்டியே... ரொம்பவும் சீஃப் கிஃப்ட்... சென்னையில் எத்தனை நகைக்கடைகள் இருக்கு... ஒரு நகைக் கடை கூடவா உன்னோட கண்ணுல படலை...?''

சுப்ராஜா புன்னகைத்தாள்.

''நான் கொடுக்கப் போகிற மல்லிகை, தங்கம் வைரத்தை விட காஸ்ட்லி...''

"எப்படி சொல்றே..?"
"இந்த ஃப்ளாஸ்கை வாங்கி, உன்னோட
உள்ளங்கையில் கொட்டிப்பாரு... தெரியும்..."
மனோரஞ்சிதம், அந்தச் சிறிய ஃபிளாஸ்கை வாங்கி.
அதன் மூடியைத் திருகித் திறந்தாள்.
கவிழ்த்தாள்.
வலது உள்ளங்கையில் மல்லிகைப் பூக்கள்
கொட்டின.
பூக்களைப் பார்த்ததும் மனோரஞ்சிதத்தின் விழிகள்,
ஆச்சர்யத்தில் அகலத் திறந்து கொண்டன.
அத்தனை மல்லிகைப் பூக்களும் - குண்டு குண்டாய்
- செழிப்பாய் - அழகான - அடர்த்தியான நீலநிறத்தில்
இருந்தன.




புது டெல்லி.
ஹோட்டல் சாணக்யாவின் ஏழாவது
மாடி. பிங்க் பாரடைஸ் ஹால். ஹாலின்
விதானத்திலிருந்து லஸ்தர் விளக்குகள் -
பெரிய பெரிய ராட்சஸ சைஸ் வைர
நகைகளைப் போல் தொங்கிக் கொண்டி
ருக்க, ஹாலின் எல்லாப் பக்கங்களிலும்
ஒளி வெள்ளம். ஏ.ஸி குளிர்காற்றில், ஊதுவத்திப்
புகையாய் இழையும் வயலின் இசை.
பிங்க் பாரடைஸ் ஹாலில் போடப்பட்டு இருந்த
எல்லா குஷன் நாற்காலிகளிலும் மேட்டுக்குடி வர்க்கம்
கோட் சூட், பட்டுப்புடவை, குர்தா, ஜிப்பாக்களில்
வரிசையாய் உட்கார்ந்து இருக்க, காற்றில் செண்ட்
வாசனை. மஹாதேவ் எல்லோரையும் வணங்கி
வரவேற்றுக்கொண்டிருந்தார்.
வெளியுறவுத்துறை அமைச்சரின் பிரதான செயலாளர்
மஹாதேவ், தன்னுடைய ஒரே மகளான ப்ரீதாவின்
கல்யாண நிச்சயதார்த்தத்தை, சாணக்கியா ஹோட்டலின்
பிங்க் பாரடைஸ் ஹாலில் நடத்தத் தீர்மானித்து,
அழைப்பிதழை அமைச்சரிடம் கொடுத்த போது. அவர்
வியப்பாய் ஒரு பார்வை பார்த்தார். ஹிந்தியில் பேசினார்.
"மஹாதேவ்..! உங்கள் பெண்ணின் நிச்சயதார்த்
தத்தை, இவ்வளவு ஆடம்பரமாக செய்ய வேண்டுமா..?
வீட்டிலேயே எளிமையாக செய்தால் என்ன?"
மஹாதேவ், சின்னதாய் ஒரு புன்னகை செய்தார்.



"மன்னிக்க வேண்டும் ஸார். இது ஆடம்பரம்
இல்லை. என்னுடைய லட்சியம். என்னுடைய மகளின்
கல்யாண நிச்சயதார்த்தத்தை ஒரு ஃபைவ் ஸ்டார்
ஹோட்டலில் - டெல்லியின் ஒட்டு மொத்த
வி.ஐ.பி.க்களையும் அழைத்து, நடத்த வேண்டும் என்பது
என்னுடைய லட்சியமாகவும் விருப்பமாகவும் இருந்தது.
அதைத்தான் நான் இப்பொழுது நிறைவேற்றப்
போகிறேன்... நான் வாழ்க்கையின் அடி
மட்டத்திலிருந்து. மேலே வந்தவன்."
"இருந்தாலும் இப்போது அரசியல் சூழ்நிலைகள்
சரியில்லை. எதிர்க்கட்சிகள், என் மீதும், இன்னும் உள்ள
சில அமைச்சர்களின் மீதும் ஊழல் புகார்களைச்
சுமத்திக்கொண்டு இருக்கிறார்கள், நான், முறைகேடாய்
சம்பாதித்து கோடிக்கணக்கான ரூபாய்களை ஸ்விஸ்
பேங்கில் கொண்டுபோய் குவித்து வைத்து இருப்பதாக,
நாள்தோறும் எதிர்க்கட்சித்தலைவர்கள் என்னைச்
சாடிக்கொண்டு இருக்கிறார்கள். அது, 'பொய்யான
குற்றச்சாட்டு' என்று அவர்களுக்கே தெரியும்.
இருந்தாலும், மத்தியில் இந்த ஆட்சி இருக்கக்கூடாது
என்ற எண்ணத்தில், வரப்போகும் தேர்தலை மனதில்
வைத்துக்கொண்டு சேற்றை வாரி இறைக்கிறார்கள்... இது
என்னுடைய மனதைக் காயப்படுத்தியுள்ளது."
"ஸார்... நீங்கள் குற்றம் செய்யவில்லையென்றால்,
சட்டத்தையும் நீதியையும் பார்த்து ஏன் பயப்பட
வேண்டும்?"
வெளியுறவுத்துறை அமைச்சர் தன் வழுக்கைத்
தலையைத் தடவியபடி அண்ணாந்து சிரித்தார்.
"மஹாதேவ்! அரசியலில், ஒரே பொய்யைத் திரும்பத்
திரும்பச் சொன்னால் அது உண்மையாகிவிடும். நீங்கள்
இவ்வளவு செலவு செய்து ஆடம்பரமாக உங்களுடைய
பெண்ணின் நிச்சயதார்த்தத்தை நடத்தினால் எதிர்க்
கட்சியின் கண்டனக்கணைகள் உங்கள் மீதும் பாயும்."
"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை ஸார்..! நான்
இதுவரைக்கும், நான்கு வெளியுறவுத்துறை
அமைச்சர்களிடம் பிரதான செயலாளராய் இருந்து
இருக்கிறேன். இதுவரையிலும் என்மீது யாரும் ஒரு
புகார்கூட சொன்னது இல்லை. இனியும் சொல்ல
முடியாது. நான் தமிழ்நாட்டுக்காரன். தப்பாய் நடக்க
மாட்டேன்."
"எனக்கு உங்களைப்பற்றித் தெரியாதா என்ன?"
"ஸார்..! என் மகளின் திருமண நிச்சயதார்த்தத்திற்கு,

நீங்கள் அவசியம் வர வேண்டும்... கடைசி நேரத்தில் ஏதாவது ஒரு காரணம் சொல்லித் தவிர்த்துவிடாதீர்கள்."

"நோ.. நோ... அவசியம் இருப்பேன்.... எத்தனை மணிக்கு ஃபங்க்ஷன் ஆரம்பம்...?"

"இரவு ஏழு மணிக்கு"

" 6.55 க்கு அங்கே இருப்பேன்."

" நன்றி ஸார்."

நேற்றுக் காலையில், தனக்கும் வெளியுறவுத்துறை அமைச்சர் தேசாய்க்கும் நடந்த உரையாடலைத் தன் மனதின் மையத்துக்குக் கொண்டு வந்து ரீ - வைண்ட் செய்து பார்த்துக் கொண்டிருந்தபோது-

மஹாதேவின் முதுகை யாரோ தொட்டார்கள்.

திரும்பினார்.

அவருடைய மனைவி புனிதா. பட்டுப்புடவையில் பளபளத்தாள். கழுத்தில் வைரம் டாலடித்தது.

"என்ன புனிதா..?"

"உங்க கையில் கட்டியிருக்கிற வாட்ச் ஓடுதா இல்லையா?" குரலைத் தாழ்த்திக் கொண்டு கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.

"ஓடுதே!"

"டயம் எத்தினின்னு பார்த்தீங்களா.... 6.45, சரியா ஏழு மணிக்குத் தட்டை மாத்தணும்..."

"மாத்திடலாம்."

"இன்னும் அமைச்சர் வரலையே?"

"எந்த நிமிஷமும் வந்துடுவார்..."

"ஒரு வேளை அவர் வரலைன்னா?"

"இதோ பார் புனிதா... ஏன் இப்படியெல்லாம் பேசறே... அமைச்சர் கண்டிப்பாய் வந்துடுவார். இந்நேரம் புறப்பட்டிருப்பார்."

"மாப்பிளையோட அப்பா, கொஞ்ச நேரத்துக்கு முந்தி என்ன சொன்னார் தெரியுமா?"

"என்ன சொன்னார்..?"

"நிச்சயதார்த்தத்தை நம்ம வீட்லயே வெச்சிருக்கலாம். அமைச்சரை எல்லாம் கூப்பிட்டு இப்படி ஆர்ப்பாட்டம் பண்ணியிருக்க வேண்டியதே இல்லை.... எந்த ஒரு அமைச்சரும் சொன்ன நேரத்துக்கு வரவே மாட்டாங்க.... ஏழு மணிக்குத் தட்டை மாத்தறது கஷ்டம்தான்னு சொன்னார்."

"அவர் என்னவோ சொல்லிட்டுப் போறார். அதையெல்லாம் நீ பொருட்படுத்தவே வேண்டாம். அவரோட பையன் சபரிவாசன் நம்ம பொண்ணு ப்ரீதா



மேல ஆசைப்பட்டுக் கல்யாணம் பண்ணிக்க பிடிவாதம் பிடிச்சதாலதான், பொண்ணு கேட்டு வந்தார். அவர் ஒரு ஐ.டி. கம்பெனிக்கு சேர்மன். அவரோட ஸ்டேட்டஸுக்கு ஈக்குவலாய் நான் இல்லேன்னு அவர்க்கு ஒரு ஆதங்கம். நான் எந்தவகையிலும் குறைஞ்சவன் இல்லைன்னு காட்டத்தான், இவ்வளவு பெரிய ஹோட்டலில் நிச்சயதார்த்த ஃபங்ஷனை ஏற்பாடு பண்ணியிருக்கேன். அமைச்சரையும் கலந்து கொள்ளும்படியாய்க் கேட்டிருக்கேன். அமைச்சர், இந்த ஃபங்க்ஷன்ல கலந்துகிட்டா, என்னோட ஸ்டேட்டஸ் அதிகமாயிடும்னு சம்பந்தி பயப்படறார். நான் இவ்வளவு பிரம்மாண்டமாய் நிச்சயதார்த்த விழாவை நடத்துவேன்னு, கொஞ்சமும் எதிர்பார்க்கலை அவர்."

"சரி... அவர் என்னவோ நினைச்சுட்டுப் போகட்டும். அமைச்சர் வந்தாலும் சரி... வரலைன்னாலும் சரி... ஏழு மணிக்கெல்லாம் ஃபங்க்ஷன் ஆரம்பமாயிடும். நீங்க அதுக்குத் தடை சொல்லக்கூடாது..."

புனிதா சொல்லிக் கொண்டிருக்கும்போதே மஹாதேவின் செல்ஃபோன் ரிங்டோனை வெளியிட்டது. எடுத்துப் பார்த்து மலர்ந்தார்.

"மினிஸ்டர்தான் பேசறார்."

"என்ன சொல்றார்ன்னு கேளுங்க..."

மஹாதேவ், செல்ஃபோனைக் காதுக்கு ஒற்றினார்.

"ஸார்... நான் மஹாதேவ்..."

"ஃபங்ஷன் ஏழு மணிக்குத்தானே?" மறுமுனையில் அமைச்சர் தேசாய் கேட்டார்.

"ஆமாம் ஸார்..."

"அங்கே இன்னும் ஐந்து நிமிடங்களில் இருப்பேன்."

"தேங்க்யூ ஸார்... எல்லோரும், உங்களுடைய வருகையைத்தான் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்."

"நோ.. ப்ராப்ளம்... ஐ வில் பி தேர் வித்தின்... பைவ் மினிட்ஸ்."

"ப்ளீஸ் கம் ஸார்... வெரி கைண்ட் ஆஃப் யூ..."

அமைச்சர் செல்ஃபோனை அணைத்துவிட, மஹாதேவும் செல்ஃபோனை கோட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டபடி... மனைவியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

"மினிஸ்டர் வந்துட்டிருக்கார்.... சம்பந்திகிட்ட போய் விஷயத்தைச் சொல்லு..."

"நீங்களே போய்ச் சொல்லிடுங்களேன்... நாம,

பொண்ணைப் பெத்தவங்க... கொஞ்சம் தாழ்ந்துதான் போகணும்.'' புனிதா சொல்லிவிட்டு போய்விட, மஹாதேவ் தனக்குள் பீறிட்டு வந்த எரிச்சலை அடக்கிக்கொண்டு, சற்றுத் தொலைவில் மேடைக்கு அருகே நின்றபடி, யாருடனோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்த சம்பந்தி சித்தரஞ்சனை நோக்கிப் போனார்.

ஐம்பத்தி ஐந்து வயதான சித்தரஞ்சன் - ஆறடி உயரத்தில், கருநீல நிற சூட்டில் கம்பீரம் காட்டினார். மஹாதேவைப் பார்த்ததும், பேசிக் கொண்டிருந்த நபரிடம் ''லி...யூ... ஆஃப்டர்... சம் டைம்'' என்று சொல்லி அனுப்பிவிட்டு இவரிடம் திரும்பினார்.

''மிஸ்டர் மஹாதேவ்...! நல்ல நேரம் முடியறதுக்கு இன்னும் பத்து நிமிஷம்தான் பாக்கியிருக்கு...''

''அமைச்சர் தேசாய் இப்பத்தான் ஃபோன் பண்ணினார்.''

''அவர் வரலைன்னா என்ன..?''

''இப்ப வந்துடுவார்...''

''எனக்கு நம்பிக்கையில்லை...நாம நல்ல நேரத்தைத் தவறவிடப்போறோம்...''

''நோ... நோ... இன்னும் ரெண்டு நிமிஷத்துக்குள்ள அவர் ஹாலில் இருப்பார்.''

''சரி... உங்களுக்கு, சரியா ரெண்டு நிமிஷம் தர்றேன். அதுக்குள்ளே மினிஸ்டர் இந்த ஹாலுக்குள்ளே வரணும்... அப்படி இல்லேன்னா...?''

''இல்லேன்னா...?''

''இந்த நிச்சயதார்த்தத்தை கான்ஸல் பண்ணிட லாமா?''




நீல நிற மல்லிகைப்பூக்களைப் பார்த்தும் மனோரஞ்சிதத்தின் விழிகள் இமைக்க மறந்தன.

பார்த்தாள்...

பார்த்தாள்...

பார்த்துக் கொண்டேயிருந்தாள். -

சுப்ராஜா அவளுடைய தோளைத் தட்டினாள்.

''என்னடி... உயிரோடுதான் இருக்கியா..? பேச்சையும் காணோம், மூச்சையும் காணோம்...''

''சுப்...''



''ம்...''

''இது இயற்கையான பூக்களா... இல்லை ஏதாவது ப்ளாஸ்டிக் சமாச்சாரமா?''

''உதைப்பேன்...! செடியிலிருந்து நானே பறிச்சது. ஸ்மெல் பண்ணிப்பாரு... மூச்சையே அடைக்கிற மாதிரி இருக்கும்.''

பூக்களை எடுத்து முகர்ந்தாள் மனோரஞ்சிதம். வாசனை நுரையீரல் வரை மணத்தது.

''எப்படி... என்னுடைய பரிசு..? உனக்குப் பிடிச்ச மல்லிகைப்பூ. அதுவும் ப்ளு கலர்ல...''

''உனக்கு எப்படி இந்த ப்ளு ஜேஸ்மின் கிடைச்சது..?''

''சொன்னா நம்ப மாட்டே...''

''நம்பறேன். சொல்லு...''

''ஏழு கடல், ஏழு மலை, ஏழு பாலைவனம் தாண்டிப் போனால் ஒரு நந்தவனம் வரும். அந்த நந்தவனத்தைப் பூதம் ஒண்ணு காவல் காத்துட்டிருக்கும். அந்தப் பூதம் ஒரே ஒரு கேள்வி கேட்கும். அந்தக் கேள்விக்கு நாம சரியான பதிலைச் சொல்லிட்டா... பூதம், அந்த நந்தவனத்துக்குள்ள போக பர்மிஷன் கொடுக்கும். நாம உள்ளே போய் எந்தப் பூவை வேணும்னாலும் பறிக்கக்கலாம். அப்படிப் பறிச்சுட்டு வந்ததுதான் இந்த ப்ளு ஜேஸ்மின்.''

''கதை நல்லாயிருக்கு... உண்மையான காரணத்தைச் சொல்லு''

''சரியாய்ப் போச்சு... உண்மையான் காரணம் இதுதான்''

''அப்படியா..?''

''அப்படித்தான்..! நீ நம்பினா நம்பு... நம்பாட்டிப் போ....''

''சரி..! நீ இவ்வளவு தீர்மானமாய்ச் சொல்லும்போது, நான் நம்பாமே இருக்க முடியுமா..?'' என்று சொன்ன மனோரஞ்சிதம் தன்னுடைய செல்ஃபோனை எடுத்துக் கொண்டு டயலில் சில எண்களைத் தட்டினாள்.

சுப்ராஜா, தன் புருவங்களை உயர்த்தினாள்.

''யாருக்கு ஃபோன் பண்றே..?''

''உன்னோட அப்பாவுக்குத்தான்...''

''இப்ப எதுக்கு அவருக்கு ஃபோன்..?''

''அவருக்கு வரப்போகிற மருமகளைப் பத்தி சின்னதாய் ஒரு லெக்சர் தரலாம்ன்னுதான்..!''

''ஏய்ய்ய்..!''

''என்ன ஏய்..? உன்னோட ஆறுமாசக் காதலை, உன்

வீட்ல சொல்லப்போறேன். 'அங்கிள்..! உங்க பொண்ணு சுப்ராஜா ஒருத்தரை லவ் பண்றா. அவர் பேரு அரவிந்த். ஏ.ஜி. ஆபீஸ்ல ஒர்க் பண்றார். வாரத்துக்கு ஒருதடவை ரெண்டு பேரும் மீட் பண்ணி...' "

"வேண்டாம் மனோ..!"

"ஏன் வேண்டாம்..?"

"இப்போதைக்கு அப்பாவுக்குத் தெரிய வேண்டாம்."

"அப்பாவுக்குத் தெரியக்கூடாதுன்னு நீ நினைச்சா, எனக்கு உண்மை வேணும். இந்த ப்ளூ ஜேஸ்மின் உனக்கு எப்படி கிடைச்சது..?"

"சொல்லிடறேன்."

"சொல்லு..."

"புரபசர் நமோ நாராயணனை உனக்குத் தெரியுமா?"

"தெரியாது... அவர் எந்த காலேஜில் ஒர்க் பண்றார்?"

"அவர் காலேஜ் புரபசர் இல்லை..."

"அப்புறம்..?"

"அவர் ஒரு ரிசர்வ் ஸ்காலர்... படப்பைக்குப் பக்கத்தில் 'ஒய்.டி.டி.' என்கிற பேர்ல ஒரு ரிசர்ச் சென்டரை வெச்சு நடத்திட்டு வர்றார். தாவரங்கள், பிராணிகள், மனிதர்கள் சம்பந்தப்பட்ட மரபணு சோதனைகளைப் பண்ணி ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தயாரித்து, அவைகளை உலகநாடுகளின் செமினார்களில் சப்மிட் பண்ணிட்டு வர்றார். அவரோட கண்டுபிடிப்புகளில் ஒண்ணுதான் இந்த நீலநிற மல்லிகை... அவரோட படப்பை ரிசர்ச் பண்ணையில், நூற்றுக்கணக்கான பூச்செடிகளைப் பயிரிட்டு, விதவிதமான நிறங்களில் பூக்களை உற்பத்தி பண்ணிட்டு வர்றார். நினைச்சே பார்க்க முடியாத கலர்ஸ். அவர் உருவாக்கிய குளத்து நீரில், கறுப்பு நிறத் தாமரைகள் பூத்து இருக்கிற அழகை - அங்கேயே நாள் பூராவும் உட்கார்ந்து பார்த்துட்டு இருக்கலாம். ரோஜாக்களில் மட்டும் ஒரு நூறுவகை இருக்கும். நூறும் நூறு கலர். அதிலும் பஞ்சவர்ண ரோஜான்னு ஒண்ணு இருக்கு பாரு... பார்த்தா பிரமிச்சுப் போயிடுவே... ஒரே ரோஜா பூவில் அஞ்சு கலர்."

"வாவ்!" என்றாள் மனோரஞ்சிதம். "இப்படியொரு அற்புதமான மனிதரும், இப்படியொரு இண்ட்ரஸ்டிங்கான விஷயமும் சிட்டிக்குள்ளே இருக்கிறது எனக்குத் தெரியாமல் போச்சே.... எப்படி இவரை மிஸ் பண்ணினேன்...?"

சுப்ராஜா சிரித்தாள்.

"உனக்கு, இந்த நாட்டில் உள்ள அரசியல்வாதி-



களையும், அவர்கள் பண்ற ஊழல்களையும் மட்டுமே எழுதத்தெரியும். இது மாதிரியான அற்புத மனிதர்களைப் பற்றியும், அவங்களோட திறமைகளைப்பற்றியும் எழுதத் தெரியாது. எழுதவும் மனசு இருக்காது..."

"ஸாரி சுப்! இன்னிக்குத்தான், இப்படியொரு மனிதரைப் பற்றி கேள்விப்படறேன்... அவர் பேர் என்ன சொன்னே?"

"நமோ நாராயணன்...!"

"அவர் உனக்கு எப்படிப் பழக்கம்?"

"நம்ம இந்திய அரசு, அவர் பண்ணிட்டு இருக்கிற மரபணு ஆராய்ச்சிக்காக ஐந்து கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கு. அந்த ரூபாயை மூணு தவணைகளில் அவர்க்கு கொடுக்க வேண்டிய பொறுப்பு, எங்க வங்கிக் கிளையோடது. அது சம்பந்தமாய்ப் பேசவும், சில பேப்பர்களில் அவருடைய கையெழுத்தை வாங்கவும் - நானும், என்னுடைய வங்கி மேனேஜரும் நேத்து சாயந்தரம் ஒரு நாலுமணி சுமார்க்குப் படப்பையில் இருக்கிற அவருடைய ரிசர்ச் சென்டர்க்குப் போனோம். டாக்குமெண்ட்ஸில் கையெழுத்து வாங்கி முடிஞ்சதும், புரபசர் நமோ நாராயணன் - என்னையும் மானேஜரையும் பண்ணைப் பகுதிக்குக் கூட்டிப் போய், புதிய மரபணு ஃபார்முலாக்களை உபயோகப்படுத்தி தாவரங்களில் தான் உருவாக்கின அற்புதங்களைக் காட்டினார். பூச்செடிகளைப் பார்த்ததும், நானும் மானேஜரும் அசந்து போனோம். வெள்ளைச் சூர்யகாந்திப் பூ, நீல நிற மல்லிகை, கறுப்புத்தாமரை, மஞ்சள் நிறத்தில் முல்லை, வெள்ளைக் கனகாம்பரம்னு எதைப் பார்த்தாலும் பிரமிப்பாய் இருந்தது."

இன்னமும் அகலமாய், மனோரஞ்சிதம் கண்களை விரித்தாள். "கேட்கும் போதே எனக்கு த்ரில்லாய் இருக்கே....பார்த்த உனக்கு எப்படி இருக்கும்?"

"அதையேன் கேட்கிறே போ..! அங்கேயிருக்கிற பூச்செடிகளைப் பார்த்துப் பார்த்து, ஆச்சர்யப்பட்டு ஆச்சர்யப்பட்டு எனக்கு அலுத்துப் போச்சு. பந்தல் நிறைய நீலநிற மல்லிகைகளைப் பார்த்ததும், எனக்கு உன்னோட ஞாபகம்தான் வந்தது. உன்னோட பிறந்த நாள் பரிசாய் உனக்குப் பிடிச்ச மல்லிகைப் பூக்களை - அதுவும் நீலநிறத்தில் இருக்கிற இந்த மல்லிகைப்பூக்களைக் கொடுத்து, உன்னைத் திகைக்க வைக்கணும்ன்னு ஆசைப்பட்டேன். புரபசர் நமோ நாராயணன்கிட்டே இந்த ப்ளூ ஜேஸ்மின் பூக்களைப் பறிச்சுக்கலாமான்னு

கேட்டேன். அவரும் சிரிச்சுகிட்டே 'இந்த ஒரு தடவை மட்டும் பறிச்சுக்கலாம்... அடுத்த தடவை வரும்போது கேட்கக்கூடாதுன்னு சொன்னார். இந்தப் பூக்களை என்னோட தோழிக்குப் பரிசாய் கொடுக்கப் போறேன்னு சொன்னதும், அவரே பூக்கள் வாடாமல் ஃப்ரெஷ்ஷாய் இருக்கிறதுக்காக இந்த தெர்மாஸ் குடுவையைக் கொடுத்தார்."

மனோரஞ்சிதம் சந்தோஷ மிகுதியில், அந்த நீலநிற மல்லிகைகளைக் கை நிறைய எடுத்து முகர்ந்து பார்த்தாள்.

"ஆஹா...! சாதாரண மல்லிகையைவிட வாசனை ரெண்டு மடங்கு தூக்கலாய் இருக்கே...? இப்படியொரு மனிதரை, நான் எப்படி மிஸ் பண்ணினேன்?"

சுப்ராஜா சிரித்தாள்.

"நீ மிஸ் பண்ணலை... அவர்தான் பிரஸ் ரிப்போர்ட்டர்களை மிஸ் பண்ணினார். நான் எந்த ஒரு மீடியா மூலமாகவும் எக்ஸ்போஸாக விரும்பலை. நான் செய்துகிட்டு இருக்கிற ஆராய்ச்சி, மருத்துவத்துறை சம்பந்தப்பட்டது. இதுக்கு எந்த ஒரு விளம்பரமும் தேவையில்லை. என்னுடைய மரபணு ஆராய்ச்சிகள் சம்பந்தப்பட்ட பணிகள் முடிந்ததும்... நானே ஒரு பிரஸ்மீட்டுக்கு ஏற்பாடு பண்ணுவேன். நான் இதுவரைக்கும், என்ன செஞ்சேன்,.. என்ன செய்யப் போறேன் என்கிற கேள்விகளுக்கும்; ரிப்போர்ட்டர்ஸ் கேக்கப் போகிற மற்ற கேள்விகளுக்கும் விளக்கமாய் தெளிவாய் பதில் சொல்லப் போறேன்னு சொன்னார்."

"சுப்..."

"என்ன..?"

"நீ எனக்கு ஒரு உதவி பண்ணணுமே?"

"சொல்லு..."

"நான் உடனடியாய், அந்த புரபசர் நமோ நாராயணனைப் பார்க்க நீதான் ஏற்பாடு பண்ணணும்..."

"எதுக்கு..?"

"எக்ஸ்களூஸிவ்வா அவரை ஒரு பேட்டி எடுத்து, கவர் ஸ்டோரியாப் போடணும். இப்படிப்பட்ட அற்புதமான மனிதர்களை உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டணும்"

"மனோ...! அவர் தன்னோட பணிக்கு விளம்பரமே வேண்டாம்ன்னு சொல்றார்..."

"தி க்ரேட் பீப்பிள் எல்லாம் அப்படித்தான் சொல்லுவாங்க. நாமதான் அவங்களை முன்னாடி



இழுத்துட்டு வரணும்..."

"சொன்னாக் கேளு... மனோ..."

"நோ... இப்போ அவர்க்கு ஃபோன் பண்ணி, எனக்கு ஒரு அப்பாய்ண்ட்மெண்டை வாங்கித் தரப் போறியா இல்லையா?"

"உன் கிட்டே எனக்குப் பிடிக்காததே இந்தப் பிடிவாதம்தாண்டி...!"

"நீ என்னமோ சொல்லிட்டுப் போ... எனக்கு நீ அவரோட அப்பாயிண்ட்மெண்ட்டை வாங்கித் தர்றே..! இல்லேன்னா உன்னோட அப்பாவுக்கு ஃபோன் போட்டு, அவரோட எதிர்கால மருமகனைப் பற்றிய பயோ - டேட்டாவைச் சொல்லிடுவேன்."

"உனக்கு ப்ளு ஜேஸ்மினைக் கொண்டுவந்து கொடுத்தது மெகா தப்பு. ஃபோன்லயே 'ஹேப்பி பர்த்டே'ன்னு சொல்லியிருக்கலாம்."

"டூ... லேட்...! புரபசர் நமோ நாராயணனுக்கு ஃபோன் பண்ணு. என்னோட பேரைச் சொல்லி ஒரு மணி நேரம் அப்பாயிண்ட்மெண்ட் வாங்கு."

"வாங்கித் தொலைக்கிறேன்...!"

சுப்ராஜா தன் செல்ஃபோனை எடுத்து எண்களைத் தட்டிவிட்டு, சில விநாடிகள் காத்திருந்து பிறகு பேசினாள்.

"ஸார்... நான்தான் சுப்ராஜா... பேங்க் அக்கௌண்ட்டட்."

"ஓ..! மிஸ் சுப்ராஜா..?"

"ஆமா... ஸார்..."

"என்ன... விஷயம்..! டாக்குமெண்ட்ஸ்ல ஏதாவது கையெழுத்துப் போடாமே விட்டுட்டேனா..?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல ஸார்..."

"தென்..?"

"ஒரு சின்ன ஆப்ளிகேஷன்"

"சொல்லுங்க... மிஸ் சுப்ராஜா..."

"நேத்து உங்க ரிசர்ச் கார்டனில் பறிச்சுட்டு வந்த ப்ளு ஜேஸ்மினை, என்னோட ஃப்ரண்ட் மனோரஞ்சிதத்துக்கு அவளோட பிறந்த நாள் பரிசாய்க் கொடுத்தேன். அந்த ப்ளு ஜேஸ்மினைப் பார்த்ததும், அவ அடைஞ்ச சந்தோஷத்துக்கு அளவேயில்லை. பேஸிக்கலி அவ ஒரு ரிப்போர்ட்டர். 'செந்தணல்' என்கிற புனைப் பெயரில் தினசரிகளில் நிறைய கட்டுரைகளை எழுதிட்டு வர்றா. அவளுடைய கட்டுரைகளைப் படிக்கிறதுக்காவே நிறைய பேர் பேப்பர் வாங்கறது உண்டு."

"ம்... 'செந்தணல்' என்கிற பேரை நானும் பேப்பர்ல பார்த்திருக்கேன். ரெண்டு, மூணு ஆர்ட்டிக்கிள்ஸும் படிச்சிருக்கேன். வெரி நைஸ்..."

"அந்த மனோரஞ்சிதம் - உங்களைப் பார்க்க விரும்பறா ஸார்."

"ஒய்... மீ..?"

"உங்களைப் பேட்டி எடுத்து, ஒரு கவர் ஸ்டோரி பண்ண விரும்பறா..! உங்களை இத்தனை நாளும் மிஸ் பண்ணிட்டதாய்ச் சொல்லிப் புலம்பிட்டு இருக்கா..."

"ஸாரி... மிஸ் சுப்ரஜா.. அயாம் நாட் இண்ட்ரஸ்ட்டட் இன் மீடியா பப்ளிசிட்டி. நான் ஒரு அரசியல்வாதியோ... ஒரு சினிமா நடிகனோ கிடையாது. பப்ளிசிட்டி ஈஸ் மஸ்ட் ஃபார் தெம். எனக்கு வேண்டாம். என்னுடைய வேலை விளம்பரத்துக்கு அப்பாற்பட்டது."

"உங்களோட மரபணு ஆராய்ச்சி சம்பந்தமாய் பேட்டி எடுக்க விரும்பறா..!"

"அந்த ஆராய்ச்சி இன்னமும் முழுமை அடையலை... எல்லா விஷயங்களும் அரைகுறையாய் இருக்கும்போது, அதைப்பற்றிச் சொல்றது சரியில்லை. என்னோட ஆராய்ச்சிகள் முழுமை அடைஞ்ச பிறகு நானே ப்ரஸ் மீட்டை கூட்டி, என்னோட கண்டுபிடிப்புகள் பற்றிய உண்மைகளை வெளியிடுவேன். அந்த ப்ரஸ் மீட்ல உங்க தோழியும் கலந்துக்கலாம்..."

"ஸார்..! அவ என்ன ஆசைப்பட்டான்னா..?"

"வெரி வெரி ஸாரி... மிஸ் சுப்ரஜா... மத்தவங்களோட ஆசைகளை நான் நிறைவேத்திக்கிட்டு இருந்தா, என்னோட வேலையை நான் ஒழுங்காய்ப் பார்க்க முடியாது... உங்க ஃப்ரண்ட்டுக்கு என்னுடைய ஒரு பிக் ஸாரி..."

"ஓ.கே... ஸார்... நோ ப்ராப்ளம்..! நான் உங்க நிலைமையை எடுத்துச் சொல்லி அவளை கன்வின்ஸ் பண்ணிடறேன்..."

"தேங்க்... யூ..!"

சுப்ரஜா செல்ஃபோனை ஒரு பெருமூச்சோடு அணைத்தாள்.

"உனக்கு நான் என்ன சொன்னேனோ.. அதைத்தான் புரபசரும் சொன்னார். அவர்க்குப் பேட்டி முக்கிய மில்லையாம். ட்யூட்டி முக்கியமாம். நீ அவரை விட்டுடு மனோ! உனக்குத்தான் அரசியல்வாதிகளும் சினிமா நடிகர்களும் க்யூவில் காத்துட்டு இருக்காங்களே!"

மனோ தலையை ஆட்டி, தோள்களைக் குலுக்கினாள்.




"அவர் வேண்டாம்ன்னு சொன்னா... நான் என்ன பண்ண முடியும். பட்! என்னிக்காவது ஒருநாள் அவரைப் பார்ப்பேன்."

"இப்ப... சொன்னியே... இது புத்திசாலித்தனம்..! உனக்கு நல்ல புத்தி இருக்கும்போதே நான் கிளம்பறேன்.... பேங்க்ல இன்னிக்கு எனக்கு ஆடிட்டிங்... நான் போய் அதைக் கவனிக்கிறேன்."

அவளுடைய கன்னத்தைக் தட்டிவிட்டு சுப்ரஜா கிளம்பிப்போன பிறகு, மனோரஞ்சிதம் அந்த நீலமல்லிகைப் பூக்களைக் கையில் எடுத்தாள்.

"புரபசர் ஸார்..! நான் ஒருத்தரை பேட்டி எடுக்க ணும்ன்னு நினைச்சா... அந்த வேலையை முடிக்காமே இருக்கமாட்டேன். இன்னும் 24 மணி நேரத்துல, உங்களுக்கு எதிர்ல உட்காரப் போறேன்... நான் கேள்வி களைக் கேட்கப் போறேன். அந்தக் கேள்விகளுக்கு நீங்க பதில் சொல்லப் போறீங்க. இது நடக்கும்.




சித்தாரஞ்சன் சொன்னதைக் கேட்டு மஹாதேவ் திகைத்தார்.

"எ...எ... என்ன சொன்னீங்க..! நிச்சயதார்த்தத்தை கான்ஸல் பண்றதா..?"

சித்தாரஞ்சன் சிரித்தார்.

"சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். பயந்துட்டீங்களா?"

சித்தாரஞ்சன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே... ஹாலுக்கு உள்ளே ஒரு பரபரப்பு அரும்ப ஆரம்பித்தது. ஒரு பாதுகாப்பு அதிகாரி பக்கத்தில் வந்து சொன்னார்.

"ஸார்... மினிஸ்டர் உள்ளே வந்துட்டிருக்கார்."

மஹாதேவ் எல்லாவற்றையும் மறந்தவராய், ஹாலில் பரவியிருந்த கும்பலை விலக்கிக்கொண்டு ஹாலின் முகப்பை நோக்கிப் போக - சற்றுத்தூரத்திலேயே எதிரில் செக்யூரிட்டி அதிகாரிகளுக்கு நடுவில் மினிஸ்டர் தேசாய் சிரித்த முகத்தோடு வந்துகொண்டிருந்தார்.

மஹாதேவ் கும்பிட்டார்.

"தேங்க்ஸ் ஃபார் யுவர் வேல்யபிள் விசிட்... ஸார்"

தேசாய் சிரித்தார்.

"இதில் நன்றி சொல்ல என்ன இருக்கிறது மிஸ்டர் மஹாதேவ். என்னுடைய மகளுக்குத் திருமண நிச்சயதார்த்தம் என்றால், நீங்கள் வரமாட்டீர்களா என்ன?"

''இல்லை... ஸார்... நான் வருவதற்கும் நீங்கள் வருவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது...''

''ஓ... அப்படியா..? அப்படியானால் அந்த வித்தியாசங்களையெல்லாம் என்ன என்ன என்று எழுதி அட்டவணை போட்டுக் கொடுத்துவிடுங்கள்.''

பக்கத்தில் இருந்தவர்கள் சிரித்தார்கள்.

''ப்ளீஸ் கம் ஸார்.''

மஹாதேவ், மேடைக்கு முன்பாய் இருந்த பிரத்யேகமாய்ப் போடப்பட்டு இருந்த வெல்வெட் குஷன் இருக்கைக்கு கூட்டிப்போனார்.

சித்தரஞ்சன் எதிர்பட, மஹாதேவ் அறிமுகப் படுத்தி வைத்தார்.

''ஸார்! இவர், மிஸ்டர் சித்தரஞ்சன்...! மாப்பிள்ளை சபரிவாசனின் அப்பா. 'மில்க்கிவே' ஐ.டி. கம்பெனியின் சேர்மன். இந்தியாவின் டாப் - 20 பிசினஸ்மேன்களில் இவரும் ஒருவர்.

''மதிப்பு மிக்க சம்பந்தி என்று சொல்லுங்கள்...''

''நிச்சயமாய்...''

அமைச்சர் தேசாயும், சித்தரஞ்சனும் முன்புற இருக்கைகளுக்குப் போய், பக்கம் பக்கமாய் உட்கார்ந்தார்கள்.

''மிஸ்டர் சித்தரஞ்சன்! உங்களைப்பற்றி, இரண்டு மாதங்களுக்கு முன்பு எகனாமிக்ஸ் டைமில் எழுதியிருந்தார்கள். படித்துப் பார்த்தேன். பிசினஸை ஆரம்பித்த காலத்தில் நிறைய சிரமப்பட்டு இருப்பீர்கள் போலிருக்கிறதே!''

சித்தரஞ்சன் புன்னகைத்தார்.

''அதை வார்த்தைகளில் சொல்ல முடியாது... ஸார். எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு கடுமையாக உழைத்தேன். மெல்ல மெல்ல முன்னுக்கு வந்தேன்...''

'' 'ஹார்ட் அண்ட் சின்சியர் ஒர்க் வில் பி ரிவார்டட்' என்று சொல்வார்கள். உங்கள் வாழ்க்கையில் அது நடந்துவிட்டது.''

''பை... காட்ஸ் க்ரேஸ்...! ஆனால், நான் மிகவும் எதிர்பார்த்த ஒன்று நடக்காமல் போனதில் எனக்குக் கொஞ்சம் வருத்தம்''

''அப்படி என்ன நடக்காமல் போய்விட்டது.''

சித்தரஞ்சன் குரலைத் தாழ்த்தினார். ''இந்தியாவின் டாப் - 20 பிசினஸ்மேன்களில் 15வது இடத்தில் இருக்கிற கோர்தன் மித்ரா, தன்னுடைய ஒரே மகளை, என் மகன் சபரிவாசனுக்கு திருமணம் செய்து கொடுக்க முன் வந்தார்.''



''ஆஹா...! அருமையான சம்பந்தமாயிற்றே..? ஏன் நழுவிப் போயிற்று..?''

''காரணம் என் மகன்...''

''ஏன் என்னவாயிற்று..?''

''உங்கள் பிரதான காரியதரிசி மஹாதேவின் மகள் ப்ரீதாவை, ஏதோ ஒரு விழாவில் என் மகன் பார்த்து இருக்கிறான். பிடித்துப் போயிற்று. 'எனக்குத் திருமணம் என்றால் அவளோடுதான்' என்று தீர்மானமாய்! சொல்லிவிட்டான். எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது. எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவன் கேட்கவில்லை. பிறகு மஹாதேவைத் தேடிப்போய்ப் பெண்ணைக் கேட்க வேண்டியதாயிற்று.''

தேசாய் மெல்ல சிரித்தார்.

''ஸ்டேட்டஸில் மஹாதேவ் உங்கள் அளவுக்கு இல்லாமல் போனாலும், நல்ல மனிதர். நேர்மையானவர். நான் செய்யும் தவறுகளையே சுட்டிக்காட்ட தயங்காதவர். அவருடைய பெண் ப்ரீதாவும் அழகான அமைதியான பெண். இது போன்ற ஒரு மருமகள் உங்களுக்குக் கிடைப்பது கஷ்டம்தான்..!''

மஹாதேவ் பக்கத்தில் வந்தார்.

''ஸார்! ஃபங்க்ஷனை ஆரம்பித்துவிடலாமா?''

''ம்... ஆரம்பியுங்கள்...''

மஹாதேவ், மேடையின் பின்பக்கம் இருந்த ப்ரீதா தங்கியிருந்த அறையை நோக்கிப் போனார். மனைவி புனிதா எதிர்பட்டாள்.

''என்ன... புனிதா..! ப்ரீதா ரெடியா..?''

''அவ எப்பவோ ரெடி..! பட்டுப்புடவை கட்டிகிட்டு பொழுது போகாமே லேப்டாப் பார்த்துகிட்டு உட்கார்ந்துட்டிருக்கா...''

''போய்க் கூட்டிகிட்டு வா... ஃபங்க்ஷனை ஸ்டார்ட் பண்ணிடலாம்.''

''இதோ..!'' புனிதா, மேடைக்குப் பின்புறம் இருந்த அறைக்குள் நுழைந்தாள். ''ப்ரீதா!'' குரல் கொடுத்துக் கொண்டே அறைக்குள் பார்த்தாள்.

ப்ரீதா அறைக்குள் இல்லை.

'எங்கே போனாள்?'

'பாத்ரூமுக்குள் இருக்கிறாளோ?'

புனிதா வேகமாய்ப் போய்... கதவைத் தள்ளி உள்ளே பார்த்தாள்.

வாஷ்பேசினுக்குப் பக்கத்தில் -

பளபளப்பான மார்பிள் தரையில், மல்லாந்து விழுந்து

இருந்தாள் ப்ரீதா. பின்னந்தலைக்கு இரண்டு பக்கமும் ரத்தம், ஒரு குளம் போல் தேங்கியிருந்தது.




"எடிசன்!"

புரபசர் நமோ நாராயணன் குரல் கொடுக்க, அல்ட்ரா மைக்ராஸ்கோப் வழியாக எதையோ உன்னிப்பாய் பார்த்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் நிமிர்ந்தான்.

"ஸார்..."

அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருந்த நமோ நாராயணன் தன் கையில் அந்த ஆங்கில நாளிதழை நீட்டினார். வெள்ளை நிற ஷெர்வானி அவர்க்குப் பொருத்தமாயிருந்தது.

"இதுல ஒரு ஆர்ட்டிக்கிள் வந்திருக்கு... படிச்சுப் பார்த்தியா?"

"காலையிலேயே ப்டிச்சுப் பார்த்துட்டேன் ஸார். கட்டுரையோட தலைப்பு **நோ டிசீஸ்; நோ மெடிசன் (NO DISEHSEN; NO MEDICINE)** தானே?"

"அதேதான்..! நம்முடைய பாரத பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் மட்டுமே மக்கள் ஒழுங்காய்க் கடைபிடிச்சுட்டு வந்து இருந்தா - இந்த ஹார்ட் அட்டாக், ப்ளட் ப்ரஷர், சுகர், கான்சர் போன்ற பயம் காட்டும் நோய்களே இந்தியாவுக்குள் வந்து இருக்காது. நம்ம பாரத கலாச்சாரத்தோடு ஐரோப்பிய கலாச்சாரம் கலக்கப் போய்த்தான் - இத்தனை நோய்களும் ஏற்பட்டு இருக்குன்னு கட்டுரையில் ஆதாரங்களோடு சொல்லியிருக்காங்க.

"அதுல இன்னொரு விஷயமும் இருக்கு ஸார். நமது ஆன்மீக எண்ணப்படிப் பார்த்தால் எதுவுமே நோய் இல்லை. 'நம்முடைய எண்ணங்கள் கொந்தளிக்கும் போது ஏற்படும் உணர்வுகள்தான் நோய்'ன்னு சொல்லியிருக்காங்க. தன்னம்பிக்கையோடு இருந்தா, உடம்பில் உற்பத்தியாகிற கிருமிகள் எண்ணிக்கை மிக மிகக் குறைவாய் இருக்கிறதாய்ச் சொல்லியிருக்காங்க. அதே நேரத்தில் நாம், 'ஆரோக்கியமாய் இருக்கிறோம்' என்று நினைத்துக் கொண்டாலே உடம்பில் இருக்கிற கிருமிகள் அழிந்து போய்விடுகின்றனவாம்."

"இது நம்பும்படியாகவா இருக்கு..?"

"ஸாரி ஸார்."



"எதுக்கு ஸாரி?"

"அது நம்பறமாதிரி இருக்கு ஸார்... நான் நம்பறேன்."

"எடிசன்..! நீ என்ன சொல்றே...?"

"ஸார்... நான் கிராமத்துல இருந்தபோது என்னோட வீட்டுக்கு எதிர்ல ஸ்கூல்வாத்தியார் ஒருத்தர் குடியிருந்தார். அவர் நல்ல ஆரோக்கியத்தோடு இருந்தார். திடீர்ன்னு ஒருநாள், அவர்க்கு காய்ச்சல் வந்தது. வந்த காய்ச்சல் உடனடியாய்க் குணமாகலை. தொடர்ந்து அவரால சாப்பிட முடியலை. உடம்புக்கு ஏதேதோ பிரச்னைகள். ஸ்கூலுக்கு ரெண்டு மாசம் லீவு போட்டுட்டு அலோபதி, ஹோமியோபதி, ஆயுர்வேதம்ன்னு வரிசையாய் மருந்து சாப்பிட்டும் அவரோட நோய் குணமாகலை. ஒரு நாள் திடீர்ன்னு எல்லா மருந்துகளையும் நிறுத்தினார். 'எனக்கு எந்த நோயும் இல்லை. நான் இனிமேல் எந்த மருந்தையும் சாப்பிடப் போறது இல்லை. வழக்கமான உணவைச் சாப்பிட்டு, எப்பவும் ஸ்கூலுக்கு போறமாதிரி போறேன். என்னோட வேலையைப் பார்க்கிறேன். இனிமேல் எந்த டாக்டரையும் போய்ப் பார்க்கமாட்டேன்' என்று சொல்லி, அதன்படியே நடந்தார். ஒரே மாசம்தான்! அவர் பழைய ஆரோக்கியத்துக்குத் திரும்பினார்."

"ஈஸிட்...?"

"உண்மைதான் ஸார்...! அந்தக் கட்டுரையோட கடைசி வாக்கியங்கள் என்ன சொல்லுதுன்னு பார்த்தீங்களா ஸார்? நோயை வென்று குணமாக வேண்டும் என்ற அவசரமும், பதட்டமும், கவலையும் கொண்டவர்களுக்கு - அது எந்த நோயாக இருந்தாலும் குணம் கிடைப்பது இல்லை. அந்த நோயை அலட்சியப் படுத்தி ஓய்வாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் - அவர்கள் விரைவில் குணம் பெறுகிறார்கள். **எ க்காம் மைண்ட் க்யூர்ஸ் அல்செர்ஸ் அண்ட் அதர் டிஸ்ஆர்டர் (A CALM MIND CURES ULCERS AND OTHER DISORDERS).**

"இந்தக் கட்டுரையோட வாசகங்கள் - எனக்கு உடன்பாடு இல்லை எடிசன். எந்த நோய் யார்க்கு வந்தாலும், அவங்களால அமைதியாய் இருக்கமுடியாது. கவலைப்படாமலும் இருக்க முடியாது. சிரத்தையோடு உரிய ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டாத்தான் குணமாகும். எல்லாமே மரபணுக்களோட வேலை...."

புரபசர் நமோ நாராயணன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவருடைய செல்ஃபோன்

குரல் கொடுத்தது. தன் கையில் இருந்த செல்ஃபோனை அவனிடம் கொடுத்தார்.

''எடிசன்..! அது யார்ன்னு பாரு... வெரி இம்பார்ட்டண்ட் பர்சனாய் இருந்தா என்கிட்டே குடு. இல்லேன்னா நான் பிஸியாய் இருக்கிறதாய் நீயே சொல்லிடு.''

''எஸ்.... ஸார்...''

எடிசன் செல்ஃபோனை வாங்கிப் பேசினான்.

''எஸ்...''

''புரபசர் நமோ நாராயணன்?''

''நீங்க..?''

''நான் சுப்ரஜா... பேங்க் ஸ்டாஃப்...''

எடிசன் செல்ஃபோனை உள்ளங்கையில் மூடிக் கொண்டு புரபசரை ஏறிட்டான். ''ஸார்..! பேங்க் ஸ்டாஃப் சுப்ரஜா பேசறாங்க.''

''குடு ஃபோனை..'' வாங்கி - காதுக்கு ஒற்றி, முகம் நிறைய புன்னகையோடு பேசினார்.

''சொல்லுங்க மிஸ் சுப்ரஜா...''

''ஸார்... போன வாரம் நீங்க கொடுத்த டாக்குமெண்டேஷனை வெரிஃபை பண்ணிப் பார்த்ததுல ஒரு இடத்துல நீங்க கையெழுத்துப் போட மறந்துட்டீங்க. அதிலேயும் கையெழுத்து போட்டுக் குடுத்துட்டா பரவாயில்லை ஸார்.''

''அதுக்கென்ன போட்டுக் கொடுத்துடலாம். நான் ரெண்டு நாள்ல சென்னைக்கு வரும்போது.''

''ஸார்... நானே டாக்குமெண்டேஷன்களை எடுத்துக்கிட்டு உங்க ரிசர்ச் சென்டர்க்கு வந்துட்டேன். இப்ப ரிசப்ஷன்ல இருக்கேன். 'அப்பாயிண்ட்மெண்ட் இல்லாமே உள்ளே அனுப்பமுடியாது'ன்னு உங்க செக்யூரிட்டி ஆஃபீஸர் சொல்லிட்டு இருக்கார். அதான் உங்களுக்கு ஃபோன் பண்ணினேன்...''

''ஓ...! நீங்களே வந்துட்டீங்களா? தட்ஸ் குட்... செக்யூரிட்டிகிட்ட ஃபோனைக் குடுங்க... நான் சொல்லிடறேன்.''

''ஒன்... மினிட் ஸார்...''

சில விநாடிகளுக்குப் பின்...

செக்யூரிட்டி அதிகாரியின் குரல் கேட்டது.

''ஸார்...''

''அந்தப் பெண் சுப்ரஜாவை உள்ளே அனுப்பு''

''எஸ்... ஸார்...''

செல்ஃபோனை அணைத்துக் கொண்டே எடிசனை



ஏறிட்டார். ''எடிசன்...! பேங்க் ஸ்டாப் சுப்ரஜா வர்றாங்க. அவங்களைக் கூட்டிகிட்டு என்னோட ரூமுக்கு வந்துடு.''

எடிசன் தலையாட்டிக் கொண்டே எழுந்தான். புரபசர் நமோ நாராயணன் பக்கத்து காரிடாரில் நடந்து, புல்வெளியை ஒட்டியிருந்த தன்னுடைய அறைக்குள் நுழைந்து எக்ஸிக்யூடிவ் நாற்காலிக்குச் சாய்ந்தார்.

ஐந்து நிமிட காத்திருப்புக்குப் பின் -

எடிசன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான்.

அவன் முகம் லேசாய் மாறியிருந்தது.

''என்ன எடிசன்..! சுப்ரஜா எங்கே?''

''ஸார்... வந்தது சுப்ரஜா இல்லை...''

''பின்னே..?''

''வேற ஒரு பெண். பேரு மனோரஞ்சிதம்.''

புரபசரின் முகம் கோபத்துக்குப் போயிற்று.

''யார் அது..?''

''ப்ரஸ் ரிப்போர்ட்டராம்... சுப்ரஜாவோட ஃப்ரெண்டாம். உங்களைப் பார்த்து, பேட்டி எடுக்கணுமாம். அதனால்தான் சுப்ரஜான்னு பொய் சொல்லிட்டு வந்திருக்காளாம்...''

''நான்சென்ஸ்..! அவளை நான் பார்க்க விரும்பலை அப்படியே திருப்பி அனுப்பு... பொய் சொல்றவங்களை எனக்குப் பிடிக்காதுன்னு சொல்லு.'' புரபசர் பேசி முடிக்கவில்லை. சாத்தியிருந்த கதவைத் திறந்து கொண்டு, மனோரஞ்சிதம் உள்ளே வந்தாள்.

''ஸாரி... ஸார்... எனக்கும் பொய் சொல்றது பிடிக்காதுதான். உங்களைப் பார்த்து பேச எனக்கு வேற வழி தெரியலை. அதான் பொய் சொல்லிட்டேன்...''

புரபசரின் பார்வையில் நெருப்புத் தெரிந்தது.

''இதோ பார்..! இது ஒரு ரிசர்ச் சென்டர். உன்னை மாதிரியான ப்ரஸ் ரிப்போர்ட்டர்களுக்கு இடமில்லை... போயிடு...!''

''ஓ.கே... ஸார்... நான் ஒரு ப்ரஸ் ரிப்போர்ட்டரா வரலை. ஒரு இந்தியக் குடிமகளாய் உங்களைப் பார்க்க வந்திருக்கேன். இதற்காவது அனுமதி உண்டா?''

புரபசர் அவளையே பார்த்தார்.

மனோரஞ்சிதம் தொடர்ந்தாள்.

''ஸார்..! நான் காலேஜ்ல படிக்கிற நாளில் இருந்தே. இந்தச் சமுதாயத்தை சுத்தப்படுத்தணும் என்கிற எண்ணத்தை வளர்த்துகிட்டேன். அதுக்காகத்தான் ஜர்னலிஸம் எடுத்துப் படிச்சேன். படிச்சு முடிச்சதும் ஒரு

பத்திரிகையில் போய் ஜாய்ன் பண்ணினேன். பத்திரிகை மீடியா ஒரு பவர்ஃபுல் மீடியா. பேனா, அதைக் காட்டிலும் ஒரு பவர்ஃபுல் வெப்பன். துப்பாக்கிக்கு பயப்படாத அரசியல்வாதிகள், என் கையில் இருந்த பேனாவைப் பார்த்து பயப்பட்டாங்க ஸார். இன்னமும் பயந்துட்டு இருக்காங்க. என்னோட எழுத்துக்களை பொறுத்துக்க முடியாதவங்க என்னையே தீர்த்துக்கட்ட முயற்சி பண்ணினாங்க. ரெண்டுதடவை முயற்சி நடந்தது. நான் தப்பிச்சுகிட்டேன். நான் இதுவரைக்கும் யாரையும் விரும்பிப் போய்ப் பார்த்தது கிடையாது ஸார். பார்த்தாகணுமேன்னு போய்ப் பார்ப்பேன். ஆனா, என்னோட வாழ்க்கையில் முதல்தடவையாய் நானாக விரும்பி உங்களைப் பார்க்க வந்திருக்கேன்."

"என்னை எதுக்காக நீ பார்க்கணும்?"

"காரணம் நீலநிற மல்லிகை..! நேற்றைக்கு என்னோட பர்த்டே ஸார். சுப்ரஜா என்னோட பிறந்த நாள் பரிசாய் உங்க ரிசர்ச் கார்டனில் இருந்து பறிச்சுட்டு வந்த நீலநிற மல்லிகைப்பூக்களை எனக்குக் கொடுத்தா. நான் பிரமிச்சுப் போயிட்டேன். சுப்ரஜா உங்களைப்பற்றி சொன்னதும் அந்த நிமிஷமே உங்களைப் பார்க்கணும் போல் எனக்கு இருந்தது. சுப்ரஜாகிட்டே என்னோட விருப்பத்தைச் சொன்னேன். நீங்க யாரையுமே பார்க்க விருப்பப்படறதில்லைன்னு சொன்னா. இருந்தாலும் நான் என்னோட முயற்சியை விடலை. உங்களை எப்படியாவது பார்த்துடணும்ன்னு நினைச்சுத்தான் ஃபோன்ல சுப்ரஜா மாதிரி பேசினேன்."

"சரி...! இப்ப உனக்கு என்ன வேணும்?"

"ஸார்... இயற்கைக்கே சவால் விடற மாதிரி நீங்க தாவரங்களோட ஜாதகத்தையே மாத்தி எழுதிட்டு வர்றீங்க. இந்த ஆராய்ச்சி சிதுக்காக..? இந்த ஆராய்ச்சி மூலமாய் உலகத்துக்கு என்ன நன்மை கிடைக்கப்போகுது? உலகளவில் இது பேசப்படும்போது. இந்தியாவுக்குக் கிடைக்கப்போகும் கௌரவம் என்ன? இப்போதைக்கு என்னோட மனசில் உள்ள கேள்விகள் இதுதான் ஸார். இதற்கான பதில்கள் உங்க மூலமாய். கிடைச்சா நான் ரொம்பவும் சந்தோஷப்படுவேன் ஸார்"

புரபசர் நமோ நாராயணன் முகத்தில் இப்போது கோபம் மறைந்து போயிருந்தது. முகம் இயல்பான நிலைக்குத் திரும்பியிருந்தது.

நடிசனை ஏறிட்டார். "நீ என்ன சொல்றே?"

"ஸார்..! நம்ம ஒய்.டி.டி ரிசர்ச் செண்டரைப் பற்றி



இதுவரையில் எந்தவொரு பேட்டியும் பத்திரிகைகளில் வந்தது இல்லை. முதல்தடவையாய் ஒரு பேட்டி கொடுத்துப் பார்க்கலாமே...."

"இட்ஸ் ஓ.கே..." என்று தலையசைத்த நமோ நாராயணன், மனோரஞ்சிதத்தின் பக்கம் திரும்பினார்.

"இதோ... பாரம்மா... நீ சுப்ரஜாவோடு நெருங்கிப் பழகற தோழியாய் இருக்கிற காரணத்தாலும், இந்தச் சமுதாயத்து மேல ஒரு ஈடுபாட்டோடு இருக்கிறதாலேயும் உனக்குப் பத்து நிமிஷம் டயம் தர்றேன். அதுக்குள்ளே நீ கேட்க வேண்டியக் கேள்விகளைக் கேட்டுட்டு, பேட்டியை முடிச்சுக்கணும். உன்கிட்ட மணிக்கணக்கில் பேசிட்டு இருக்க எனக்கு நேரம் கிடையாது."

"எனக்கு ஒரு பத்து நிமிஷம் போதும் ஸார்."

"அப்புறம் இன்னொரு விஷயம்..."

"சொல்லுங்க ஸார்..."

"பேட்டியைப் பத்திரிகையில் பிரசுரிக்கிறதுக்கு முந்தி, அந்தக் கட்டுரையோட காப்பியை என்கிட்டே காட்டணும்... அதை நான் படிச்சுப்பார்த்து, காண்ட்ராவர்ஸியாய் ஏதாவது இருந்தா அதை டெலிட் பண்ணிடுவேன்."

"ஓ.கே. ஸார்..! நீங்க அந்தக் கட்டுரையை எப்படி வெளியிடணும்ன்னு சொல்றீங்களோ அதே மாதிரி பப்ளிஷ் பண்ணிடறேன்..."

"சரி...இப்ப நீ என்ன கேக்கணுமோ... அதைக் கேளு! பத்து நிமிஷத்துக்கு மேல உனக்கு டயம் கிடையாது."

மனோரஞ்சிதம் தன்னுடைய ஹேண்ட் பேக்கைத் திறந்து ஒரு சிறிய டேப் ரிக்கார்டரையும், நோட்புக் பேனாவையும் எடுத்துக் கொண்டாள். டேப் ரிக்கார்டரை ஆன் செய்துவிட்டு கேள்விகளை ஆரம்பித்தாள்.

"ஸார்... என்னுடைய முதல் கேள்வியே நீல நிற மல்லிகையிலிருந்து ஆரம்பமாகிறது. எதுக்காக இப்படியொரு ஆராய்ச்சி? மல்லிகையென்றால் வெண்மைதான்...! அதை நீங்க நீல நிறத்துல பூக்க வெச்சிருக்கீங்க. இதுக்கு என்ன காரணம்...? இதனால என்ன பயன்..?"

நமோ நாராயணன் உதட்டில் ஒரு புன்னகை பிறந்தது.

"இது ஒரு சிக்கலான கேள்வி. இந்தக் கேள்விக்கான பதிலைச் சொல்றதுக்கு முந்தி, உனக்குச் சின்னதாய் ஒரு எல்.கே.ஜி. பாடம் நடத்தணும். இந்த உலகத்தில் இருக்கிற ஒவ்வொரு உயிரும் - அதாவது, பீன்ஸிலிருந்து பின்லேடன் வரை செல்களால் ஆனவை. இந்த உலகத்துல முதன் முதலாய் தோன்றிய, ஒருசெல்

உயிரினம் அமீபா. அதைத் தொடர்ந்து கோடிக்கணக்கான செல்களைக் கொண்ட உயிரினங்கள் படிப்படியாய் உருவாக ஆரம்பிச்சன... அந்த உயிரினத்தோட செல்களில் பாரம்பரிய குணங்கள் எழுதப்பட்ட மரபணுக்கள் - அதாவது, ஜீன்ஸ் அடங்கிய 23 ஜோடி குரோமோ ஸோம்கள் பொதிஞ்சிருக்கு. மனுஷன் மனுஷனாகவும், விலங்கு விலங்காகவும், தாவரம் தாவரமாகவும் இனப்பெருக்கம் அடையறதும், வளர்ச்சியடையறதும் இந்த மரபணுக்களால்தான். மரபணுவில் ஏதாவது ஒரு மாற்றம் நடந்தா, அந்த உயிரின் பழக்க வழக்கங்களிலும் நடைமுறைகளிலும் மாற்றம் ஏற்படும்.''

மனோரஞ்சிதம் குறுக்கிட்டாள்.

''இப்பப் புரியுது ஸார்''

''என்ன புரியுது?''

''வெள்ளை நிறத்தில் இருந்த மல்லிகைப் பூவை மரபணு மாற்றம் பண்ணி நீல நிறமாய் மாற்றியிருக்கீங்க! சரியா... ஸார்... மரபணு மாற்றம் பண்ணின கத்திரிக்காய் மாதிரி.''

நமோ நாராயணன் சிரித்தார்.

''இப்ப நீ சொன்னதெல்லாம் ரொம்பப் பழசு... அது மாதிரியான ஆராய்ச்சிகளுக்கு எல்லாம் நான் மூடுவிழா பண்ணி ரொம்பநாளாச்சு. என்னோட ஆராய்ச்சியின் நோக்கமே ஒரு புதிய மரபணுவை - அதாவது, ஒரு புது உயிரை உருவாக்கறதுதான்.''

மனோரஞ்சிதத்தின் கண்களில் வியப்புப் பரவியது.

''என்ன ஸார் சொல்றீங்க... புதிய உயிரா..?''

''எஸ்.... அதை புதிய உயிர்ன்னு சொல்றதைக் காட்டிலும் செயற்கையான செல்களால் உருவாக்கப்பட்ட உயிர்ன்னு சொல்லலாம்.... சுப்ரஜா உனக்குக் கொண்டு வந்து கொடுத்த நீலநிற மல்லிகை, செயற்கை செல்களில் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட மல்லிகைச் செடியிலிருந்து பூத்தவை.''

''ஸார்... நம்பறதுக்கே கஷ்டமாய் இருக்கு...''

''இப்போ அப்படித்தான் இருக்கும். இந்த செயற்கை செல் தயாரிப்பு நடைமுறைக்கு வரும்போதும், அது மனிதர்களின் வாழ்க்கையில் பயன்பாட்டுக்கு வரும்போதும் நீ நம்ப வேண்டியிருக்கும்.''

''ஸார்..! ஒரு மல்லிகைப்பூச் செடியைச் செயற்கை செல்களால் உருவாக்கி, அதுல நீலநிறப் பூக்களையும் பூக்க வெச்சு சாதனை பண்ணியிருக்கீங்க. அதே மாதிரி, செயற்கை செல்லால் நெற்பயிர்களையும், மற்ற உணவுப்



பயிர்களையும் உண்டாக்க முடியுமா..?''

''அதுக்கான முயற்சிகள்தான் நடந்துகிட்டு இருக்கு.... அந்த முயற்சிகள் வெற்றி பெறும்போதுதான் மீடியாக்களுக்கு இந்தச் செயற்கை செல்லைப்பற்றி தெரிவிக்கலாம்ன்னு இருந்தேன். அதுக்குள்ள நீ வந்துட்டே...!''

''அதுக்கான முயற்சிகள்தான் நடந்துகிட்டு இருக்கு... அந்த முயற்சிகள் வெற்றி பெறும்போதுதான் மீடியாக்களுக்கு இந்தச் செயற்கை செல்லைப்பற்றி தெரிவிக்கலாம்ன்னு இருந்தேன். அதுக்குள்ளே நீ வந்துட்டே...!''

''ஸார்! உங்க ரிசர்ச் செண்ட்டர்க்கு 'ஒய்.டி.டி.' ன்னு பேர் வெச்சு இருக்கீங்க... அது என்ன ஒய்.டி.டி.?''

**''எஸ்டர்டே - டுடே - டுமாரோ''** இந்த வார்த்தைகளின் முதல் எழுத்துக்கள்தான் **ஒய்.டி.டி.**''

''எதுக்காக இப்படியொரு பேர்...?''

''உயிரியல் துறையில் நாள்தோறும் ஏதாவது ஒரு நாடு ஏதாவது ஒரு புரட்சியைப் பண்ணிட்டே இருக்காங்க... நேற்றுவரை **க்ளோனிங்** பரபரப்பாய் பேசப்பட்டது. இன்று மரபணுவில் மாற்றம் என்கிற **ஜீன் தெரபி.** நாளைக்கு இந்தச் செயற்கை செல் உருவாக்கம்.''

''இந்தச் செயற்கை செல்லுக்கு ஏதாவது பேர் உண்டா?''

''உண்டு..! ஒரு குழந்தை பிறந்துட்டா அதுக்கு பேர் வெச்சாகணுமே... இந்த செயற்கை செல்லுக்கும் ஒரு பேர் உண்டு.''

''என்ன பேர் ஸார்?''

**''செல் - ஜென்மா...''**

''பொருத்தமான பேர் ஸார்...'' மனோரஞ்சிதம் சொல்லிச் சிரித்துக் கொண்டு இருக்கும்போதே... வெளியே அறையையொட்டியிருந்த ஜன்னலுக்குப் பக்கத்தில் ஏதோ சத்தம் கேட்டது.

மனோரஞ்சிதம் சட்டென்று திரும்பிப்பார்த்தாள்.

ஜன்னலுக்கு வெளியே - கம்பிகளுக்கு அப்பால் அந்த இளம் பெண்ணின் முகம் கலவரமாய்த் தெரிந்தது. கண்களில் நீர்.

அவளுடைய நெற்றியில் புடைப்பாய் ஒரு காயம் தெரிய, ரத்தம் கன்னத்தில் கோடு போட்டிருந்தது.

புரபசர் நமோ நாராயணன் திடுக்கிட்டுப் போனவராய் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார். எடிசனைப் பார்த்து கோபாவேசமாய்க் கத்தினார்.

''எடிசன்..! நம்ம ஆட்கள் என்ன பண்ணிட்டு

இருக்காங்க பார்.

வசந்தி செல்லிலிருந்து தப்பிச்சு வெளியே வந்துட்டா... அவளை மொதல்ல பிடி!''

எடிசன் வெளியே ஓடினான்.




ப்ரீதா விழுந்த கிடந்த கோலத்தைப் பார்த்ததும் புனிதா வீறிட்டு அலற, ஹாலில் இருந்த மஹாதேவும், சித்தரஞ்சனும், சபரிவாசனும் ஓடிவந்தார்கள்.

சவரோரமாய் ரத்தத்தில் நனைந்து கிடந்த ப்ரீதாவைப் பார்த்ததும் உறைந்து போனார்கள். கும்பல் சேர ஆரம்பித்தது.

அமைச்சர் தேசாயின் பாதுகாப்புக்காக வந்து இருந்த போலீஸ் அதிகாரிகளில் ஒருவரான ஷ்யாம் சுந்தர், நிலைமையின் விபரீதத்தை உணர்ந்தவராய் ப்ரீதாவுக்குப் பக்கத்தில் போய் மண்டியிட்டு உட்கார்ந்து அவளுடைய தோள்பட்டையைப் பிடித்துத் திருப்பினார். ப்ரீதாவின் கடைவாயிலிருந்து ரத்தம் வழிந்தது.

உடம்பில் உயிர் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள அவளுடைய நாசியருகே தன் புறங்கையை வைத்துப் பார்த்தார்.

நூலிழையாய் மூச்சுக்காற்று வந்தது.

ஷ்யாம் சுந்தரர் முகம் மலர்ந்தவராய் தலையை உயர்த்தி கத்தினார். ''இங்கே யாராவது டாக்டர் இருக்கிறாரா..? இருந்தால் உடனே வாருங்கள். இந்தப் பெண்ணுக்கு உயிர் இருக்கிறது. முதல் உதவி அளித்து ஹாஸ்பிட்டலுக்குக் கொண்டுசென்றால் உயிர் பிழைக்க வைத்துவிடலாம்...''

மஹாதேவும் புனிதாவும் தற்காலிகமாய் ஒரு சந்தோஷத்துக்குப் போக, அடுத்த நிமிடத்திற்குள் டாக்டர் ஒருவர் வேக வேகமாய் ஷ்யாம் சுந்தர்க்குப் பக்கத்தில் வந்தார்.

''நான், டாக்டர் பவன்குமார்... டெல்லி ராம்மனோகர் லோகியா ஹாஸ்பிடலில் பணிபுரிகிறேன்... மஹாதேவின் குடும்ப டாக்டர்.''

''ப்ளீஸ் டாக்டர்...! இந்தப் பெண்ணுக்கு இன்னமும் சுவாசம் இருக்கிறது. நீங்கள் எக்ஸாமின் செய்து பாருங்கள்.''

டாக்டர் பவன் குமார் சுவாசத்தை பரிசோதித்துவிட்டு தலையாட்டினார். ''யூ...ஆர்... கரெக்ட்... இந்தப்



பெண்ணைக் காப்பாற்றிவிடலாம். முதலில் ஒரு பக்கெட்டில் தண்ணீரும் ஒரு சுத்தமான துணியும் வேண்டும். முதலில் எனக்கு அதை ஏற்பாடு செய்து கொடுங்கள்...''

அடுத்த இரண்டு நிமிடங்களில், ஒரு பக்கெட்டில் தண்ணீரும் சுத்தமான டவல்துணியும் வந்தன.

டாக்டர் பவன்குமார், ப்ரீதாவின் தலையைச் சற்றே உயர்த்திப் பிடித்துக்கொண்டு முகத்தில் படிந்து இருந்த ரத்தத்தைத் துடைத்தார். பிறகு, தலையின் எந்தப் பகுதியில் அடிபட்டு இருக்கிறது என்பதைப் பரிசோதித்துப் பார்த்தவர்க்கு வியப்பு மேலிட்டது.

ப்ரீதா தலையின் எந்த ஒரு பாகத்திலும் ஒரு சிறு காயம்கூட இல்லை.

'பின் எப்படி இவ்வளவு ரத்தம்?'

முகம் முழுவதும் குழப்பத்தை நிரப்பிக்கொண்டு சற்றுத் தள்ளியிருந்த மஹாதேவையும், புனிதாவையும் பார்த்து - பக்கத்தில் வரும்படி சைகைக் காட்டினார் பவன்குமார்.

அவர்கள் இருவரும் தவிப்போடு பக்கத்தில் வந்தனர். நடுக்கக் குரலோடு மஹாதேவ் கேட்டார். ''டாக்டர்..! ப்ரீதாவோட உயிர்க்கு எந்த ஒரு ஆபத்தும் இல்லையே..?''

''பை காட்ஸ் க்ரேஸ்... உங்க பொண்ணோட உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லை. பட்..! இவ்வளவு ப்ளட் லாஸ் எப்படின்னு தெரியலை. தலையைச் சோதித்துப் பார்த்ததில் ஒரு சின்ன ரத்தக்காயம்கூட இல்லை.... ரத்தம் வாயிலிருந்து வெளியே வந்து தலைப்பகுதி பூராவும் பரவியிருக்கு.. என்னோட சந்தேகமெல்லாம், 'உங்க பொண்ணு ப்ளட் வாமிட் பண்ணியிருக்கலாம்'ங் கிறதுதான்..! இதுக்கு முன்னாடி ப்ரீதா எப்பவாவது ப்ளட் வாமிட் பண்ணியிருக்காளா..?''

''இல்லையே... டாக்டர்..!''

''ஒரு வேளை, உங்களுக்குத் தெரியாமல் இருந்து இருக்கலாம். கண்டிப்பா உங்க பொண்ணுக்கு ப்ளட் வாமிட் பண்ற அளவுக்கு உடம்பு ரீதியாய் ஏதோ ஒரு பிரச்னை இருந்து இருக்கு...''

''அப்படியொரு பிரச்னை ப்ரீதாவுக்கு இருந்திருந்தா உங்களுக்குக் கண்டிப்பா தெரிஞ்சிருக்கும் டாக்டர்... ஏன்னா... நீங்கதான் எங்களுக்கு ஃபேமிலி டாக்டர்....''

''யூ... மே... பி... கரெக்ட்.... மஹாதேவ்...! ப்ரீதாவுக்கு இப்படி ஒரு பிரச்னை இருந்து அதை என்கிட்ட சொல்லப் பிரியப்படாமே, வேற ஒரு டாக்டர்கிட்டே போயிருக்கலாம்

இல்லையா..?

"அப்படிப் போயிருந்தா அது எங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே டாக்டர்?"

"மஹாதேவ்! நீங்க இப்படி பேசறது, உங்களை நீங்களே ஏமாத்திக்கிறதுக்குச் சமம்... ப்ரீதா உங்ககிட்டே சினிமாவுக்குப் போறேன்னு சொல்லிட்டு, வேற எங்கேயாவது போனா உங்களால அதைக் கண்டுபிடிக்க முடியுமா..?"

"முடியாது..."

"அது மாதிரிதான் இதுவும்..! ரத்தச் சேதத்தைப் பார்த்தா இது ஒரு சிவியர் வாமிட்டிங் மாதிரி தெரியுது. ப்ரீதாவுக்கு உடம்புரீதியாய் ஏதோ பிரச்னை."

அதுவரைக்கும் மௌனமாய் இருந்த போலீஸ் அதிகாரி ஷ்யாம் சுந்தர், பேச்சில் குறுக்கிட்டார்.

"டாக்டர்..! இது ஒரு கொலை முயற்சியாய் இருக்க வாய்ப்பு இல்லையா..?"

"அதை இப்போதே சொல்ல முடியாது... ப்ரீதாவை முதல்ல ஹாஸ்பிடலைஸ் பண்ணணும். ப்ளட் வாமிட்டுக்கு என்ன காரணம்ங்கிறதைக் கண்டுபிடிக்கணும்... அதுக்கப்புறம்தான் ஒரு முடிவுக்கு வரமுடியும்... ஆம்புலன்ஸுக்கு தகவல் கொடுத்துட்டீங்களா..?"

"கொடுத்தாயிற்று டாக்டர்..."

நடப்பவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த மஹாதேவின் தோள்மேல் கையை வைத்தார் சித்தாஞ்சன்.

மஹாதேவ் திரும்பினார்.

சித்தாஞ்சனின் கண்களில் கோபம்.

"என்ன இதெல்லாம்?"

"ஒண்ணும் புரியலை"

"ப்ரீதாவுக்கு இப்படியொரு உடல்ரீதியான பிரச்னை இருக்கிறதை முன்கூட்டியே எங்களுக்குச் சொல்லியிருக்கலாமே..? சொல்லியிருந்தால் ஏதாவது ஒரு வெளிநாட்டுக்குக் கூட்டிப்போய் ட்ரீட்மெண்ட் எடுத்து - குணப்படுத்தியிருக்கலாமே...! அதுக்கப்புறம் இந்த நிச்சயதார்த்தத்தை வெச்சு இருக்கலாமே..? இப்ப பாத்தீங்களா.. எவ்வளவு அவமானம்?"

"இதுல அவமானப்பட என்ன இருக்கு..? யாருக்கு எந்த நேரத்துல எது மாதிரியான பிரச்னை வரும்ன்னு யாருக்குத் தெரியும்...?"

"உங்களால இப்போதைக்கு இப்படித்தான் பேசமுடியும். ஏன்னா இதுல பாதிக்கப்பட்டது உங்க



பெண். இதே நிலைமை என்னோட பையனுக்கு ஏற்பட்டு இருந்தா உங்களோட பேச்சு வேறுமாதிரி இருந்து இருக்கும்..."

"ஸாரி... மிஸ்டர் சித்தரஞ்சன்..! நான் இப்போ இருக்கிற மனநிலைமையில் உங்களோடு ஆர்க்யூ பண்ணிட்டு இருக்கமுடியாது. அட் ப்ரசண்ட் என்னோட உடனடித் தேவை ப்ரீதா உயிர் பிழைக்கணும்... அதுக்கப்புறம்தான் அவளோட கல்யாணத்தைப் பத்தி யோசிக்கணும்."

"நல்லா யோசிங்க..! நானும் யோசனை பண்றேன். ப்ரீதா எனக்கு மருமகளா வரணும்ன்னா அவளுக்கு உடம்புரீதியாய் எந்த ஒரு பிரச்னையும் இல்லைன்னு குறைந்தபட்சம் மூணு டாக்டர்களாவது சர்ட்டிஃபை பண்ணணும். அதுல ஒருத்தர் வெளிநாட்டு டாக்டராய் இருக்கணும்...!"

சித்தாஞ்சன் பேசிய பேச்சுக்கு சூடாய் பதில் கொடுக்க வேண்டும் என்று மஹாதேவ் நினைத்த விநாடி, அமைச்சர் தேசாயின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் பக்கத்தில் வந்தார். "ஸார்..! அமைச்சர் உங்களைப் பார்க்கிறதுக்காக உள்ளே வந்து கொண்டு இருக்கிறார்."

"மஹாதேவ் சித்தாஞ்சனை மறந்தவராய் பாதுகாப்பு அதிகாரிக்குப் பின்னால் போக, அமைச்சர் தேசாய் எதிர்பட்டார். ஆதரவாய் மஹாதேவ்வின் கையைப் பற்றினார்.

"உங்க பொண்ணுக்கு உடம்புரீதியாய் என்ன பிரச்னைன்னு முதல்ல பாருங்க மிஸ்டர் மஹாதேவ்... மொதல்ல அவளை ஹாஸ்பிடலைஸ் பண்ணுங்க."

"எஸ்... ஸார்..."

"இஃப்... யூ... நீட் எனி மெடிக்கல் அஸிஸ்டன்ஸ் என்னோட பேரை யூஸ் பண்ணுங்க..."

"எஸ்... ஸார்..."

"அப்புறம்..." என்று சொல்லி குரலைத் தாழ்த்தினார் தேசாய். அவர் பார்வை அங்கும் இங்கும் அலைந்தது.

"சொல்லுங்க ஸார்..."

"என்னை வழியனுப்பறமாதிரி கார் வரைக்கும் வாங்க. உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்..." சொல்லிவிட்டு தேசாய் நடக்க ஆரம்பித்துவிட, அவர்க்கு இணையாய் நடந்தார் மஹாதேவ்.

மனசு கொந்தளித்தது.

'தேசாய் என்ன சொல்லப் போறார்..?'

இதயத் துடிப்பு அதிகரித்து. நெற்றியும்

பின்னங்கழுத்தும் வியர்த்தது.

தேசாய் காரை நெருங்கினார்.

பக்கத்தில் வந்த பாதுகாப்பு அதிகாரிகளைத் தள்ளி நிற்கச் சொல்லிவிட்டு மஹாதேவ், காதருகே குனிந்தார்.

''மஹாதேவ்..!''

''ஸார்...''

''நான் ஒரு விஷயம் சொன்னா தப்பாய் எடுத்துக்க மாட்டீங்களே?''

''நோ.. நோ... எதுவாய் இருந்தாலும் பரவாயில்லை ஸார். நீங்க சொல்லுங்க...!''

''உங்களுக்கு சம்பந்தியாய் வரப்போற சித்தரஞ்சன் சரியில்லை. நீங்க வேற ஒரு மாப்பிள்ளை பார்க்கிறது பெட்டர்.''

''ஸ...ஸ...ஸார்....''

''உங்க பொண்ணு ப்ரீதாவோட திடீர் உடல்நலக் குறைவுக்குக் காரணம் அவர்தான்..!''




மனோரஞ்சிதம் உறைந்து போயிருந்தாள்.

'ஜன்னலில் ரத்தக்காய முகத்தோடு எட்டிப் பார்த்த அந்தப் பெண் யார்?'

'புரபசர் நமோ நாராயணன் அந்தப் பெண்ணைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போய், ஏன் கத்த வேண்டும்..?'

'எடிசன் ஏன் அதிர்ச்சியோடு வெளியே ஓட வேண்டும்..?'

மனோரஞ்சிதம் மனசு பூராவும் முளைத்துக்கொண்ட கேள்விகளோடு நமோ நாராயணனை ஏறிட்டாள்.

''ஸ...ஸார்.. யார் அந்தப் பொண்ணு..?''

புரபசர் கோபமாய் நிமிர்ந்தார்.

''அது... அது... இங்கே வேலை பார்க்கிற பொண்ணு. நீ கிளம்பு. பேட்டி எடுத்தவரைக்கும் போதும்...''

மனோரஞ்சிதத்தின் முகம் லேசாய் மாறியது. ''ஸார்! அந்தப் பொண்ணுக்கு என்ன பிரச்னை..? அந்தப் பொண்ணோட நெற்றியில் ரத்தக்காயம் வேற இருந்தது. கண்களில் நீர்... சம்திங் ராங்க்... நான் அந்தப் பொண்ணைப் பார்க்கணும்...''

நமோ நாராயணன் நாற்காலியைத் தள்ளிக்கொண்டு ஆவேசமாய் எழுந்தார். ''இதோ பார்... நீ ஒரு ஜர்னலிஸ்ட்.. உன்னை உள்ளே விட்டதே தப்பு. ஏதோ



சுப்ரஜாவுக்கு நெருங்கின ஃப்ரண்ட் என்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான், உன்னை உள்ளே அலவ் பண்ணி உட்கார வெச்சுப் பேட்டியும் கொடுத்தேன். இது என்னோட பர்சனல் கேம்பஸ். இந்த கேம்பஸுக்குள்ளே எது நடந்தாலும் அது என்னோட ஆராய்ச்சி சம்பந்தப்பட்டது. நீ அதைப் பார்த்தும் பார்க்காதது போல்தான் இருக்கணும்...''

''ஸாரி புரபசர் ஸார்... அப்படியிருக்க நான் ஒண்ணும் ரோபோ கிடையாது. அந்தப் பொண்ணு இங்கே வேலை பார்க்கிற பொண்ணுன்னு சொன்னீங்க. அந்தப் பொண்ணு நார்மலாய் இருந்து ஜன்னலை எட்டிப் பார்த்திருந்தா, நானும் அதைக் கண்டுக்காமே இருந்து இருப்பேன். அந்தப் பொண்ணு நார்மலாய் இல்லை. நெற்றியில் ரத்தக்காயம், கண்களில் நீர். முகத்துல இனம் புரியாத ஒரு கலவரம். இதுக்கெல்லாம் எனக்குக் காரணம் தெரிஞ்சாகணும்.... இல்லேன்னா நான் போலீஸுக்கு ஃபோன் பண்ணுவேன்...''

நமோ நாரயணன், தன் சுட்டு விரலைக் கோபமாய் உயர்த்தினார்.

''வேண்டாம்..! நீ உன்னோட லிமிட்டைத்தாண்டி பேசிட்டு இருக்கே..! இது ஒரு ரிசர்ச் சென்டர். இங்கே நடக்கிற சில சம்பவங்கள் மற்றவர்களுக்கு ஆச்சர்யமாய்த்தான் இருக்கும்.''

''இது ஆச்சர்யமாய் இல்லை ஸார்... விபரீதமாய் இருக்கு. நான் அந்தப் பொண்ணைப் பார்க்கணும். அவகிட்டே பேசணும்...'' மனோரஞ்சிதம் தீர்மானமானக் குரலில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, எடிசன் உள்ளே வந்தான்.

''ஸார்... ப்ராப்ளம் சால்வ்ட்...''

''இப்ப... இங்கே புது ப்ராப்ளம் ஸ்டார்ட் ஆயிருக்கு எடிசன்...''

''என்ன ஸார்..?''

''இந்த மனோரஞ்சிதத்துக்கு வசந்தியைப் பார்க்கணுமாம். அவகூட பேசணுமாம்.''

''எதுக்கு ஸார்..?''

''அவ நெத்தியில ரத்தக்காயம் இருந்ததாம். அவ அழுதுட்டே ஜன்னல் வழியே பார்த்தாளாம். ஏதோ விபரீதம் மாதிரி தெரியுதாம்.''

எடிசனின் உதடுகளில் ஒரு புன்னகை அரும்பியது.

''ஸார்... ஷி.. மே... பி... கரெக்ட்... என்னா, ஒரு ஜர்னலிஸ்ட்டுக்கு இப்படிப்பட்ட சந்தேகமெல்லாம்

வாத்தான் செய்யும். அந்த சந்தேகத்தை கன்ஃபாம் பண்ணிக் கிட்டாத்தான், நிம்மதியா அடுத்த வேளை சோத்தையே அவங்களால சாப்பிட முடியும்.''

''சரி..! மனோரஞ்சிதத்தோட சந்தேகத்தைத் தீர்த்து வெச்சுடு எடிசன்.''

எடிசன் அவளிடம் திரும்பினான்.

''போலாமா?''

''எங்கே..?''

''அந்தப் பொண்ணு வசந்தியைப் பார்க்கத்தான்''

''நான் வரமாட்டேன்..! நீங்க போய் அவளைக் கூட்டிட்டு வாங்க... நான் இந்த இடத்துல வெச்சே அவகிட்டே பேசிக்கறேன்...''

''அவ இங்கே வரமாட்டா... நாமதான் அங்கே போகணும்! ம்.... வா... போலாம்... உனக்கு என்னென்ன சந்தேகம் இருக்கோ... அதையெல்லாம் நிதானமாய்க் கேட்டுத் தெளிவுபடுத்திக்கிட்டு வரலாம்.''

மனோரஞ்சிதம் எச்சரிக்கையானாள்.

'இவர்கள் பேச்சு சரியில்லை.'

'இந்த இடம் சரியில்லை.'

'முதலில் இங்கிருந்து கிளம்ப வேண்டும்!'

எடிசன் தலையைச் அவளை சாய்த்துப் பார்த்தான்.

''என்ன யோசனை..?''

''ஒண்ணுமில்லை... இது தேவையில்லாத விவகாரம்ன்னு என்னோட மனசுக்குப்படுது. நான் கிளம்பறேன்.''

''என்னது..! கிளம்பறியா?''

''ம்...''

''எங்கே...?''

''என்னோட வீட்டுக்குத்தான்..!''

''பார்த்தியா... பொய் சொல்றே..!''

''பொய்யா?''

''ம்... பொய்தான்! நீ இந்த ரிசர்ச் சென்ட்டரை விட்டு வெளியே போனதும் உன்னோட வீட்டுக்குப் போகமாட்டே. நேரா போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் போவே. நான் சொன்னது சரியா..?''

''இ... இல்ல''

''இதுவும் பொய்...'' எடிசன் சிரித்துக்கொண்டே பார்த்த பார்வையில், மனோரஞ்சிதத்தின் அடி வயிறு கலங்கியது.

'வெளியேயும் போகமுடியாது போலிருக்கிறதே..!'

'அவசரப்பட்டு வார்த்தையை விட்டது தவறு!'



எடிசன் பக்கத்தில் வந்தான். அவளுடைய மன ஓட்டத்தைப் புரிந்துகொண்டதுபோல் பேசினான்.

''இனிமேல் யோசனை பண்ணி ஒரு பிரயோஜனமும் இல்லை. நீ பார்க்கக்கூடாததைப் பார்த்துட்டே. பேசக்கூடாததை பேசிட்டே. நாங்க இதுக்கு ஏதாவது பரிகாரம் பண்ணியாகணுமே..! என்ன பண்ணலாம் நீயே சொல்லு..!

மனோரஞ்சிதம் மிரண்டு போனவளாய் எடிசனையே பார்த்துக் கொண்டிருக்க - அவனுடைய வலதுகை சட்டென்று உயர்ந்தது.

உயர்த்திய அவன் விரல்களில் என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்குள், மனோரஞ்சிதத்தின் வலது பக்கக் கழுத்தில் சுருக்கென்று எதுவோ பாய்ந்தது. சதையைத் துளைத்தபடியே - சாய்வாய்க் குத்திட்டு நின்றது. உடம்பு முழுவதும் தீப்பற்றிக்கொண்டது போன்ற உணர்வில் மனோரஞ்சிதம் - வீறிட்டு அலறி விழிகளைத் தாழ்த்திப் பார்த்தாள்.

கழுத்தில் இரண்டு அங்குல நீளத்தில் ஒரு குச்சியைப் போல் கறுப்பாய் எதுவோ குத்திக் கொண்டு நின்றிருந்தது.

''என்ன அது..?''

பார்த்துக் கொண்டு இருக்கும்போதே அது மெல்ல அசைந்தது. சதையைக் குடைந்தது.

எடிசன் கிட்டத்தில் சிரித்தான்.

''அது என்னான்னு பார்க்கிறியா..? இந்த ரிசர்ச் சென்டரில் செயற்கை 'செல் - ஜென்மா' மூலம் உருவாக்கப்பட்ட ஒரு புது உயிரினம். அதுக்கு பேர் என்ன தெரியுமா... நீடில் கோப்ரா (NEEDLE COBRA). ஒரு ஊசி மாதிரி இருக்கிற இந்தப் பாம்புக்கு உணவே மனித ரத்தம்தான். இன்னும் பத்து விநாடிக்குள்ளே இது உன்னோட உடம்புக்குள்ளே பூந்து ரத்தக் குழாய்களில் நீச்சலடிக்க ஆரம்பிச்சுடும். கொஞ்சம் கொஞ்சமாய் ரத்தத்தைக் குடிச்சு வளர ஆரம்பித்து... ஏதாவது ஒரு கட்டத்துல அதுக்கு உள்ளே இருக்கப் பிடிக்காமே வெளியே வந்துடும். அது வெளியே வர தேர்ந்து எடுக்கிற வழி உன்னோட உறுப்புகளில் எது வேணும்ன்னாலும் இருக்கலாம். கை வழியாகவோ, கால் பகுதி வழியாகவோ வெளியே வந்தா - உன்னோட உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லை. இருதயம் வழியாய் வந்தா, அந்த நிமிஷமே உனக்கு மரணம்தான்..! உன்னோட ஆயுள்ரேகை எப்படி இருக்குன்னு பார்க்கலாம்..!''

எடிசன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே -

மனோரஞ்சிதத்தின் கழுத்தில் குத்திட்டு ஒட்டிக் கொண்டிருந்த அந்த நீடில் கோப்ரா சதையைத் துளைத்துக் கொண்டு சரசரவென்று உள்ளே இறங்கி காணாமல் போயிற்று.

பார்த்துக்கொண்டிருந்த மனோரஞ்சிதத்திற்கு கண்கள் இருட்டிக்கொண்டு வந்தன. எந்தப் பிடிப்பும் இல்லாமல் கவர்ோமாய்ச் சரிந்து விழுந்தாள்.




டெல்லியின் ராம் மனோகர் லோகியா ஹாஸ்பிட்டல்.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருக்க - ஐ.ஸி. யூனிட்டுக்கு வெளியே மஹாதேவ், புனிதா, சித்தரஞ்சன், சபரிவாசன் திகிலும் கவலையும் உறைந்துபோன முகங்களோடு பாலிவினைல் நாற்காலிகளில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள்.

டாக்டர் பவன்குமார் கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் கழித்து ஐ.ஸி.யூனிட்டினின்றும் வெளிப்பட்டார். கலைந்த தலைக்கேசம். களைத்த முகம்.

உட்கார்ந்து இருந்த எல்லோரும் ஒரே விநாடியில் எழுந்து நின்றார்கள். பவன்குமாரின் முகத்தையே பார்த்தார்கள்.

''டாக்டர்..!'' மஹாதேவ் தவிப்போடு பக்கத்தில் வர. பவன்குமார் சலனமற்ற முகத்தோடு. ''ப்ளீஸ் கம் வித் மீ...'' சொல்லிவிட்டு நடந்தார்.

எல்லோரும் தொடர்ந்தார்கள்.

வராந்தாவின் மையத்தில் டாக்டரின் அறை வந்தது. நுழைந்தார்கள். பவன்குமார், எல்லோர்க்கும் இருக்கைகளைக் காட்டிவிட்டு தானும் உட்கார்ந்தார். சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

''ப்ரீதாவோட ப்ளட் வாமிட்டுக்குக் காரணம் அவளோட லிவர்தான். அது அவ்வளவு ஆரோக்கியமாய் இல்லை... முனில் ஒரு பங்கு சுருங்கிப் போயிருக்கு.'' டாக்டர் சொன்னதைக் கேட்டு. அழுகையில் புனிதா வெடித்து - சேலையில் வாயைப் பொத்திக் கொள்ள... மஹாதேவ் தவிப்பாய்க் கேட்டார்.

''டாக்டர்...! ப்ரீதா நேற்று வரைக்கும் ஹெல்த்தியாய் இருந்தாளே..?''

''அவ ஹெல்த்தியாய் இருந்து இருக்கமுடியாது மிஸ்டர் மஹாதேவ். ரெண்டு மாசத்துக்கு முன்னாடி, நான்



ப்ரீதாவை ஒரு ஃபங்ஷனில் பார்த்தபோது அவ உற்சாகம் இல்லாமே ரொம்பவும் சோர்வாய் இருந்தாள். உடம்பு வேற இளைச்சு இருந்தது. 'என்னம்மா இப்படி இருக்கே.. வேளா வேளைக்கு ஒழுங்கா சாப்பிடறியான்னு கேட்டேன். அதுக்கு அவ 'என்னமோ தெரியலை டாக்டர்... கொஞ்சநாளாவே எதையுமே பிரியமாய் சாப்பிட முடியலை... நீங்கதான் ஏதாவது ஒரு டானிக் எழுதிக் கொடுக்கணும்'ன்னு சொன்னா. நானும் அதை ஒரு விஷயமாய் எடுத்துக்காமே, 'உனக்கு இப்ப வேண்டியது டானிக் இல்லை... ஒரு கல்யாணம்'ன்னு சொல்லி சிரிச்சிட்டே வந்துட்டேன். லிவர் ப்ராப்ளம் அவளுக்கு அப்பவே இருந்து இருக்கு.. ப்ரீதா சொன்ன விஷயத்தை நான் அன்னிக்கே சீரியஸாய் எடுத்து இருக்கணும்.. தப்பு பண்ணிட்டேன்!''

புனிதா அழுகையை மென்றுகொண்டு பேசினாள்.

''டாக்டர்! நீங்க சொன்னது போலவே ப்ரீதா கடந்த ரெண்டு மாசமாய் ஒழுங்காய் சாப்பிடறது இல்லை. தட்டுல எதைப் போட்டுக் கொடுத்தாலும் கொறிச்சுக் கிட்டே இருப்பா. 'உடம்புல சதை போட்டுடக்கூடாது ஸ்லிம்மாலே இருக்கணுங்கிறதுக்காக - இப்படி சாப்பிடறாளோ'ன்னு நினைச்சு நானும் அதை பெரிசா எடுத்துக்கலை...''

பவன்குமார் தோள்களைக் குலுக்கினார்.

''ஓ.கே... இனிமே அதைப்பத்திப் பேசி எந்த ஒரு ப்ரயோஜனமும் இல்லை... மேற்கொண்டு என்ன செய்யணுமங்கிறதைப்பத்திப் பேசுவோம்.''

சித்தரஞ்சன் குறுக்கிட்டு கேட்டார்.

''சொல்லுங்க டாக்டர்... மேற்கொண்டு என்ன பண்ணலாம்?''

''இப்போதைக்கு ப்ரீதாவோட உயிர்க்கு எந்த ஒரு ஆபத்தும் இல்லை. லிவரோட மொத்த போர்ஷன்ல முனில் ஒரு பாகம்தான் சுருங்கியிருக்கு. மேற்கொண்டு லிவர் சுருங்காமே இருக்கணும்ன்னா - டெய்லி லிவர்க்யூர் இஞ்செக்ஷனைப் போட்டுக்கணும். தொடர்ந்து ஆயுள்காலம் உள்ளவரை மூணுவேளையும் மாத்திரைகள் சாப்பிடணும். ஒரு வேளைக் கூட மாத்திரை தவறக்கூடாது... அதே மாதிரி. சாப்பிடற உணவிலும் நிறைய கட்டுப்பாடுகளைக் கொண்டுவர வேண்டியிருக்கும். இது ஒரு ரிஸ்க்கான ப்ரீயட்தான்..!''

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த சபரிவாசன் தயக்கமான குரலில் கேட்டான்.

''அப்பஎன்னா... கல்யாணம்?''

''அதைப்பத்தி இப்ப நினைச்சுக்கூட பார்க்கக்கூடாது... ப்ரீதாவோட லிவர் பழைய நிலைமைக்கு வர்ற வரைக்கும், எல்லோரும் பொறுமையாய்க் காத்திருக்கணும்... ஏன்னா இதுல ஒரு ரிஸ்க் ஃபேக்டரும் இருக்கு...''

''ரிஸ்க் ஃபேக்டரா..?''

''எஸ்..! லிவர்க்யூர் இஞ்செக்‌ஷனை தவறாமல் போட்டு, மாத்திரைகளையும் ஒழுங்காய்ச் சாப்பிட்டு வந்தாலும் டாக்டர்ஸ் எதிர்பார்த்தபடி சில சமயங்களில் ரெஸ்பான்ஸ் கிடைக்கிறது இல்லை. அதாவது பத்துல ஒருத்தர்க்குத்தான் குணம் தெரியும். மீதி ஒன்பது பேர்க்கு நெகட்டீவ் ரிசல்ட்தான் கிடைக்கும். இப்போது எனக்கு இருக்கிற கவலையெல்லாம், அந்தப் பத்துப் பேர்ல ஒரு நபராய் ப்ரீதா இருக்கணுமேங்கிறதுதான்..!''

''என்ன டாக்டர்... இப்படிச் சொல்றீங்க..?''

''இருக்கிற உண்மையைத்தானே சொல்லணும்... ப்ரீதாவுக்கு நான் ஃபேமிலி டாக்டர்..! இருந்தாலும் நான் இப்ப அவளை பேஷண்டாய் பார்க்கலை, என்னோட பொண்ணுமாதிரிதான் பார்க்கிறேன்.... அவ இந்த லிவர் பிரச்னையிலிருந்து மீண்டு குணமாகி, பழைய ப்ரீதாவாய் மாறணும்ங்கிறது என்னோட மனப்பூர்வமான பிரார்த்தனை...''

''ஒருவேளை மருந்து மாத்திரைகளால் குணமாகலைன்னா... மேற்கொண்டு என்ன பண்றது டாக்டர்..?''

''லிவர் ட்ரான்ஸ் ப்ளாண்டேஷன்தான்..!''

''அதை இப்பவே பண்ணமுடியாதா டாக்டர்..?''

''டோனர் வேணுமே..!''

''நாங்க தர்றோம் டாக்டர்..!'' மஹாதேவும் புனிதாவும் அவசர அவசரமாய் குரல் கொடுக்க, பவன்குமார் கையமர்த்தினார்.

''ப்ரீதா மொதல்ல மாத்திரை ட்ரீட்மெண்ட் எடுத்துக்கட்டும். அதுல அவ ரெக்கவர் ஆயிட்டா லிவர் ட்ரான்ஸ் ப்ளாண்டேஷன் ஆப்ரேஷனே தேவைப்படாது.''

''டாக்டர்..! நாங்க ப்ரீதாவைப் பார்க்கலாமா..?''

''தாராளமாய்ப் போய்ப் பாருங்க... அவ சுய உணர்வோடுதான் இருக்கா. பக்கத்துல போய் நின்னுகிட்டு யாரும் அழாதீங்க. ப்ரீதாவுக்கு இப்போ மருந்து மாத்திரையோடு தைரியமும் தேவை... நீங்க அதைத்தான் மொதல்ல கொடுக்கணும்.''

எல்லோரும் எழுந்து வெளியே வந்தார்கள்.



மஹாதேவும் புனிதாவும் ஐ.ஸி. யூனிட்டைப் பார்த்து நடக்க ஆரம்பிக்க... சித்தாஞ்சன் அப்படியே நின்றார். சபரிவாசன் கேட்டான்.

''ஏம்பா நின்னுட்டீங்க..?''

''நான் வரலை...''

''ஏன்..?''

''எனக்குப் பிடிக்கலை..''

''ஏம்பா..! இப்படி இன்டீஸண்ட்டா பிஹேவ் பண்றீங்க... ப்ரீதா யாரு..? நான் கல்யாணம் பண்ணிக்கப்போற பொண்ணு. உங்களுக்கு மருமகளாய் வரப்போறவ. உடம்புக்கு முடியாமே படுத்துட்டு இருக்கும்போது போய்ப் பார்க்க வேண்டாமா..?''

''டேய்..! விபரம் புரியாமே பேசாதே..! இவங்க உன்னையும் என்னையும் ஏமாத்தப் பார்க்கறாங்க...''

''என்ன ஏமாத்திட்டாங்க..?''

''லிவர் டேமேஜான... பொண்ணை உன்னோட தலையில் கட்டப்பார்த்திருக்காங்க. கடவுள் நம்ம பக்கம் இருக்கப்போய் - கல்யாணத்துக்கு முன்னாடியே விஷயம் வெளியே வந்தாச்சு...''

''அப்பா! நீங்க பேசறது சரியில்லை. ப்ரீதாவுக்கு தன்னோட உடம்பில் இப்படி ஒரு பிரச்னை இருக்கிறது அவளுக்கே தெரியாது. வீணாய் அவங்க மனசை நோகடிக்காதீங்க..!'' பேசிக் கொண்டே போன சபரிவாசனை மஹாதேவ் கையமர்த்தினார்.

''தம்பி..! உங்க அப்பாவோட நிலைமையில் யார் இருந்தாலும் அப்படித்தான் பேசுவாங்க... அவர்க்கு இந்த சம்பந்தத்துல ஆரம்பத்தில் இருந்தே இஷ்டமில்லை. அதுக்கு ஏற்றமாதிரி என்னோட பொண்ணுக்கு இப்படியொரு பிரச்னை. நீங்க வேற இடத்துல, உங்களுக்கு ஏற்றமாதிரி பொண்ணு பார்த்துக்கறது நல்லது.''

''ஸாரி அங்கிள்..! எனக்கு கல்யாணம்ன்னு ஒண்ணு நடந்தா அது உங்க பொண்ணோடுதான். நோய்ங்கிறது ஒரு பொதுவான விஷயம். அது யார்க்கு வேண்டுமானாலும் எப்ப வேணும்ன்னாலும் வரலாம். எனக்கே தெரியாமே ஏதாவது நோய் என் உடம்புக்குள்ளே இருக்கலாம். அது நாளைக்கேகூட வெளிப்படலாம். இன்னிக்கு மருத்துவ உலகம் எங்கேயோ போயிட்டிருக்கு... நோயைக் கட்டுப்படுத்தறதுக்கும், அதை முழுமையாய் குணப்படுத்தறதுக்கும் எவ்வளவோ மருந்துகள் வந்தாச்சு. டாக்டர் பவன்குமார், ப்ரீதாவைக் கண்டிப்பாய்க் குணப்படுத்திடுவார். ஏங்க கல்யாணம்

கண்டிப்பாய் நடக்கும். என்னோட அப்பாவைப்பற்றி நீங்க கவலைப்படாதீங்க. வாங்க... போலாம்..."

சபரிவாசன் ஆவேசமாய் பேசிவிட்டு மஹாதேவை மெல்லத் தள்ளியபடி ஐ.ஸி.யூனிட்டை நோக்கிப் போக, சித்தரஞ்சன் நின்ற இடத்தில் இருந்தபடியே - நடந்து போகிற அவர்களைப் பார்த்து, தீப்பார்வைப் பார்த்தார்.

அதே விநாடி -

அவருடைய கோட் பாக்கெட்டில் இருந்த அந்த உயர்தர செல்ஃபோன் மெல்ல இசையை எழுப்பியது.

எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தார்.

'அருண்லால் காலிங்' என்று டிஸ்ப்ளே சொல்ல, செல்ஃபோனை காதுக்குக் கொடுத்தார். எரிச்சலாய்க் கேட்டார்.

"என்ன லால்?"

"அங்கே நிலைமை எப்படி?"

"நினைச்ச மாதிரி எதுவும் நடக்கலை..."

"மேற்கொண்டு என்ன பண்ணலாம்?"

"ஃபோன்ல பேசாதே... நேர்ல வா...."

"எப்ப வரட்டும்..?"

"உடனே புறப்பட்டு வா... நான், பேரடைஸ் டாட் ஹோட்டல்ல ஃப்ளோட்டிங் க்ளவுட்ஸ் பார்ல இருப்பேன்..."

**ஒரு மினி கேள்வியும் - ஒரு மினி பதிலும்:**

**கேள்வி:** வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ் என்பது என்ன?

**பதில்:** பி-1 ல் ஆரம்பித்து பி-8 வரையிலான பி வைட்டமின்களின் தொகுப்புதான் பி-காம்பளக்ஸ் பி-1, பி-2, என்று தனித்தனியாக சாப்பிடுவதைவிட மல்டி வைட்டமினாக அதாவது, பி-காம்ப்ளக்ஸாகவே எடுத்துக்கொள்வது நல்லது. பி-காம்பளக்ஸ் வைட்டமின் மாத்திரைகள் மற்ற வைட்டமின் மாத்திரைகளைக் காட்டிலும் பாதுகாப்பானவை. ஏனென்றால் அவைகள் தண்ணீரில் கரையும் தன்மை உடையவை. அதிகப்படியான பி காம்ப்ளக்ஸ் சத்து நம் உடலில் சேர்ந்து விட்டாலும் சிறுநீர் வழியாக வெளியேறிவிடும். பொதுவாக இந்த மாத்திரைகளை ஆண்கள் 1.2 மில்லி கிராம் வரையும், பெண்கள் 0.9 மில்லிகிராம் வரையும் எடுத்துக் கொள்ளலாம். நாம்



உண்ணும் எல்லா உணவுகளிலும் வைட்டமின்-பி இருக்கிறது. ஆனால், உணவுப் பொருள்களைச் சூடாக்கும் போது வைட்டமின்-பி அழிந்து விடுகிறது. நம்மில் பலர் ஃபிரிட்ஜிலிருந்து உணவை எடுத்தும் சூடுபடுத்துவார்கள். இப்படி மறுபடியும் அதைச் சூடுபடுத்தும் போது அதில் உள்ள வைட்டமின்-பி முற்றிலும் அழிந்துவிடும்.




மனோரஞ்சிதம் மறுபடியும் சுய உணர்வுக்கு வந்தபோது - தான் ஒரு அரையிருட்டான அறைக்குள் இருப்பதை உணர்ந்தாள்.

கழுத்துப் பகுதியில் வலி தெறித்தது. ஏதோ நெருப்புக்காயம் போல் வலித்தது.

எடிசன் சொன்ன 'நீடில் கோப்ரா' விஷயம் நினைவுக்கு வந்ததும் பயத்தில் உடம்பு உறைந்தது.

'அது உடம்பின் எந்தப் பகுதியில் இருக்கிறதோ?'

மனோரஞ்சிதம் கண்களை மூடிக்கொண்டு அப்படியே அசையாமல் உட்கார்ந்து உடம்புக்குள் ஏதாவது மாற்றம் தெரிகிறதாவென்று உன்னிப்பாய் கவனித்தாள். அவளால் எதையும் உணர முடியவில்லை.

வயிறு மட்டும் பசிப்பதுபோல் இருந்தது.

இருட்டு இப்போது கண்களுக்கு பழக்கமாயிருக்க பார்வையைச் சுழற்றினாள். நான்கு புறங்களிலும் கருங்கல் சுவர். அறைக்காற்றில் புழுக்கம் ஏறியிருந்தது. அறையின் எந்தப் பக்கமும் வழி இருப்பதாகத் தெரியவில்லை.

எழுந்து மெல்ல அறையைச் சுற்றி வந்தாள்.

"ஒரு ஜன்னல் கூட இல்லை."

"காற்று எப்படி வருகிறது..?"

திகைப்பாய் யோசித்துக் கொண்டு இருக்கும்போதே -

அறையின் இடதுபக்கச் சுவர் சத்தம் இல்லாமல் நகர்ந்து ஒரு இடைவெளியை ஏற்படுத்த - எடிசன் உள்ளே வந்தான்.

இரண்டு கைகளிலும் பெரிய பெரிய கேரி பேக்குகள். சிரித்தான்.

"ஹலோ... மனோ.. எப்படியிருக்கே..?"

மனோரஞ்சிதம் பதில் சொல்லாமல் மௌனமாய் நின்றாள்.

எடிசன் சிரிப்பைப் பெரிதாக்கினான்.

''மனோ..! நீ புரபசர் நமோ நாராயணனைப் பார்க்க
வர்றதுக்கு முந்தி, ஒரு நல்ல ஜோஸ்யக்காரன்
கிட்டேபோய் உன்னோட கையைக் காட்டியிருக்கணும்.
நீ தப்பு பண்ணிட்டே... இனிமே உன் வாழ்நாளோட
கடைசி நாட்கள் இந்த நான்கு சுவர்களுக்குள்ளேதான். நீ
எவ்வளவு நாள் உயிரோடு இருக்கப்போறேன்னு
எங்களுக்கே தெரியாது. அதை முடிவு செய்ய
வேண்டியது நீடில் கோப்ராதான். அதுக்கு உன்னோட
உடம்பு போர் அடிச்சா ஏதாவது ஒரு பக்கம் ஓட்டைப்
போட்டுக்கிட்டு வந்துடும். அது எந்த நாளோ?''

''டேய்ய்...!'' என்று வீறிட்டு அலறியபடி எடிசனைத்
தாக்குவதற்காக ஓடிவந்த மனோரஞ்சிதம், அவன் தன்
கையில் வைத்து இருந்த ஒரு சிறிய கண்ணாடிக்
குப்பியைப் பார்த்ததும் அப்படியே நின்றாள்.

கண்ணாடி குப்பிக்குள் கறுப்பாய் ஏதோ அசைந்தது.

''ஏன் மனோ... அப்படியே நின்னுட்டே... வா... வந்து
என்னை அடி... உன்னோட ஆத்திரம் அடங்கும்
வரைக்கும் அடி. அதுக்கப்புறம் நான் தரப்போகிற இந்த
அன்பளிப்பை வாங்கிக்க...''

''..............''

''என்ன அப்படிப் பார்க்கிறே...? இதுக்குள்ளே என்ன
இருக்குன்னு பார்க்கறியா..? இது ஒரு வண்டு. இதுக்கு
பேரு 'ரோமிங் பீ'. இதுவும் செயற்கை 'செல் -
ஜென்மா'வில் உருவாக்கப்பட்டதுதான். இது இந்தக்
கண்ணாடிக் குப்பிக்குள்ளே இருக்கிறவரைக்கும்
சாதுவாய் இருக்கும். எடுத்து வெளியே விட்டா ஹம்மிங்
பண்ணிட்டே பறக்க ஆரம்பிக்கும். ஒரே இடத்துலதான்
பறக்கும். உதாரணத்துக்கு, இந்த ரூம்ல இதை
விட்டேன்னு வைய்யி... இங்கேயேதான் 24 மணிநேரமும்
பறந்துட்டேயிருக்கும். இதனோட ஆயுள் 240 மணி
நேரம். அதாவது பத்து நாள். இந்தப் பத்து நாளும்
களைப்பே இல்லாமே பறந்துட்டு. அதுக்கப்புறமா உயிரை
விட்டுடும். அப்பாடா... நிம்மதின்னு நீ நினைக்கலாம்.
ஆனா, அது பறக்கிற 240 மணிநேரமும் உனக்கு நரக
வேதனையாய் இருக்கும். முதல் ஒரு மணி நேரத்துக்கு
அதனோட ஹம்மிங் பொறுத்துக் கொள்கிறமாதிரி
இருக்கும். அதுக்கப்புறம் அதனோட ஹம்மிங் டெஸிபல்
கொஞ்சம் கொஞ்சமாய் கூடிக்கிட்டே போய், உன்னை
ஒரு வழி பண்ணிடும். மொதல்ல உனக்கு காது வலி
ஆரம்பிக்கும். அப்புறம் தலைவலி. தலைவலின்னா
சாதாரண தலைவலி கிடையாது. தலைக்குள்ளே ஒரு
ஃபேக்டரியே ஓடறமாதிரி இருக்கும். உன்னால ஒரு



நிமிஷம் கூட தூங்க முடியாது. நினைச்சுப்பாரு.... நீ பத்து
நாள் தூங்காமேயிருந்தா உன்னோட நிலைமை
எப்படியிருக்கும்..?''

மனோரஞ்சிதம் பீதியில் உறைந்து போனவளாய்
அந்தக் கண்ணாடிக் குப்பிக்குள் இருந்த வண்டையே
பார்த்தாள்.

எடிசன் பற்களைக் காட்டினான்.

''என்ன! வண்டை வெளியே விடட்டுமா..?''

''வே... வேண்டாம்...''

''வேண்டாம்ன்னா... நான் சொன்னபடியெல்லாம் நீ
கேட்கணும்.''

''கே...கே... கேக்கறேன்...''

''இப்ப கேக்கறேன்னு சொல்லிட்டு அப்புறம்
மாட்டேன்னு சொல்லக்கூடாது...''

''சொ... சொல்லமாட்டேன்...''

''நம்பலாமா..?''

''ம்...''

''சரி... மொதல்ல சாப்பிடு...'' சொன்ன எடிசன்
கேரிபேக்கை எடுத்தான். அதிலிருந்து, சிறியதும்
பெரியதுமாய் பத்துப் பதினைந்து டின்களை எடுத்து
மனோரஞ்சிதத்தின் முன்னால் பரப்பிவிட்டு மெல்லச்
சிரித்தான்.

''என்ன மனோ..! சாப்பிடுன்னு சொல்லிட்டு இவன்
பாட்டுக்கு டின்களை எடுத்து வைக்கிறான்னு
பார்க்கறியா..? இதெல்லாம் டின்னுடு ஃபுட்ஸ்.
எல்லாமே மாத்திரை வடிவிலும். பேஸ்ட் மாதிரியான
அமைப்பிலும் இருக்கும். காலையில் - 2 இட்லி, 1 வடை,
பொங்கல் டிபன் சாப்பிட்டா என்ன மாதிரியான ஒரு
சந்தோஷமும் திருப்தியும் இருக்குமோ - அதே திருப்தி
இந்த மூனு மாத்திரைகளை வாய்க்குள்ளே போட்டு, ஒரு
டம்ளர் தண்ணி குடிச்சாப் போதும்; கிடைக்கும்.
அதுக்கப்புறம் மத்தியானம் சரியா ஒரு மணிக்கெல்லாம்
பசிக்க ஆரம்பிக்கும். அந்த லஞ்ச் நேரத்துக்கு உனக்கு
சாதம், சாம்பார், ரசம், பொரியல், அவியல்ன்னு எதுவும்
கிடைக்காது. அதுக்குப் பதிலாய் இந்த பேஸ்ட்டைத்தான்
நீ சாப்பிடணும். பற்பசையைப் பிதுக்கி ஒரு அங்குலம்
நீளத்துக்கு பேஸ்ட்டை எடுக்கற மாதிரி, இந்த மீல்
பேஸ்ட்டை பிதுக்கி எடுத்து வாய்ல போட்டுக்கிட்டு 200
மில்லி மினரல்வாட்டர் குடிச்சாப் போதும். அடுத்த சில
நிமிஷங்களுக்குள்ளாகவே உனக்கு ஒரு விருந்து
சாப்பாட்டைச் சாப்பிட்டமாதிரியான ஒரு உணர்வு
ஏற்பட்டுடும். அது மட்டுமில்லை உன்னோட உடம்புக்

குத் தேவையான வைட்டமின்களும் தாதுப்பொருள் களும் அந்த மீல் பேஸ்ட்டிலிருந்தே கிடைச்சுடும். இதுல இருக்கிற இன்னொரு ப்ளஸ் பாயிண்ட் வயிறு கெட்டுப் போகாது...!''

எடிசன் பேசி முடிக்க மனோரஞ்சிதம் மௌனம் காத்தாள்.

''என்ன... சாப்பிடறியா?''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம்''

''உனக்கு பசிக்கலையா...?''

''பசிக்கலை...''

''ஆச்சர்யமாயிருக்கு... நீ இங்கேவந்து 20 மணி நேரமாகுது. இவ்வளவு நேரமும் நீ மயக்கத்துலதான் இருந்து இருக்கே... கொஞ்சம் சாப்பிடு.''

''எனக்கு வேண்டாம்...''

''சரி... என்கூட வா...''

''எங்கே..?''

''எதிர்க்கேள்வியெல்லாம் கேட்கக்கூடாது. இங்கே உன்னை மாதிரியான கிளிகள் பத்துக்கும் மேற்பட்டவை இருக்கு. எல்லாமே நாங்க வலை விரிச்சு பிடிச்சது இருக்கு. ஒரே ஒரு கிளிமட்டும்தான் தானா வந்து வலையில் விழுந்தது. அது வேற யாருமில்லை... நீதான்! இதுவும் ஒரு சரணாலயம்தான். ஆனா, ஒரு தடவை ஒரு பறவை உள்ள வந்துட்டா அது உயிரோடு வெளியே போகாது. போகவும் முடியாது.''

எடிசன் பேசப் பேச, தான் எப்பேர்ப்பட்ட ஆபத்தில் மாட்டிக்கொண்டு இருக்கிறோம் என்பதை திகிலோடு உணர்ந்தாள் மனோரஞ்சிதம். இவனிடம் சண்டைப் போடுவதாலோ முரண்டு பிடிப்பதாலோ எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை.

''என்ன யோசனை.?''

''ஒண்ணும் இல்லை.. இப்ப நான் என்ன பண்ணணும்?''

''நான் என்ன சொல்றேனோ... அதை நீ செய்யணும்.''

''சரி...''

''என்கூட வா...'' எடிசன் சொல்லிக் கொண்டே, தன் கையில் வைத்து இருந்த ஒரு சிறிய ரிமோட் கண்ட்ரோலின் பட்டனைத் தட்ட, சுவர் நகர்ந்து வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

உள்ளே நுழைந்தார்கள்.

மங்கிய வெளிச்சத்தோடு ஒரு குறுகலான பாதை எதிரே விரிந்தது. நடந்தார்கள். 100 அடி தூரம் போனதும் - அந்தக் குறுகலான பாதை கொஞ்சம் கொஞ்சமாய்



உயர்ந்து ஒரு மாடிப்படியாய் மாறியது.

மரப்படிகள்.

ஏறினார்கள்.

மேல்படிக்கு வந்ததும் எடிசன் அங்கே சாத்தியிருந்த மரக்கதவைத் தள்ளினான்.

அது திறந்து கொண்டதும் -

மறுபடியும் மரக்கதவு ஒன்று வழியை அடைத்தபடி நின்றது.

எடிசன் அதையும் தள்ளி வெளியே வந்தான். எடிசனைப் பின் தொடர்ந்து வந்த மனோரஞ்சிதம் திகைத்தாள்.

அவள் ஒரு பீரோவிலிருந்து வெளிப்பட்டு அறைக்குள் நுழைந்து இருந்தாள்.

அந்த அறை மெல்லிய ஊதா வெளிச்சத்தில் இருக்க - அறையின் நடுவே போடப்பட்டிருந்த கட்டிலில் இரண்டு பெண்கள் படுக்க வைக்கப்பட்டு இருந்தார்கள்.

**ஒரு மினி கேள்வியும் - ஒரு மினி பதிலும்**

**கேள்வி:** மனித உடம்பிலேயே கடினமான பகுதி எது?

**பதில்:** மனித உடம்பிலேயே கடினமான பகுதி எனாமல் எனப்படும் பற்பூச்சுதான். அது கால்சியம் பாஸ்பேட்டால் ஆனது. இதில் நரம்புகள் இல்லை என்பதால் வலியும் இல்லை. இதற்கு கீழே உள்ள பகுதிக்கு 'டென்டின்' என்று பெயர். ஒரு பல் சிதைவடைய ஆரம்பிக்கும் போது இந்த டென்டின் பகுதியில்தான் துளை விழும். அப்புறம்... பற்களைப்பற்றி ஒரு த்ரில்லிங்கான செய்தி. ஒரு நபர்க்கு பற்கள் ஆரோக்கியமாக இருந்தால் - அவருடைய மரணத்துக்குப் பின்னும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு உதிராமல் இருக்கக்கூடியது பற்கள்தான்.




டாக்டர் பவன்குமார், தனக்கு எதிரில் உட்கார்ந்து இருந்த மஹாதேவ், புனிதா, சபரிவாசனை கவலை நிரம்பிய பார்வையோடு பார்த்துவிட்டு மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

''உங்க மூணுபேரையும்... நான்

அவசரமாய் வரச் சொன்னதுக்கு காரணம் இருக்கு. ப்ரீதா ஹாஸ்பிட்டல்ல அட்மிட்டாகி இன்னியோடு ரெண்டு வாரம் முடியப் போகுது. கடந்த ரெண்டு வார காலத்தில் ப்ரீதாவுக்கு ட்ரீட் மெண்ட் கொடுத்துப் பார்த்ததில் ப்ராக்ரஸ் ஒரு பர்ஸண்ட் கூட இல்லைங்கிறதுதான் இதில் உள்ள வருத்தமான செய்தி. இதைவிட இன்னொரு வருத்தமான செய்தி லிவரோட கண்டிஷன் இன்னமும் மோசமான நிலைமைக்கு போயிட்டிருக்கு. இதுக்கு நாம உடனடியாய் ஒரு முற்றுப்புள்ளியை வெச்சாகணும். இல்லேன்னா, சிச்சுவேஷன் வில் பி வொர்ஸ்ட்."

மஹாதேவ் அதிர்ந்தார்.

"என்ன டாக்டர்... இப்படிச் சொல்றீங்க..? நேத்து வரைக்கும் இதைப்பத்தி நீங்க சொல்லவே யில்லையே..?"

"நிலைமை ஏதாவது ஒரு விநாடியில் சீராகலாம்ன்னு நம்பிக்கையோடு இருந்தேன். அது நடக்கலை. இனிமேலும் லேட் பண்ணக்கூடாதுன்னுதான் சொல்லிட்டேன்."

சபரிவாசன் குறுக்கிட்டான்.

"டாக்டர்..! மருந்து மாத்திரைகள் பயன்கொடுக்காத போது ப்ரீதாவுக்கு ஆப்ரேஷன் பண்ணலாம்ன்னு சொன்னீங்களே..?"

"சொன்னேன்... அதுவும் இப்போ சாத்தியம் இல்லை."

"ஏன் டாக்டர்..?"

"ப்ரீதாவுக்கு லிவர் ட்ரான்ஸ்ப்ளாண்டேஷன் பண்ணணும்ன்னா ப்ளட் ரிலேஷன்ல இருக்கிற ஒருத்தர்தான் லிவரை டொனேட் பண்ண முடியும். அந்த வகையில் பார்க்கப் போனால் ப்ரீதாவோட ஃபாதர் அல்லது மதர்தான் அவங்க லிவரை டொனேட் பண்ணமுடியும். ப்ரீதாவின் கெட்டுப்போன லிவரை முழுமையாய் எடுத்துட்டு மஹாதேவ் அல்லது புனிதாவோட லிவர்ல ஒரு சிறு பகுதியை வெட்டி எடுத்து பொருத்தினாகூட போதும். அந்த லிவர் முழுமையாய் வளர்ச்சி அடைஞ்சிடும்..."

"அப்புறம் என்ன டாக்டர்... அந்த ஆப்ரேஷனை பண்ண வேண்டியதுதானே..? நானோ என்னோட ஒய்ஃபோ லிவரை டொனேட் பண்ணத் தயாராய் இருக்கோம்..!"

டாக்டர் பவன்குமார் விரக்தியாய்ச் சிரித்தார்.

"நீங்க லிவரைத் தர தயாராய் இருக்கலாம்... பட் ஆப்ரேஷன் பண்ண நான் தயாராய் இல்லை..."



"ஏன் டாக்டர்..?"

"மிஸ்டர் மஹாதேவ்... உங்களுக்கு ஹை பி.பி. இருக்கு. கூடவே சுகரும் டெவலப் ஆயிட்டு வருது. இந்த நிலைமையில் உங்க லிவரை நான் தொடமுடியாது. உங்க மனைவி புனிதாவோட லிவர் ரெண்டு வருஷங்களுக்கு முன்னாடி. கடுமையான ஜாண்டிஸால பாதிக்கப்பட்டது. நாலு மாச ட்ரீட்மெண்ட்டுக்கு அப்புறம்தான் அவங்களால நார்மல்ஸிக்கு வர முடிந்தது. அப்படிப்பட்ட லிவரை எடுத்து ப்ரீதாவுக்கு பொருத்த முடியாது. ஒரு ஆரோக்கியமான நபரோட லிவர் கிடைச்சாத்தான் ப்ரீதாவுக்கு நல்லது."

சபரிவாசன் பரபரத்தான்.

"டாக்டர்..! என்னோட லிவர் சூட் ஆகுமா..?"

"நோ... சபரி.. அன்னிக்கு உங்க ப்ளட் க்ரூப் எதுன்னு கேட்டப்ப நீங்க Bபாஸிட்டிவ்ன்னு சொன்னீங்க. ப்ரீதாவோட ப்ளட் க்ரூப் AB. நெகட்டிவ். இதே ப்ளட் க்ரூப் இருக்கிற நபர் ஒருத்தர்தான் ப்ரீதாவுக்கு லிவரை டொனேட் பண்ணமுடியும். அப்படிப்பட்ட நபரை எங்கேன்னு போய்த் தேடறது..? அப்படியே ப்ளட் க்ரூப் கிடைச்சாலும் அந்த நபர் தன்னோட லிவரை டொனேட் பண்ண சம்மதிக்கணுமே..?"

"பேப்பர்ல விளம்பரம் கொடுத்துப் பார்க்கலாம் டாக்டர்"

"அதெல்லாம் சரிப்பட்டு வராது சபரி.."

"வேற என்னதான் பண்ணலாம்ன்னு சொல்லுங்க டாக்டர்."

"ப்ரீதாவோட லிவர் குறைபாடு சரியாகி அவ பழைய ஆரோக்கிய வாழ்க்கைக்குத் திரும்ப ஒரே ஒரு வழிதான் இருக்கு..."

"என்ன வழி..?"

டாக்டர் பவன்குமார், தனக்கு எதிரில் இருந்த மஹாதேவைப் பார்த்தபடி சொன்னார்.

"அது உங்க கையில்தான் இருக்கு மஹாதேவ்"


"என்னோட கையிலா...?"

"எஸ்..."

"என்ன சொல்றீங்க டாக்டர்?"

"நான் இப்போ சொல்லப் போறதை நல்லாக் கவனிங்க."

பவன்குமார் சொல்ல ஆரம்பித்தார்.



## 11

"சுப்ரஜா! உனக்கு ஃபோன்..!" பேங்க் மானேஜர் பெருமாள்ராஜா குரல் கொடுக்க - கௌண்டரில் இருந்த சுப்ரஜா தனக்குப் பக்கத்தில் இருந்த லேண்ட் லைன் டெலிஃபோனின் ரிஸீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தாள்.

"எஸ்..."

"பேசறது மிஸ் சுப்ரஜாவா..?" ஒரு ஆண் குரல் கேட்டது.

"ஆமா..."

"நான், இடியோசை பத்திரிகையின் எடிட்டர் ராமாமிர்தம் பேசறேன்ம்மா."

"ஓ... நீங்களா..! சொல்லுங்க ஸார்... என்ன விஷயம்! பேங்குக்கு ஃபோன் பண்ணியிருக்கீங்க..?"

"மனோரஞ்சிதத்தை என்னால ரெண்டு வாரமாய்ப் பார்க்க முடியலை. ஆஃபீஸுக்கும் வரலை. செல்லுக்கு ஃபோன் பண்ணினா ஸ்விட்ச்ட் ஆஃப்ன்னு பதில் வருது. அபார்ட்மெண்ட்டுக்கும் போனேன். அதுவும் பூட்டியிருக்கு. பக்கத்து போர்ஷன்ல விசாரிச்சா - மனோ ஒண்ணும் சொல்லிட்டுப் போகலைன்னு சொல்றாங்க. எனக்குக் குழப்பமாவும் பயம்மாவும் இருக்கும்மா. அவளை என்னிக்கு நீ கடைசியாய்ப் பார்த்தேம்மா..?"

"போனவாரம் அவளோட பர்த்டே அன்னிக்கு. அவ வீட்டுப் போய்ப் பார்த்து - அவளை விஷ் பண்ணினேன். அதுக்கப்புறம் நான் அவளைப் பார்க்கலை. ஒரு தடவை நான் ஃபோன் பண்ணிப் பார்த்தப்ப 'நாட் ரீச்சபிள்'ன்னு வந்தது. சரி, பிஸியாய் இருக்கா போலிருக்குன்னு விட்டுட்டேன். எனக்கும் பேங்கில் ஆடிட்டிங் இருந்ததால மேற்கொண்டு அவளை காண்டாக்ட் பண்ணலை."

"மனோரஞ்சிதம் எங்கே போயிருப்பான்னு, உனக்கு ஏதாவது ஐடியா இருக்காம்மா...?"

"இல்ல ஸார்..."

"இப்படியெல்லாம் வாரிக்கணக்கில் தகவலே இல்லாமே இருக்கமாட்டா... என்ன பிரச்னைன்னு தெரியலை... நீயும் அவளைப் பார்க்கலைன்னு சொன்னதும் என்னோட பயம் ஜாஸ்தியாயிடுச்சு... போலீஸுக்குப் போயிடலாம்ன்னு இருக்கேன். இனியும் லேட் பண்றது சரியில்லைன்னு என்னோட மனசுக்குப்



படுது."

"நீங்க சொல்றதுதான் சரி ஸார்... அவளோட அரசியல் கட்டுரைகள் கொஞ்சநாளாவே ஹாட்டாய் இருந்தது. அதனால், அவளுக்கு ஏதாவது பிரச்னைகள் ஏற்பட்டு இருக்கலாம். நீங்க ரெண்டு நாளைக்கு முன்னாடியே போலீஸுக்கு போயிருக்கணும் ஸார், இதுவே லேட்..."

"நான் உடனடியாய் இன்னிக்கே போலீஸ் கமிஷனரைப் பார்த்து ஒரு புகாரைக் கொடுத்துடறேன்ம்மா..."

"ஓ.கே... ஸார்... நானும் எனக்குத் தெரிஞ்ச இடங்கள்ல மனோரஞ்சிதத்தைப் பத்தி விசாரிக்கிறேன். ஏதாவது உபயோகமான தகவல் கிடைச்சா உடனடியாய் உங்களுக்கு ஃபோன் பண்றேன்."

"நல்ல செய்தியாய் சொல்லும்மா..." மறுமுனையில் அவர் பேசி முடித்ததும் சுப்ரஜா ரிஸீவரை வைத்தாள். கவலை - அவளை ஒரு போர்வையாய்ப் போர்த்துக் கொண்டது.

'மனோவுக்கு என்ன ஆச்சோன்னு தெரியலையே...?'

'யாரோ... எப்படியோ... ஊழல் பண்ணிட்டுப் போறாங்க. இவளுக்கு என்ன வந்தது..?'

'நாராச நடையில் விமர்சனம் பண்ணினா எவன் பொறுப்பான்..?'

'யாரைச் சந்தேகப்பட முடியும்..? சின்னக் கட்சியில் இருந்து பெரிய கட்சி வரைக்கும் ஒருத்தரையும் இவ விட்டது இல்லையே?"

சுப்ரஜா யோசனையில் மூழ்கி மனம் கனத்துக் கொண்டு இருந்த விநாடி - அட்டெண்டர் வேலு, பக்கத்தில் வந்து நின்றான்.

"அம்மா..."

"ம்..."

"மானேஜர் உங்களைக் கூப்பிட்டார்."

எழுந்து போனாள்.

ஏ.ஸி. அறைக்குள் உட்கார்ந்து ஒரு கையில் காப்பி கோப்பையையும், இன்னொரு கையில் பைலையும் வைத்து இருந்த மானேஜர், பார்வையால் தனக்கு முன்னால் இருந்த நாற்காலியைக் காட்டினார்.

சுப்ரஜா உட்கார்ந்தாள்.

"ஸார்..."

"இன்னிக்கு மத்தியானம் மூணுமணிக்கு பேங்க் வேலைகளை முடிச்சுட்டு உங்களை நீங்க ஃப்ரீ பண்ணிக்குங்க சுப்ரஜா"

"எதுக்கு ஸார்...?"

''நாம, படப்பைக்குப் போய் புரபசர் நமோ நாராயணனைப் பார்க்க வேண்டியிருக்கு.''

''ஃபார் வாட் பர்ப்பஸ் ஸார்?''

''அவரோட ரிசர்ச் ப்ராஜக்ட்டுக்கு, மத்திய நிதிஉதவி தொகுப்பில் இருந்து இரண்டாவது தவணையாய் ஒரு கோடி ரூபாய்க்கான செக்கைக் கொடுத்து ரெசிப்ட்ல அவரோட கையெழுத்தை வாங்கணும்... உங்களுக்கு ஏதும் அவசர வேலை இல்லையா?''

''இல்ல... ஸார்...''

''மூணு மணிக்கு போயிடலாமா?''

''போயிடலாம் ஸார்.''

''என் ஒரு மாதிரி டல்லாய் இருக்கீங்க..?''

''ஒண்ணுமில்ல ஸார்... அயாம்... ஆல்ரைட்....'' சுப்ராஜா வலுக்கட்டாயமாய் மானேஜர்க்கு ஒரு புன்னகையைக் கொடுத்துவிட்டு அறையினின்றும் வெளியேறினாள்.



அமைச்சர் தேசாய், தனக்கு முன்பாய் நின்றிருந்த மஹாதேவ்வை ஒரு வியப்புப் பார்வையில் நனைத்தபடி பேச ஆரம்பித்தார்.

''மிஸ்டர் மஹாதேவ்..! நீங்க ஏதோ என்கிட்ட பர்சனலாய் பேச விரும்பறதாய் சொன்னீங்க. நானும் என்னோட பணி களையெல்லாம் ஒரு மணி நேரத்துக்கு நிறுத்திட்டேன். சொல்லுங்க என்ன விஷயம்... நீங்க இவ்வளவு டென்ஷனாய் இருந்து நான் பார்த்தது இல்லை...''

மஹாதேவ் பேசத் தயங்க - தேசாய் தனக்கு எதிரில் இருந்த சோபாவைக் காட்டினார். ''மொதல்ல உட்காருங்க மஹாதேவ்...! பதட்டப்படாமே உங்களைக் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக்குங்க. விஷயம் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. தைரியமாய்ச் சொல்லுங்க.''

''தேங்க்யூ ஸார்.''

மஹாதேவ் சோபாவில் உட்கார்ந்துகொண்டு, சிலவிநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு பேச ஆரம்பித்தார்.

''ஸார்..! என்னோட டாட்டர் ப்ரீதா உயிரோடு இருப்பதும் இல்லாததும் இப்ப உங்க கையில்தான் இருக்கு...''

தேசாயின் புருவங்கள் மேலேறி சில விநாடிகள்



அப்படியே நின்றன. ''என்னோட கையில் உங்க பொண்ணோட உயிரா..? எப்படி மிஸ்டர் மஹாதேவ்...?''

''ஸார்..! டாக்டர் பவன்குமார் என்னோட பொண்ணை மருந்து மாத்திரைகளாலும் காப்பாற்ற முடியாது. லிவர் ட்ரான்ஸ்ப்ளான்டேஷன் ஆப்ரேஷன் செய்தாலும் காப்பாற்ற முடியாதுன்னு சொல்லிட்டார்.''

''அவர் சொல்லிட்டா அதுதான் முடிவா என்ன..? உங்க பொண்ணை வெளிநாட்டுக்குக் கொண்டு போயிடலாம். ஜெனிவாவில் 'க்யூர் ஸ்பாட்' என்கிற பேர்ல ஒரு ஹாஸ்பிடல் இருக்கு.... மற்ற டாக்டர்களால் கைவிடப்பட்ட நோயாளிகளைத்தான் அங்கே அட்மிட் பண்ணி, அதை ஒரு சேலஞ்சாய் எடுத்துக்கிட்டு முறையான ட்ரீட்மெண்ட் எடுத்து குணப்படுத்தி, நோயாளியை சந்தோஷமாய் அனுப்பி வைக்கிறாங்க. அவங்க வெப்சைட்டைப் பாருங்க. நீங்களே பிரமிச்சுப் போயிடுவீங்க...''

''ஸார்..! டாக்டர் பவன்குமார் அந்த ஜெனீவா ஹாஸ்பிடலைப் பற்றியும் சொன்னார். பட் அந்த ஹாஸ்பிடலோட சக்சஸ் ரேட் 70 பர்செண்ட்தான். உங்க பொண்ணு ப்ரீதாவுக்கு 100 பர்செண்ட் குணம் கிடைக்கணும்ன்னா அதுக்கு ஒரே வழி 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட்தான்னு சொல்லிட்டார்.

அமைச்சர் தேசாய் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''மிஸ்டர் மஹாதேவ்..! நீங்க என்ன சொல்றீங்க..? 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட் இப்போ ஆரம்ப நிலையில்தான் இருக்கு... அதைப்பற்றின ஆராய்ச்சி களை புரபசர் நமோ நாராயணன் சென்னை படப்பையில் ஒரு ரிசர்ச் சென்டர் ஏற்படுத்தி பண்ணிக்கிட்டிருக்கார். செயற்கை செல்களை உற்பத்தி செய்வதில் மட்டுமே அவர்க்கு வெற்றி கிடைச்சிருக்கு. புதுவகையான பூக்களையும், சில விநோதமான பூச்சிவகைகளை மட்டுமே உருவாக்கியிருக்கார். அதிலேயும் சில தோல்விகள் ஏற்பட்டு ஆராய்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டது. புரபசர் நமோ நாராயணன் நோக்கம் புதுவகையான செயற்கை செல்களை உண்டாக்கி அதன் மூலம் மனிதர்களுக்கு ஏற்படும் நோயைத்தீர்க்க முடியுமாங்கிறதுதான்..! பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்ட சில பிராணிகளின் நோய்களை அவர் கட்டுப்படுத்தி அதைக் குணப்படுத்தியிருக்கார். ஆனா, மனிதர்களுக்கு. இன்னமும் அந்த சோதனையைச் செய்யலை. சாகும் தறுவாயில் உள்ள சில முதியவர் களுக்கு அந்த ஃபேமிலியைச் சேர்ந்தவர்களின்

அனுமதியோடு சோதனைகளை நடத்த நமோ நாராயணன் திட்டம் போட்டு, அதை நடைமுறைபடுத்தலாமான்னு என்கிட்டே யோசனை கேட்டிருக்கார். அதை நடைமுறைப்படுத்துறதுல சில சிக்கல்கள் இருக்கிறதால... அதை அப்படியே நிறுத்தி வெச்சிருக்கேன்.''

''அதுல என்ன ஸார் சிக்கல்?''

''என்ன மஹாதேவ்...!' எனக்கு நீங்க செயலாளராய் இருக்கீங்க. இதுல என்ன மாதிரியான நடைமுறைச் சிக்கல்கள் வரும்ன்னு உங்களுக்குத் தெரியாதா?''

''மனித உரிமை கமிஷன் அப்ஜெக்ஷன் பண்ணுவாங்களா ஸார்?''

''அதே தான்..!''

''ஸார்... நான் ப்ரீதாவுக்கு அப்பா... எனக்கு என் பொண்ணு உயிரோடு வேணும்ன்னா எப்படிப்பட்ட ஒரு, முடிவையும் எடுக்க எனக்கு உரிமையிருக்கு. என்னைப் பொறுத்தவரைக்கும் இந்த 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட் ஒரு ஆப்ரேஷன் மாதிரி. ஹாஸ்பிட்டல்ல ஒரு டாக்டர் ஆப்ரேஷன் பண்ணும்போது சில ஃபார்ம்ஸ்ல கையெழுத்து வாங்கிக்கிற மாதிரி புரபசர் நமோ நாராயணனும் என்கிட்டே கையெழுத்து வாங்கிக்கலாம். அவர் எம்பொண்ணுக்கு 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட்டைக் கொடுக்கட்டும். ப்ரீதாவோட தலையெழுத்து நல்லாயிருந்தா அவ உயிர் பிழைச்சு வரட்டும். இல்லேன்னா புரபசரின் ஆராய்ச்சிக்கு உதவிய ஒரு சந்தோஷம் எனக்குக் கிடைக்கட்டும்.''

மஹாதேவ் குரலைத் தழுதழுத்தார்.

''மிஸ்டர் மஹாதேவ்..! நான் என்ன சொல்ல வர்றேன்னா..?''

''ஸாரி ஸார்... இந்த விஷயத்துல நீங்க என்னை கன்வின்ஸ் பண்ண முயற்சி செய்ய வேண்டாம். புரபசர் நமோ நாராயணன் என்னோட பொண்ணைக் குணமாக்கித் தருவார் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு... இந்த விஷயத்துல நீங்க எனக்கு உதவி பண்ணணும்.''

தேசாய் தன் வழுக்கைத்தலையை இட்துகை விரல்களால் நிரடிக்கொண்டு ஒரே இலக்கைப் பார்த்துக் கொண்டு யோசித்தார்.

''ஸார்... ப்ளீஸ்..! இதுல யோசனை பண்ண ஒண்ணுமேயில்லை. புரபசர் நமோ நாராயணன் போல டாக்டர் பவன்குமார் ரொம்பவும் நம்பிக்கை வெச்சிருக்கார். ப்ரீதாவோட கெட்டுப்போன லிவரை



எடுத்துட்டு புதிய மனித லிவர் செல்களைச் செயற்கை முறையில் உற்பத்திப் பண்ணி ஸ்ப்ரே செய்தா கண்டிப்பா அது பலன் கொடுக்கும்ன்னு சொல்றார்.''

தேசாய் பெருமூச்சோடு நிமிர்ந்தார்.

''மிஸ்டர் மஹாதேவ்..! எனக்கு ஒரு ரெண்டு நாள் டயம் கொடுங்க... நான் புரபசர் நமோநாராயணன்கிட்டே பேசிட்டு சொல்றேன். மொதல்ல அவர் இந்த ட்ரீட்மெண்ட்டைப் பண்ண சம்மதிக்கணும்.''

''நீங்க சொன்னா அவர் கண்டிப்பாய்க் கேட்பார்.''

''அப்படிச் சொல்ல முடியாது... அவர் ஒரு மாதிரியான டைப்... ரொம்பவும் சார்ட் டெம்பர் வேற... நிதானமாய்த்தான் பேசிப் பார்க்கணும்.''

மஹாதேவ் ஒரு பெருமூச்சோடு தலையசைத்து விட்டு அறையைவிட்டு நமோ நாராயணின் எண்களை டயல் செய்தார்.




டெலிஃபோன் ஒலித்ததும், லேப்டாப்பில் எதையோ உன்னிப்பாய்ப் பார்த்துக் குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்த நமோ நாராயணன் ரிஸீவரை எடுத்து மெல்ல குரல் கொடுத்தார்.

''எஸ்..''

''நமஸ்தே... புரபசர் ஸார்.''

மறுமுனை யில் அமைச்சர் தேசாயின் குரல் கேட்டதும் பார்த்துக் கொண்டிருந்த லேப் - டாப்பை ஷட்டவுன் செய்துவிட்டு உற்சாகமாய்ப் பேச்சைத் தொடர்ந்தார் நமோ நாராயணன்.

''சொல்லுங்க மிஸ்டர் தேசாய்... எப்படி இருக்கீங்க?''

''எவ்ரி திங் ஃபைன்... அங்கே ரிசர்ச் ஒர்க் எல்லாம் எப்படியிருக்கு...?''

''வெரி வெல் கோயிங்... இதுவரைக்கும் பண்ணின எக்ஸ்பரிமெண்ட்ஸில் செவன்டிஃபைவ் பர்சண்ட் சக்சஸ் ரேட் கிடைச்சிருக்கு. அது ஹண்ட்ரட் பர்ஸண்ட்டாய்க் கிடைக்க வீ... ஹேவ்.. டு வெயிட்.''

''ஹௌ லாங்..?''

''எப்படியும் ஒரு ஆறுமாசம்மாயிடும்.''

''அதுக்கு முன்னே முடியாதா?''

''நோ... சான்ஸ்... இது என்ன சமையலா... சீக்கிரமாய்ப் பண்ணி முடிக்கிறதுக்கு..?''

''ஓ.கே... ஓ.கே... புரபசர் ஸார்.. இந்த செல் - ஜென்மா

ரிசர்ச்சில் ஒரு நல்ல ரிசல்ட் கிடைச்சா போதும்.''
''மிஸ்டர் தேசாய்... நீங்களும் நானும் ஒரே காலேஜில்
படிச்சோம். காலம் உங்களை மினிஸ்டர் போஸ்ட்டுக்குக்
கொண்டுபோயிற்று. என்னை புரபசர் பதவியில் உட்கார
வைத்தது. நாம இரண்டு பேரும் ஒரே காலேஜில்
படிச்சோம் என்கிற ஒரே ஒரு காரணத்துக்காக, எனக்கு
உங்க பதவியைப் பயன்படுத்தி இந்த 'செல் - ஜென்மா'
ப்ரொஜக்ட் ஒர்க்கைக் கொடுத்தீங்க. அந்த நன்றிக்காக
நானும் அதை நல்லவிதத்துல பயன்படுத்தி மருத்துவ
உலகமே வியக்கும்படியான சாதனையைப் பண்ணப்
போறேன்... ஸாரி... சாதனையைப் பண்ணப்போறோம்.''
தேசாய் சிரித்தார்.
''மத்திய அரசு தர்ற நிதிஉதவி ஒழுங்காய் உங்களுக்கு
வருதா?''
''துல்லியமாய்... வந்துட்டிருக்கு...''
''பணம் போதலைன்னா சொல்லுங்க. நிதியமைச்சர்
கிட்டே சொல்லி ஏற்பாடு பண்ணிடுவோம்.''
''தேவைப்படும்னு நினைக்கிறேன்...''
''இதோ பாருங்க புரபசர்... கவர்ன்மெண்ட்ல பணம்
கொட்டிக் கிடக்கு... உங்க டிமாண்ட் எவ்வளவுன்னு
சொல்லுங்க...''
''ரெண்டு நாள்ல சொல்றேன்...''
''ஓ.கே.... அப்புறம்...'' என்று சொன்ன தேசாய் சுற்றும்
முற்றும் பார்த்துவிட்டு குரலைத் தாழ்த்திக் கொண்டார்.
''அந்த மனோன்மணி எப்படியிருக்கா...?''
''அவளை ஒரு பரிசோதனை எலியாய் மாத்தி - அவ
உடம்புல சில எக்ஸ்பரிமெண்ட்களை நடத்திகிட்டு
வர்றேன்...''
''அவ தப்பிச்சுப் போயிடப் போறா..?''
''அந்த பயம் உங்களுக்கு வேண்டாம் மிஸ்டர்
தேசாய். நம்ம எடிசன் இருக்கும்போது ஒரு புழு பூச்சிகூட
இந்த ரிசர்ச் செண்டரிலிருந்து தப்பிச்சு வெளியே போக
முடியாது.''
''சரி.. இப்ப நான் எதுக்காக உங்களுக்கு ஃபோன்
பண்ணினேன் தெரியுமா?''
''சொல்லுங்க...''
''உங்க ரிசர்ச் செண்டர்க்கு மேலும் ஒரு பரிசோதனை
எலி வரப்போகுது.''
''என்ன தேசாய்! சொல்றீங்க...?''
''என்னோட செக்ரட்டரி மஹாதேவை உங்களுக்குத்
தெரியுமில்ல?''



''நல்லாவே தெரியும்.''
''அவரோட பொண்ணுக்கு லிவர் ப்ராப்ளம்.
நிச்சயதார்த்தம் நடந்த அன்னிக்கே ப்ளட் வாமிட் எடுத்து
சீரியஸ் கண்டிஷனுக்குப் போயிட்டா. டாக்டர்
பவன்குமார்தான் ட்ரீட்மெண்ட் கொடுத்தார். நோ
ப்ராக்ரஸ். ஆப்ரேஷன் பண்ணவும் வழியில்லைன்னு
சொல்லிட்டார். வேற வழியில்லாமே மஹாதேவ்
என்கிட்ட வந்தார். அவரோட பொண்ணுக்கு 'செல் -
ஜென்மா' ட்ரீட்மெண்ட் கொடுத்தாத்தான் அவ உயிர்
பிழைக்க முடியும்ன்னு பவன்குமார் சொன்னதாகக்
குறிப்பிட்டார்.
''டாக்டர் பவன்குமார் எனக்கும் தெரியும். ஒரு
தடவை டெல்லி செமினார், ஒண்ணுல மீட்
பண்ணிக்கிட்டோம். அப்போ இந்த செல் -
ஜென்மாவைப் பத்தி சொன்னேன். நல்ல ப்ராஜக்ட்ன்னு
பாராட்டினார். செல் - ஜென்மா ட்ரீட்மெண்ட்
நடைமுறைக்கு வந்துட்டா உலகத்துல பார்மஸி
கடைகளே இருக்கா துன்னு சொன்னார்.
டாக்டர்களுக்கும் ஆப்ரேஷன் தியேட்டர்கள்ல
வேலையிருக்காதுன்னு சொல்லி சிரிச்சார்.''
''அந்தப் பொண்ணு ப்ரீதாவுக்கு இருக்கிற லிவர்
ப்ராப்ளத்தை செல் - ஜென்மா ட்ரீட்மெண்ட்டால
குணப்படுத்த முடியுமா புரபசர்?''
''முயற்சிப் பண்ணிப் பார்க்கலாம்...''
''உங்களுக்கு நம்பிக்கை இருக்கா..?''
''ட்ரீட்மெண்ட் தோல்வியில் முடிய 49%ம்,
வெற்றியில் முடிய 51%ம் வாய்ப்பு இருக்கு. இதை ஒரு
பரிசோதனை என்கிற அடிப்படையில்தான் செய்ய
முடியும். இது தோல்வியில் முடிந்து ப்ரீதா உயிர்
இழக்கவும் வாய்ப்பு இருக்கிறதால, மஹாதேவ் லெட்டர்
எழுதி கொடுத்துடணும்.''
''அவர் லெட்டர் எழுதிக் கொடுத்துடுவார்.''
''அப்புறம்... ப்ரீதாவுக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்கும்
போது, அவளைத்தவிர வேற யாரும் ரிசர்ச் செண்டர்ல
இருக்கக்கூடாது...''
''நான் கண்டிஷனையெல்லாம் சொல்லிடறேன்.
நீங்க அதைப் பற்றியெல்லாம் ஒர்ரி பண்ணிக்க
வேண்டாம்.''
''ஓ.கே.. பேஷண்ட் ப்ரீதாவை என்னிக்கு இங்கே
கூட்டிட்டு வரப்போறாங்க...?''
''ரெண்டு நாள்ல சொல்றேன் புரபசர்...'' அவர்

மறுமுனையில் ரிஸீவரை வைத்துக் கொண்டிருக்கும்
போதே - எடிசன் வேக வேகமாய் உள்ளே வந்தான்,
கையில் சில கம்ப்யூட்டர் தாள்கள்.

"ஸ...ஸார்..."

"என்ன எடிசன்... இன்னிக்கு இவ்வளவு
சந்தோஷமாய் இருக்கே. எனி திங்க் இம்பார்ட்டண்ட்?"

"எஸ்... ஸார்..."

"நேற்றைக்கு நீங்க மைக்ரோ பயாலஜி லேப்ல
பண்ணின ஒரு அற்புத விஷயம் நம்பவே முடியாத ஒரு
சாதனையை உண்டு பண்ணியிருக்கு."

நமோ நாராயணன் புன்னகைத்தார்.

"நீ மொதல்ல . விஷயத்தைச் சொல்லு... அது
சாதனையா இல்லையான்னு நான் சொல்றேன்."

"ஸார்... நேற்றைக்கு ராத்திரி நீங்க 'மைகோ
பிளாஸ்மா மைகாய்ட்ஸ்' என்கிற பாக்டீரியாவோட
செல்லை எடுத்து. அதில் இருக்கிற மரபணு
வேதியியல்அமைப்பைப் பார்த்து - அதுக்கப்புறம். நீங்க
தயாரிச்ச வேதியியல் பொருட்கள் மூலமாய்ச்
செயற்கையான மரபணுக்களைத் துண்டு துண்டாய்
உருவாக்கி அதை ஒண்ணாய்ச் சேர்த்து. அதே பாக்டீரியா
செல்லில் செலுத்தினீங்க இல்லையா?"

"ஆமாம்..."

"இப்ப அந்த செல்லுக்குள்ளே என்னநடந்திருக்கு
தெரியுமா ஸார்..?"

"சொன்னாத் தானே தெரியும்?" ,

"அந்த பாக்டீரியாவோட செல்லுக்குள்ளே புகுந்த
நம்ம செயற்கை மரபணு. பழைய இயற்கை மரபணுவை
அழிச்சிட்டு - அந்த செல்லை தன்னோட கட்டுப்பாட
டுக்குக் கீழே கொண்டு வந்துடுச்சு... அதுமட்டுமல்ல
ஸார்... அதைத் தொடர்ந்து வழக்கம்போல் அந்த செல்
ரெண்டாகப் பிரிந்து... அப்படிப் பிரிந்த அந்த ரெண்டு
செல்லுமே நம்ம தயாரிப்பான செயற்கை மரபணுக்களைக்
கொண்ட புதியவகை பாக்டீரியா இன செல்மாதிரியே
மாறிடுச்சு"

"பரவாயில்லையே!"

"என்ன ஸார்... இது... நான் எப்பேர்ப்பட்ட செய்தியைச்
சொல்லியிருக்கேன். நீங்க கொஞ்சம்கூட ஆச்சரியம்
காட்டலை.."

நமோ நாராயணன் சிரித்தார்.

"ஒரே விஷயத்துக்கு ரெண்டுதடவை ஆச்சரியப்பட
முடியாது எடிசன்".



"நீங்க என்ன ஸார் சொல்றீங்க?"

"இப்போ மணி என்ன?"

"பத்தரை..."

"நான் காலையில் ஏழு மணிக்கே மைக்ரோபயாலஜி
லேப்புக்குப் போய். அந்த 'மைகோ பிளாஸ்மா
மைகாய்ட்ஸ்' பாக்டீரியாவின் செல் பிரிதலைப்
பார்த்துட்டேன். அந்த சந்தோஷத்தைக் கொண்டாட
புலமா ஒரு பாட்டையும் பாடிட்டேன்."

"ஓ! நான்தான் லேட்டா..?"

நமோ நாராயணன் எழுந்து வந்து எடிசனின்
தோள்மேல் கையை வைத்தார். "எடிசன்! இது ஒரு
சாதனைதான். இருந்தாலும் செல் ஜெனமா ப்ராஜெக்டில்
நாம சாதிக்க வேண்டியது இன்னமும் எவ்வளவோ
இருக்கு. ஒரு உயிரோட ஜீவநாடியான மரபணுவை இந்த
ரிசர்ச் சென்டர்ல செயற்கையாய் உருவாக்கிட்டோம்.
இந்த வெற்றியை நாம மனித செல்கள் வரை கொண்டு
போகணும். மினிஸ்டர் தேசாய் இப்பத்தான் கொஞ்ச
நேரத்துக்கு முன் எனக்கு ஃபோன் பண்ணினார். இன்னும்
ரெண்டு நாள்ல டெல்லியிலிருந்து ஒரு பரிசோதனை
எலி நம்ம ரிசர்ச் சென்டர்க்கு வரப்போகுதாம்."

"யார் ஸார் அது..?"

"பேரு ப்ரீதா. தேசாய்கிட்டே செக்ரட்ரியாய் வேலை
பார்க்கிற மஹாதேவ்வோட பொண்ணு. லிவர்
ஃபெயிலியர் கேஸ். 'செல் - ஜெனமா' ட்ரீட்மெண்ட்
டால்தான் குணப்படுத்த முடியும்னு டாக்டர்
புவன்குமார் சொல்லியிருக்கார். அவளைக் கொண்டு
வரப்போறாங்க..."

"நம்மால குணப்படுத்தமுடியுமா ஸார்..?"

"முயற்சி செய்வோம்... அந்தப் பொண்ணு ப்ரீதாவோட
அதிர்ஷ்டம் எப்படி இருக்குன்னு பார்ப்போம்." புரபசர்
நமோநாராயணன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே
இண்டர்காம் ஒலித்தது..."

எடிசன் ரிஸீவரை எடுத்தான்.

மறுமுனையில் செக்யூரிட்டிதான்.

"ஸார்..."

"சொல்லு..."

"பேங்கிலிருந்து மானேஜரும் அந்தப் பொண்ணும்
வந்து இருக்காங்க.... அய்யாவைப் பார்க்கணுமாம்..."

"உள்ளே அனுப்பி வை..." எடிசன் ரிஸீவரை
வைத்துவிட்டு புரபசரை ஏறிட்டபடி விஷயத்தை
சொல்ல, நமோ நாராயணன் தன்னுடைய உதடுகளில்

ஒரு புன்முறுவலை நிறுத்தினார்.
"ஆராய்ச்சிக்கான தவணை நிதி உதவியைக் கொண்டுவந்து இருப்பாங்கன்னு நினைக்கிறேன். நீ போய் அவங்களை ரிஸீவ் பண்ணி வரவேற்பறையில் உட்கார வை. நான் பின்னாடியே வந்துடறேன்."




**ஹா**ஸ்பிட்டல்.
கட்டிலில் ப்ரீதா சோர்வாய்க் கண்களை மூடிப்படுத்து இருக்க, சுற்றிலும் டாக்டர் பவன்குமார், மஹாதேவ், புனிதா, சபரி வாசன், சித்தரஞ்சன் நின்றிருந்தார்கள்.
டாக்டர் சொல்லிக்கொண்டிருந்தார்.
"இதோ பாரம்மா...! புரபசர் நமோ நாரயணன் 'செல் - ஜென்மா' என்கின்ற செயற்கை செல் ட்ரீட்மெண்ட்டில் ஒரு புரட்சியே பண்ணிட்டு வர்றார். இந்த ட்ரீட்மெண்ட் இன்னமும் அதிகாரபூர்வமாய் நடைமுறைக்கு வரலைன்னாலும், சோதனையின் அடிப்படையில் பண்ணப் போறார். உனக்கு இந்த ட்ரீட்மெண்ட் நிச்சயமாய் பலன் தரும்ன்னு நான் நம்பறேன்... உனக்கும் அந்த நம்பிக்கை வேணும்..."
ப்ரீதா சோர்வான கண்களோடு பவன்குமாரைப் பார்த்தாள்.
"டா... டாக்டர்..."
"சொல்லும்மா..."
"நான் யார்க்கும் எந்த ஒரு கொடுதலையும் பண்ணியதில்லை. இந்த வயசுல எனக்கு மட்டும் லிவர் ஏன் ஃபெய்லியர் ஆகணும்...?"
"நீ ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கணும் ப்ரீதா..! பாவ புண்ணியங்களின் அடிப்படையில் யார்க்குமே வியாதிகள் வர்றதில்லை. எல்லாமே ஜீன்களின் விளையாட்டு. உன் செல்லில் என்ன எழுதப்பட்டு இருக்கோ.... அதுதான் உன்னோட ஆயுட்காலம் வரைக்கும் நடக்கும். பெரும்பாலும் லிவர் கெட்டுப்போகக் காரணம் குடிப்பழக்கம்ன்னு சொல்லுவாங்க. பட், எனக்குத் தெரிஞ்சு நிறைய குடிகாரர்களோட லிவர் அவங்களோட ஆயுட்காலம் வரைக்கும் ஆரோக்யமாகவே இருந்து இருக்கு. குடிப்பழக்கம் இல்லாத பல ஆண்களோட லிவர்கள் கெட்டுப் போவதையும் பார்த்து இருக்கேன். ஸோ, வர்ற வியாதிகளுக்கெல்லாம் காரணம் ஜீன்கள்தான். இந்த உண்மையின் அடிப்படையில்தான்



புரபசர் நமோ நாராயணன் கடந்த பத்து வருஷகாலமாய்ப் பாடுபட்டு 'செல் - ஜென்மா' என்கிற செயற்கை செல்லைக் கண்டு பிடிச்சிருக்கார். அந்தச் செயற்கை செல்களைத்தான் அவர் பயன்படுத்தப்போறார். நாளைக்கு நாம எல்லோரும் சென்னை புறப்பட்டுப் போகப்போறோம்."
"நான் அங்கே எவ்வளவு நாட்கள் தங்க வேண்டியிருக்கும் டாக்டர்?"
"எப்படியும் ஒரு மாத காலம்..."
"அவ்வளவு நாளாகுமா டாக்டர்?"
சபரிவாசன் குறுக்கிட்டுப் பேசினான்.
"ப்ரீதா... உனக்கு வந்திருக்கிறது... காய்ச்சலோ இருமலோ கிடையாது... ரெண்டு நாள்ல குணமாகுற துக்கு. லிவர் ஃபெய்லியர்ங்கிறது ஒரு பெரிய பிரச்னை. அது குணமாக அதிகமான நாட்கள் தேவைப்படும். நீயும் நானும் கல்யாணம் பண்ணிகிட்டு சந்தோஷமாய் இருக்கணும்ன்னா பொறுமையாய் நாட்களைக் கடத்தணும்..."
ப்ரீதாவின் கண்களில் நீர் பளபளத்து.
"அட..! ஏன்.. அழறே... ப்ரீதா..?"
"எனக்கு இருக்கிற பிரச்னை தெரிஞ்ச பிறகும் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிற முடிவோடு இருக்கிற உங்களை நினைக்கும்போது எனக்கு ரொம் பவும் பெருமையாய் இருக்கு. யார்க்காக இல்லைன் னாலும் உங்களுக்காகவாவது நான் குணமாகித் திரும்பணும்."
"அது கண்டிப்பாய் நடக்கும்..." சொன்ன டாக்டர் மஹாதேவ் பக்கம் திரும்பினார்.
"நாளைக்கு ஃப்ளைட் எத்தனை மணிக்கு?"
"காலை ஏழு மணிக்கு டாக்டர்..."
"எத்தனை பேர் போறோம்?"
"நீங்க, நான், புனிதா, மாப்பிள்ளை சபரிவாசன்."
"மிஸ்டர் சித்தரஞ்சன் வரலையா?"
சித்தரஞ்சன் பவன்குமாரை ஏறிட்டார். "ஸாரி டாக்டர்! நாளைக்குக் காலையில் ஐ.டி. சம்பந்தப்பட்ட ஃபாரின் டெலிகேட்ஸ் என்னைப் பார்க்க வர்றாங்க. ரெண்டுநாள் தங்கியிருப்பாங்க... அவங்ககூட சில பேச்சுவார்த்தை களை நடத்த வேண்டியிருக்கு.
"நோ... ப்ராப்ளம்... யூ கேரி ஆன்... மிஸ்டர் சித்தரஞ்சன்! உங்க மருமகப் பொண்ணைக் குணமாக்கிக் கூட்டிக்கொண்டு வர்றது எங்க பொறுப்பு..."

டாக்டர் பேசிக்கொண்டு இருக்கும்போதே அவர்க்கு செல்ஃபோன் அழைப்பு வர - அவர் செல்ஃபோனோடு அறையினின்றும் வெளியேறி வராந்தாவில் நின்று கொண்டு பேச, சித்தரஞ்சன் சபரிவாசனின் தோளைத் தொட்டார்.

''உன்கிட்ட கொஞ்சம் பேசணும்... வெளியே வர்றியா.?''

சபரிவாசன் வெளியே வந்தான்.

''சொல்லுங்கப்பா..!''

''உனக்கு நம்பிக்கை இருக்கா..?''

''எதைப்பத்திக் கேக்கறீங்க...?''

''ப்ரீதாவுக்கு கொடுக்கப் போகிற அந்த 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட்டில் அவளுக்கு குணம் கிடைக்கும்ன்னு நினைக்கறியா?''

''கண்டிப்பா...''

''ஒருவேளை கிடைக்கலைன்னா...''

''ஹண்ட்ரட் பர்ஸண்ட் குணம் கிடைக்கும்ன்னு டாக்டர் பவன்குமார் சொல்லியிருக்கார்.''

''டாக்டர்கள் சொல்றது சிலசமயம் நடக்காமல் போறதும் உண்டு.''

''இதோ பாருங்கப்பா... உங்க எண்ணம் என்னான்னு எனக்கு நல்லாவே தெரியும். குவைத்தில் இருக்கிற உங்க ஃப்ரண்ட்டான தொழிலதிபர் ஹாசனோட பொண்ணை, நான் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நினைக்கறீங்க. அவர்கூட அடிக்கடி ஃபோன்ல பேசறதும் எனக்குத் தெரியும். ஹாசன் அங்கிளையும் எனக்குத் தெரியும். அவரோட பொண்ணு சாதனாவையும் எனக்குத் தெரியும். நல்ல ஃபேமிலி. இருந்தாலும் எனக்கு ப்ரீதாவைத்தான் பிடிச்சிருக்கு. அவளுக்கு எப்படியும் குணமாயிடும். அவளைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். இப்ப நீங்க செய்யவேண்டியதெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான். வீட்டுக்குப் போகிற வழியில் ஏதாவது ஒரு கோவில் வந்தா, காரை நிறுத்திவிட்டு கோவிலுக்குப் போங்க. ப்ரீதாவுக்காக ப்ரே பண்ணுங்க...''

''டேய்..!''

''ஸாரிப்பா... மேற்கொண்டு எதுவும் பேசாதீங்க... நான் ஒருவேளை ப்ரீதாவைப் பார்க்காமே இருந்திருந்தா, கண்டிப்பாய் நீங்க சொல்ற பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணுவேன். இப்ப நான் உங்க பேச்சைத் தட்டறதாய் நினைக்க வேண்டாம். தப்பாவும் நினைக்க வேண்டாம்.''



சொல்லிவிட்டு ப்ரீதா இருந்த அறையை நோக்கி சபரிவாசன் போக, சில விநாடிகள் மௌனமாய் இருந்த சித்தரஞ்சன் தன் கோட் பாக்கெட்டில் இருந்த செல்ஃபோனை எடுத்தார். டயலில் எண்களை அழுத்தினார். மறுமுனையில் இணைப்பு கிடைத்ததும் பேசினார்.

''ஹாசன்..! நான் சித்தரஞ்சன்...''

''என்ன..?''

''நினைச்சபடி எதுவும் நடக்காது போலிருக்கு.''

''நீ இதையேதான் ஒவ்வொரு தடவையும் சொல்றே...''

''இனிமே சொல்லமாட்டேன்... சபரிவாசன் ப்ரீதாவைக் கல்யாணம் பண்ணிக்கிற தன்னோட முடிவில் பிடிவாதமாய் இருக்கான். 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட் கொடுத்தா கண்டிப்பாய் அவளுக்கு குணமாயிடும்ன்னு நம்பறான். ஸோ...''

''என்ன தயக்கம். சொல்லு..!''

''அவனுடைய விருப்பப்படி ப்ரீதாவையே கல்யாணம் பண்ணிக்கட்டும்.''

''என்ன... நீயே... மாறிட்டே....?''

''வேற வழியில்லை... உன்னோட பொண்ணுக்கு வேற இடத்துல மாப்பிள்ளை பார்த்துடு..!''

செல்ஃபோனை அணைத்தான் சித்தரஞ்சன்.

## 15



புரபசர் நமோ நாராயணன் வரவேற்பறைக்கு வந்த போது கப்ராஜாவும், பேங்க் மானேஜர் பெருமாள் ராஜாவும் டீபாயின் மேல் இருந்த புத்தகங்களைப் புரட்டியபடி காத்திருந்தார்கள்.

''ஸாரி... உங்களைக் காக்க வெச்சுட்டேன்.'' சொல்லிக் கொண்டே போய் எதிரில் உட்கார்ந்தார்.

பெருமாள் ராஜா சிரித்தார்.

''நோ... ஸார்... நாங்க அப்படியொண்ணும் ரொம்ப நேரமாய் வெயிட் பண்ணலை. ஜஸ்ட் டென் மினிட்ஸ்தான்...!''

''சொல்லுங்க... எனிதிங்க்... இம்பார்ட்டண்ட்...?''

''எஸ்...! உங்க ஆராய்ச்சிக்காக இந்த டொம் ட்யூ அமௌண்ட்டைக் கொடுத்துட்டு போலாம்ன்னு

வந்தோம்.'' மானேஜர் சொல்லிக் கொண்டே கையில் வைத்திருந்த செக் கவரைக் கொடுத்தார்.

''தேங்க்யூ...! இந்த ஒய்.டி.டி. ரிசர்ச் சென்டர் தடையில்லாமே வெற்றிகரமாய் இயங்கிட்டு இருக்கிறதுக்குக் காரணம் நீங்க தவறாமே கொண்டுவந்து தர்ற இந்த ஃபைனான்சியல் ஹெல்ப்தான். வெரி வெரி கைண்ட் ஆஃப் யூ மிஸ்டர் பெருமாள்ராஜா அண்ட் மிஸ் சுப்ரஜா...''

பெருமாள்ராஜா சிரித்தார். ''நாங்க அப்படி என்ன பண்ணிட்டோம் ஸார்..? இந்த கவர்மெண்ட் நீங்க பண்ற ஆராய்ச்சிக்காக ஒரு பெரிய தொகையை ஒதுக்கியிருக்கு. அந்தத் தொகையைக் குறிப்பிட்ட தேதிகளில் கொடுக்கச் சொல்லியிருக்கு. நாங்க அந்த வேலையைத்தான் பண்ணிட்டு இருக்கோம். இட் ஈஸ்... அவர் ட்யூட்டி ஸார்.''

நமோ நாராயணன் சுப்ரஜாவைப் பார்த்தபடி ''என்னம்மா! வந்ததிலிருந்து நீ ஒரு வார்த்தைக் கூட பேசலையே... யூ... ஸீம்ஸ் டு பி வெரி டல். என்ன உடம்புக்கு ஏதும் முடியலையா..?'' என்று கேட்டார்.

சுப்ரஜா பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டு மெல்லிய குரலில் பேசினாள். ''ஒண்ணுமில்ல ஸார்... என்னோட ஃப்ரெண்ட் ஒருத்தி மனோரஞ்சிதம்ன்னு பேரு... நானும்கூட ரெண்டு வாரத்துக்கு முந்தி உங்களுக்கு ஃபோன் பண்ணி, அவ உங்களை மீட் பண்ண விரும்பறதைப்பற்றி சொன்னேன்.''

''ஆமா... ஞாபகமிருக்கு''

''அந்தப் பொண்ணைக் காணோம் ஸார்''

''என்னது காணோமா?''

''ஆமா ஸார்... அவளுக்கு என்னாச்சுன்னு தெரியலை. கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் அவ ஒர்க் பண்ற பத்திரிகை ஆபீஸிலிருந்து அந்த ஆசிரியர் ராமாமிர்தம் எனக்கு ஃபோன் பண்ணி சொன்னார். நானும் எனக்குத் தெரிஞ்ச எல்லா இடத்துக்கும் ஃபோன் பண்ணிக் கேட்டுட்டேன். அவளைப்பத்தி யாருமே தெரியாதுன்னு சொல்லிட்டாங்க. அவளுக்கு என்னாச்சோ ஏதாச்சோன்னு மனசு கிடந்து அடிச்சுக்குது ஸார்.''

''அந்தப் பொண்ணுக்கு ஃபேமிலி..?''

''மனோரஞ்சிதத்துக்கு அம்மா இல்லை... அப்பா மட்டும்தான். அவரும் குடிகாரர். அப்பாவுக்கு புத்தி சொல்லிப்பார்த்தும், அவர் கேட்காததினால இவ சென்னை வந்துட்டா. காலேஜில் படிக்கிற நாளில்



இருந்தே ரொம்பவும் துணிச்சல்காரி. கவிதை, கட்டுரைன்னு நல்லா எழுதுவா... அந்தத் திறமைதான் அவளை ஒரு ஜர்னலிஸ்ட்டாய் மாத்தியது. மனித சமுதாயத்துக்கு விரோதமாய் யார் செயல்பட்டாலும் சரி, அவங்க எந்தத் துறையில் இருந்தாலும் சரி - தன்னோட எழுத்துக்களாலேயே நார் நாராய்க் கிழிச்சிடுவா...'' சுப்ரஜா பேசப் பேச நமோ நாராயணன் கையமர்த்தினார்.''

''உன்னோட ஃப்ரெண்டை ஆபத்துத் தேடி வர இது ஒண்ணு போதுமே..!''

''அதான் ஸார்... எனக்கும் பயம்மாயிருக்கு. இடியோசை பத்திரிகையின் ஆசிரியர் ராமாமிர்தம் போலீஸ் கமிஷனர் விஜயராகவனை மீட் பண்ணி புகார் ஒண்ணைக் கொடுத்திருக்கார். எப்படியும் ரெண்டு நாட்களுக்குள்ளே மனோரஞ்சிதத்தை கண்டுபிடிச்சு தர்றதா உறுதி கொடுத்திருக்கார் கமிஷனர்.''

''அப்புறம் என்ன... தைரியமாய் இரும்மா... உன்னோட ஃப்ரெண்ட் எப்படியும் வந்துடுவா...''

''உங்க வார்த்தைப் பலிக்கட்டும் ஸார்...''

சுப்ரஜாவும் பாங்க் மானேஜரும் எழுந்து கொண்டார்கள்.

''என்ன புறப்பட்டீங்க..?''

''இப்பவே புறப்பட்டாத்தான் ட்ராஃபிக்ல மாட்டாமே பேங்க் போய்ச் சேர முடியும் ஸார். அடுத்த டெர்ம்க்கு செக் கொண்டுவரும்போது கொஞ்சம் எர்லியராவே வந்துடறோம்.

''அந்த நீலநிற மல்லிகை நிறைய பூத்திருக்கு. கொஞ்சம் பறிச்சுட்டு போறியாம்மா?''

''வேண்டாம் ஸார்...! மனோரஞ்சிதம் பத்திரமாய் திரும்பட்டும். நானும் அவளும் ஒண்ணாவே வந்து உங்க அனுமதியோடு பறிச்சுட்டுப் போறோம். அப்படியே அவளுக்கு சின்னதாய் ஒரு பேட்டியும் குடுத்துடுங்க ஸார்.''

''கண்டிப்பாய்...''

அவர்கள் புறப்பட்டார்கள்.

கார் புறப்பட்டு, கேட்டைத் தாண்டும்வரைக் காத்திருந்த எடிசன் பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்டான், கொஞ்சம் சத்தம் போட்டுப் பாடினான்.

**''இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி**
**எங்கெங்கோ அலைகின்றார் ஞானத் தங்கமே!''**

பாட்டைக் கேட்டு நமோ நாராயணன் சிரித்துக் கொண்டு இருக்கும்போதே, அவருடைய செல்ஃபோன்

ரிங்டோனை வெளியிட்டது.

''எடுத்து யார்ன்னு பாரு எடிசன்?''

எடுத்துப் பார்த்தான் எடிசன்.

''ஸார்...! மினிஸ்டர் தேசாய்!''

''கொடு!''

வாங்கிப் பேசினார்.

''சொல்லுங்க மிஸ்டர் தேசாய்..!''

''நாளைக்குக் காலையில் ஃப்ளைட்ல ப்ரீதாவைக் கூட்டிக்கிட்டு மஹாதேவ், டாக்டர் பவன்குமார், புனிதா, சபரிவாசன் நாலு பேரும் புறப்பட்டு வர்றாங்க... சென்னைக்கு பதினோரு மணிக்கெல்லாம் வந்துருவாங்க புரபசர்..!''

''வரட்டும்... வரட்டும்... ப்ரீதாவை என் பொறுப்புல விட்டுட்டு போயிடுவாங்கல்ல..? யாரும் அவளோடு ஸ்டே பண்ணமாட்டாங்களே...?''

''பண்ணமாட்டாங்க... நான் எல்லா நிபந்தனைகளையும் சொல்லிட்டேன்... நீங்க ப்ரீதாவுக்கு 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிங்க. அவளோட ஜாதகத்துல ஆயுள் கெட்டியாய் இருந்தா பொழைக்கட்டும். இல்லேன்னா போய்ச் சேரட்டும். நம்மைப் பொறுத்தவரை ப்ரீதா ஒரு பரிசோதனை எலி.. தட்ஸ் ஆல்...! பெரிசா ஒர்ரி பண்ணிக்க வேண்டாம்''

**ஒரு மினி கேள்வியும் - ஒரு மினி பதிலும்:**

**கேள்வி:** செயற்கை செல் தயாரிப்பு மனித குலத்துக்கு நன்மை தருமா?

**பதில்:** செயற்கை செல் உருவாக்கம் பற்றி மதத்தலைவர்கள் சொல்வது இதுதான். கத்தோலிக்க கிறிஸ்துவர்களின் தலைமையிடமான வாடிகனின் முக்கிய மதபோதகர் **மோன் சிக்னோர்** இத்தாலி டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியில் கடவுள் மட்டும்தான் உயிரைப் படைக்க முடியும். மனிதர்களாக பிறந்தவர்க்கு அந்த உரிமை கிடையாது. விஞ்ஞானத்தில் இது ஒரு ஆக்கபூர்வமான வளர்ச்சிதான். இதை எதிர்காலத்தில் கையாள நேர்ந்தால் மனித குலத்தில் விபரீதமான பிரச்னைகள் சந்திக்க வேண்டியிருக்கும்.

இந்து மதத்தலைவர்கள் கருத்து தெரிவிக்கையில். சோதனைச்சாலையில் உயிரை உருவாக்குவது



கடவுளுக்கு எதிரானது. எதிர்காலத்தில் இது திருமணம், குடும்பம் மதிப்புகளை அழித்துவிடும். தண்ணீர் போன்ற, மனிதர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு விஞ்ஞானத்தைப் பயன்படுத்த வேண்டுமே தவிர, இது போன்ற விபரீதங்களை விலை கொடுத்து வாங்க விஞ்ஞானத்தைப் பயன்படுத்தக்கூடாது.




மறுநாள் காலை பதினொரு.

புரபசர் நமோ நாராயணன் தன்னுடைய வரவேற்பறையில் மஹாதேவை கைகுலுக்கி வரவேற்றார். அவர்க்குப் பின்னால் வரிசையில் புனிதா, டாக்டர் பவன்குமார், சோர்வோடு ப்ரீதாவும் பார்வைக்குக் கிடைத்தார்கள்.

மஹாதேவ் ஒவ்வொருவராய் அறிமுகப்படுத்த - நமோ நாராயணன் புன்னகை தரித்த முகத்தோடு எல்லோரிடமும் கை குலுக்கிவிட்டு, ப்ரீதாவை ஏறிட்டார்.

''ப்ரீதா..! இந்த ரிசர்ச் செண்டர்க்குள்ளே நீ இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் சந்தோஷமாய் இருக்கணும். 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட் இந்த மருத்துவத்துறைக்கு ரொம்பவும் புதுசு... இதனால பயன் அடையப்போகிற முதல் பேஷண்ட் நீதான்...''

''எனக்கு நம்பிக்கையில்லை... என்னோட அப்பா அம்மாவுக்காவும், என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற விஷயத்தில் பிடிவாதமாய் இருக்கிற சபரிவாசனுக்காகவும்தான் இந்த 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்டுக்காக ஒத்துக்கிட்டேன். எனக்கு வாழணும் என்கிற ஆசையே இல்லை...''

''நோ.. நோ... இப்படியெல்லாம் நீ நம்பிக்கை இல்லாமல் பேசக்கூடாது. ஒரு பேஷண்ட்டுக்கு நம்பிக்கைதான் முதல் மருந்து. நீ நம்பிக்கையோடும் சந்தோஷத்தோடும் இருந்தாத்தான் நானும் அந்த செல் - ஜென்மா ட்ரீட்மெண்ட்டை உற்சாகமாய் செய்ய முடியும்... அதுக்கு உன்னோட ஒத்துழைப்பு எனக்கு முழுஅளவில் வேணும்.''

சரி என்பது போல ப்ரீதா கண்ணீரோடு தலையசைத்தாள்.

நமோ நாராயணன் டாக்டர் பவன்குமாரை ஏறிட்டார்.

''ப்ரீதாவோட லிவர் ப்ராப்ளம் சம்பந்தப்பட்ட மெடிக்கல்

ரிப்போர்ட்ஸ் எல்லாம் கொண்டு வந்து இருக்கீங்களா..?''

''இதோ..!''

டாக்டர் பவன்குமார் கையில் வைத்து இருந்த ஒரு கனமான ஃபைலை நீட்ட அதை வாங்கிப் பிரித்தார் நமோ நாராயணன். தாள்களையும் ஸ்கேன் ரிப்போர்ட்களையும் புரட்டினார். பிறகு டாக்டரின் காதருகே அவர்க்கு மட்டும் கேட்கும்படியாய்ச் சொன்னார்.

''லிவர் ரொம்பவும் வொர்ஸ்ட் கண்டிஷன்ல இருக்கு. இத்தனை நாள் நீங்க ஹாஸ்பிட்டல்ல வெச்சு ட்ரீட்மெண்ட் கொடுத்ததே தப்பு. ரெண்டு வாரங்களுக்கு முன்னாடி ப்ரீதாவை நீங்க இங்கே கொண்டு வந்து இருக்கணும்.''

''ஸாரி புரபசர்... நான் கொடுத்த மருந்துகள் ஓரளவுக்கு ரீயாக்ட் செய்யும்ன்னு நினைச்சேன்.''

''இட்ஸ் ஓகே..!. இன்னிக்கே ட்ரீட்மெண்ட்டை ஸ்டார்ட் பண்ணிடலாம்.'' சொன்ன நமோ நாராயணன் பின்பக்கம் திரும்பிப் பார்த்து குரல் கொடுத்தார்.

''எடிசன்!''

''ஸார்...''

''ட்ரீட்மெண்ட் க்யூப் தயார் நிலையில் இருக்கா?''

''இருக்கு ஸார்...''

நமோ நாராயணன் முன்னால் நடக்க எல்லோரும் பின் தொடர்ந்தார்கள். புரபசர் நடந்து கொண்டே கேட்டார்.

''ப்ரீதாவை கல்யாணம் பண்ணிக்கப்போற அந்த மாப்பிள்ளை பையன் சபரிவாசன் வரலையா..?''

''வரலை..! அவருடைய ஐ.டி. கம்பெனியில் ஒரு ரெய்ட் ஆபரேஷன் போயிட்டிருக்கு... ஸ்பாட்ல இருக்க வேண்டிய நெஸஸிடி. அடுத்த வாரம் உங்களைப் பார்க்க வருவார்.''

புரபசர் ட்ரீட்மெண்ட் க்யூப்புக்குள் நுழைந்தார்.

நல்ல மஞ்சள் வெளிச்சத்தில் இருந்தது அறை. எல்லாப்பக்கமும் கண்ணாடிச் சுவர்கள். அறையின் மையத்தில் போடப்பட்டிருந்த நீளமான ஃபைபர் மேஜையில், சிறியதும் பெரியதுமாய் நிறைய மைக்ரோஸ் கோப்புகள். நிறம் நிறமாய், சின்னச்சின்னப் பாட்டில்கள். புரபசர் எல்லோரையும் பார்த்தபடி சொன்னார்.

''ப்ரீதாவுக்கு இந்த அறையில்தான் ட்ரீட்மெண்ட் கொடுக்கப்போறேன். ட்ரீட்மெண்ட் முடிய எவ்வளவு நாட்களாகும்ன்னு என்னால் இப்போதைக்கு சொல்லமுடியாது. எப்படியும் ஒரு மாதகாலம் ஆகலாம். ட்ரீட்மெண்ட்டோட ப்ராகிரஸ் எப்படியிருக்குன்னு



தெரிஞ்சுக்கவும் நீங்க ஆசைப்படக் கூடாது. ப்ரீதாவைப் பார்க்கவும் வரக்கூடாது.''

மஹாதேவ் குறுக்கிட்டுக் கேட்டார்.

''வந்து பார்த்தா என்ன..?''

''பார்க்கக்கூடாது. அனுமதியில்லை''

''யார்கிட்டே அனுமதி வாங்கணும்?''

மஹாதேவின் பேச்சில் கோபம் இருந்ததைக் கவனித்த புரபசர், அவரை வியப்பாய்ப் பார்த்தார்.

''என்னோட நிபந்தனைகள் மினிஸ்டர் தேசாய் உங்ககிட்டே சொல்லலையா..?''

''சொன்னார்.''

''அப்புறம் என்ன..?''

''சொன்னா அப்படியே நடந்துக்கணும்ன்னு ஏதாவது சட்ட விதி இருக்கா...?''

''உங்க பேச்சு சரியில்லையே...''

''எனக்கு பேச்சு மட்டும்தான் சரியில்லை. உங்களுக்கு நடத்தையே சரியில்லையே.?''

எடிசன் கோபாவேசமாய் ஓடிவந்தான். ''என்ன உங்க பொண்ணுக்கு ட்ரீட்மெண்ட் எடுக்க வந்தீங்களா..?'' இல்லை கலாட்டா பண்ண வந்தீங்களா..?''

இப்போது புனிதா சிரித்தாள்.

''ட்ரீட்மெண்ட்டா... யாருக்கு?''

''உங்க பொண்ணுக்குத்தான்..!''

''அவ உடம்புக்கு ஒண்ணுமே இல்லாதபோது ட்ரீட்மெண்ட் எதுக்கு?''

டாக்டர் பவன்குமாரிடம் திகைப்போடு திரும்பினார் நமோ நாராயணன்.

''என்ன டாக்டர் இதெல்லாம்..?''

உதடு பிரியாமல் - அவர் சிரித்தார்.

''ஸாரி புரபசர் ஸார்... ப்ரீதாவுக்கு உடம்புரீதியாய் எந்த ஒரு பிரச்னையும் இல்லை. அவளுக்கு லிவர் டேமேஜ்ன்னு சொன்னது பொய். எல்லாமே ஒரு ட்ராமா...! நீங்க பார்த்தது எல்லாமே வேற ஒரு பொண்ணோட ஸ்கேன் ரிப்போர்ட்''

நமோ நாராயணன் உறைந்தார்.

''ட்ராமாவா... எதுக்கு..?''

''இந்த ஓய்.டி.டி. ரிசர்ச் சென்டர்க்குள்ளே இப்படி ஒட்டு மொத்தமாய் நுழையத்தான்!''

நமோ நாராயணன் பதட்டமாகிக் கத்தினார்.

''எடிசன்..!''

மஹாதேவ் தன் உதட்டில் பதித்துக் கொண்ட

கேலிப்புன்னகையோடு. 'புரபசர் ஸார்.... உங்க ஆள் எடிசன் அங்கே என்ன மாதிரியான நிலைமையில் இருக்கான்னு பாருங்க...'' என்று சொல்லி கைகாட்ட புரபசரின் பார்வை அங்கே போய்த் திகைத்தது.

ப்ரீதாவின் கையில் முளைத்திருந்த துப்பாக்கி ஒன்று சுவரோரமாய் நின்றிருந்த எடிசனைக் குறிபார்த்துக் கொண்டிருந்தது.



17

நமோ நாராயணனும் எடிசனும் என்ன செய்வது என்று தெரியாமல் சுற்றும் முற்றும் பார்க்க இப்போது டாக்டர் பவன்குமார், மஹாதேவ் கைகளில் துப்பாக்கிகள் உற்பத்தியாகி நிமிர்ந்தன. இரண்டு பேரையும் பார்த்தன.

நமோ நாராயணன் திக்கித் திணறும் குரலில் கேட்டார்.

''எதுக்காக இப்படி ஒரு பொய்..! உங்களுக்கு என்ன வேணும்..?''

மஹாதேவ் மெல்ல பக்கத்தில் வந்தார். தன் கையில் இருந்த பிஸ்டலால் நமோ நாராயணனின் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டிவிட்டுச் சொன்னார்.

''எங்களுக்குச் சொந்தமான ஒண்ணு உங்ககிட்டே இருக்கு. அது எங்களுக்கு வேணும்...''

''எ....ன்...ன...?''

''மனோரஞ்சிதம்...''

''........................''

''என்ன அப்படிப் பார்க்கறீங்க புரபசர் ஸார்...? மனோரஞ்சிதம் எங்க ஆள்.. வெளியுலகத்துக்கு அவ ஜர்னலிஸ்ட். பட், எங்களுக்கு அவ ஸ்பை ஏஜெண்ட். உங்களோட ஒய்.டி.டி. ரிசர்ச் சென்டர் பற்றிய செய்திகள் எல்லாம் அவ்வப்பொழுது எங்களுக்கு வந்துட்டே இருக்கும். ஆனா, அவளாலே உங்க ரிசர்ச் சென்டர்க்குள்ளே மட்டும் நுழையவே முடியலை. அதுக்கும் ஒரு வாய்ப்பு கிடைச்சது. சுப்ரஜா அவளோட ஃப்ரண்ட். பேங்கில் வேலை பார்க்கிற பொண்ணு. அவ பேரை உபயோகப்படுத்தி மனோரஞ்சிதம் உங்களைப் பார்க்க வந்தா. இந்தக் கோட்டைக்குள்ளே நுழைஞ்சா. அதுக்கு அப்புறம் அவ வெளியே வரலை. அதாவது, நீங்க வெளியே விடலை. இப்ப மனோரஞ்சிதம் எங்களுக்கு வேணும். அவ உயிரோடு இருக்காளா...? இல்லை... உங்க



'செல் - ஜென்மா' ஆராய்ச்சிக்கு உபயோகப்படுத்திகிட்டு கொன்னுட்டீங்களா..?''

நமோ நாராயணன் பயத்தில் எச்சில் விழுங்கி தலையாட்டினார்.

''மனோரஞ்சிதம் உயிரோடுதான் இருக்கா.... நா... நான்.. அவளை... ஒண்ணும் பண்ணலை.''

''எங்கே... அடைச்சு வெச்சு இருக்கீங்க...?''

''எக்ஸ்பரிமெண்ட் செல்லில் நாலைஞ்சு பெண்களோடு அவளும் இருக்கா.... ஆனா...''

''என்ன... ஆனா..?''

''இப்போ, மனோரஞ்சிதமும் அந்தப் பெண்களும் பாதி மயக்கத்தில் இருக்காங்க... அவங்களுக்குச் சாயந்தரமதான் மயக்கம் தெளியும்.''

''அந்த எக்ஸ்பரிமெண்ட் செல் எங்கே இருக்கு...?''

''கட்டிடத்தோட பின்பக்கம்...''

''வாங்க... போகலாம்...''

நமோ நாராயணனும் எடிசனும் முன்னால் நடக்க, மற்றவர்கள் துப்பாக்கியும் கையுமாய் பின் தொடர்ந்தார்கள்.

இரண்டு நிமிட நடை.

ரிசர்ச் சென்டர் முழுவதும் அசாத்திய நிசப்தம்.

எக்ஸ்பரிமெண்ட் செல் (EXPERIMENT CELL) என்ற பெயர்ப் பலகையை முகப்பில் தாங்கியபடி அந்த அறை வந்தது. அறையின் கதவில் ஒரு பூட்டு.

''சாவி யார்கிட்டே...?''

''என்கிட்டே''

எடிசன் முன்னால் வந்தான்.

''திற...''

எடிசன் தன் பேண்ட் பாக்கெட்டில் கையை நுழைத்து சாவியை எடுத்து பூட்டுக்கு விடுதலை கொடுத்துக் கதவைத் தள்ளினான்.

அந்தக் கனமான கதவு மெல்லத் திறந்து கொண்டது.

உள்ளே அரையிருட்டு.

நமோ நாராயணனையும் எடிசனையும் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். ஏ.சி. குளிரில் இருந்தது அறை. சற்றே பெரிதான அறை. மேஜைகளின் மேல் மருத்துவ உபகரணங்கள்.

தரையில் விரித்து இருந்த கார்பெட்டில் போர்வைகள் போர்த்தப்பட்ட நிலையில் ஐந்து பேர் படுத்து இருந்தார்கள்.

மஹாதேவ் கேட்டார்.

''இதில் யார் மனோரஞ்சிதம்...?''

''ரெண்டாவதாய் படுத்து இருக்கிற பெண்...''

மஹாதேவ் கையில் துப்பாக்கியோடு பக்கத்தில் போய், குனிந்து போர்வையைப் பிடித்து இழுத்தார்.

அடுத்த விநாடி -

'ர்ர்ப்' பென்று ஒரு அறை மஹாதேவின் கன்னத்தில் இடியாய் விழ - என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்வதற்கு முன்னால் அவருடைய கையில் இருந்த துப்பாக்கி பறிக்கப்பட்டது. அதைப் பார்த்து-

டாக்டர் பவன்குமார், புனிதா, ப்ரீதா திகைத்து திணறிக் கொண்டு இருக்கும்போதே போர்வைக்குள் இருந்த மற்ற நான்கு பேரும் குபீரென்று துள்ளி எழுந்து நின்றார்கள்.

எல்லோரும் ஆண்கள்.

கமாண்டோக்கள்.

முழு யூனிபார்மில் - கைகளில் சிறிய சைஸ் மினி எல்.எம்.ஜி கன்கள்.

பத்தே விநாடிகள், எல்லோரும் வளைக்கப்பட்டார்கள்.

நமோ நாராயணன் கத்தினார்.

''அரஸ்ட் தெம் ஆல்...''




**லா**க்கப்பில் போலீஸ் கொடுத்த மரியாதைக்குப் பிறகு, மஹாதேவ் வீங்கிய உதடோடும், ரத்தம் கசியும் வாயோடும் - புரபசர் நமோ நாராணன் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல ஆரம்பித்தார்.

''என்னோட பத்து வருஷ உழைப்பு இந்த 'செல் - ஜென்மா' இதுல மேல உங்களுக்கு என்ன கோபம்...?''

''கோபம் இல்லை...''

''பின்னே..?''

''லாபம்.''

''என்ன லாபம்..?''

''உங்களுடைய கண்டுபிடிப்பான 'செல் - ஜென்மா' மருத்துவப் பயன்பாட்டுக்கு வரக்கூடாது... ஐந்து பெரிய வல்லரசு நாடுகளின் மருத்துவத்துறை சாதிக்க முடியாத ஒரு சாதனையை ஒரு இந்திய புரபசர் நிகழ்த்தக் கூடாது... இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்... என்கிற 3 கோரிக்கைகளோடு, இந்தியாவின் எதிரிநாடுகள் ஒரு வெளிநாட்டு ஏஜெண்ட்டை என்னிடம் அனுப்பின. அந்த 3 கோரிக்கைகளையும் ஆறு மாதத்துக்குள் நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றிவிட்டால், இரண்டு லட்சம் டாலர் பணத்தை ஸ்விஸ் பேங்கில் என் பெயரில் போட்டுவிடுவதாய்ச் சொன்னார்கள். நானும் ஒப்புக் கொண்டேன். அதற்காக, நான் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லிக் கொடுத்தார்கள். புரபசர் நமோ நாராயணனின் ஒய்.டி.டி. ரிசர்ச் செண்டர்க்குள் எப்படியாவது நுழைந்து, அவரையும் அவருடைய உதவியாள் எடிசனையும் துப்பாக்கி முனையில் மடக்கி, ட்ரிபின் எக்ஸ் எனப்படும் மெண்டல் டிஸ்ஆர்டரை உண்டாக்கும் இஞ்செக்ஷன்களை போட்டால் போதும். அவர்களுடைய மூளைத்திறன் பாதிப்பு அடைந்து எல்லா நினைவுகளும் அழிந்து போய் - நடமாடும் உயிருள்ள பொம்மைகளாக மாறிவிடுவார்கள். அந்த நிலைமை எப்படி ஏற்பட்டது என்று, அவர்களாலும் சொல்லமுடியாது என்பதால் இந்தத் திட்டம் எனக்குப் பிடித்தது. நான் அமைச்சர் தேசாயின் உதவியாளர் என்பதால் உங்களுடைய ரிசர்ச் செண்டர்க்குள் வெகு சுலபமாய் நுழைந்துவிடலாம் என்று சொன்னார்கள். எப்படி நுழைவது என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் என் மகளின் நிச்சயதார்த்த பங்க்ஷன் வந்தது. ப்ரீதாவை ஒரு பேஷண்டாய் நடிக்க வைத்து - அவளுக்கு 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட் கொடுத்தால்தான் குணமாகும் என்று தேசாயிடம் கோரிக்கை வைத்தால், அவர் அதை ஏற்றுக்கொள்வார் என்று நம்பினேன். நான் நம்பினபடி எல்லாம் நடந்தது. இரண்டு லட்ச டாலர் பணம் கிடைக்கப்போகிற ஆசையில் என்னுடைய மனைவி புனிதாவும், மகள் ப்ரீதாவும், என் ஃபேமிலி டாக்டர் பவன்குமாரும் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். இதில் எனக்கு இடைஞ்சலாய் இருந்த ஒரே விஷயம் சபரிவாசன் பிடிவாதம்தான். ப்ரீதா எப்படியிருந்தாலும் சரி, அவளைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன் என்று அடம் பிடித்தான். ப்ரீதாவுக்கு 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட் கொடுக்க நாங்க டெல்லியிலிருந்து சென்னை புறப்பட்டபோது, அவனும் வர்றேன்னு பிடிவாதமாய்ச் சொல்ல, அவனை எப்படி தடுத்து நிறுத்தறதுன்னு யோசிச்சோம். நல்லவேளையாக அவனோட ஐ.டி.கம்பெனிக்கு இன்கம்டாக்ஸ் ரெய்ட் வரவே, அவன் டெல்லியிலேயே ஹெல்ட் அப் ஆயிட்டான். சபரிவாசன் இன்கம்டாக்ஸ் பிரச்னையை முடிச்சகிட்டு டெல்லியிலிருந்து புறப்பட்டு சென்னை

வர்றதுக்குள்ளே - உங்களுக்கும் எடிசனுக்கும் ட்ரிபிள் எக்ஸ் ஊசியைப் போட்டுட்டு மனோரஞ்சிதத்தையும் மீட்டுக்கிட்டு டெல்லி திரும்பி வரத் திட்டம் போட்டிருந்தோம். ஆனா, நாங்க எதுக்காக வர்றோம்ன்னு கெஸ் பண்ணிகிட்ட நீங்க, எங்களை மடக்க கமாண்டோ வீரர்களை ஏற்பாடு பண்ணி எக்ஸ்பரிமெண்ட் செல்லில் தயாராய் வெச்சு இருந்திருக்கீங்க... நாங்க அதை எதிர்பார்க்கலை. மனோரஞ்சிதத்தைப் பார்க்கப் போகிற ஆவலில் மாட்டிக்கிட்டோம்..."

நமோ நாராயணன் புன்னகைத்தார். "மஹாதேவ்..! நீங்க ப்ரீதாவைக் கூட்டிகிட்டு இந்த ரிசர்ச் சென்டர்க்கு வர்றது, செல் - ஜென்மா ட்ரீட்மெண்டுக்காக இல்லை என்கிற உண்மையை எங்களுக்கு சொன்னது யார் தெரியுமா?"

"யா... யார்..?"

"சபரிவாசன்."

"மஹாதேவின் பார்வை வியப்பில் உறைந்து போயிற்று. நமோ நாராயணன் தொடர்ந்தார். சபரிவாசன் ஹாஸ்பிட்டலோட டாய்லட் அறைக்குள்ளே இருக்கும் போது அவர் உள்ளே இருக்கிற விஷயம் தெரியாமல் நீங்களும் உங்க மனைவி புனிதாவும் ப்ரீதாவோட உடல்நிலையைப் பற்றி பேசியதை அவர் ஏதேச்சையாய்க் கேட்டு இருக்கார். அதன் மூலமாய் அவருக்கு எல்லா விஷயங்களும் தெரிய வந்திருக்கு. அதிர்ச்சியான அவர் தன்னோட அப்பா சித்தரஞ்சன்கிட்டே எல்லா விஷயத்தையும் சொல்ல - அவர் உடனே என்னைத் தொடர்புகொண்டு நேற்றைக்கு ராத்திரியே பேசிட்டார். மஹாதேவ் கும்பல் ஏதோ ஒரு சதித் திட்டத்தோடு வர்றாங்க. அவங்களை போலீஸ் உதவியோடு கையும் களவுமாய் மடக்குங்கள் என்று சொன்னார். ராத்திரி பதினோரு சுமாருக்கு, போலீஸ் கமிஷனரோடு பேசிட்டேன். அவர், கமாண்டோ படை வீரர்கள் அஞ்சு பேரை அனுப்பி வெச்சார்..."

நமோ நாராயணன் பேச்சை நிறுத்த - அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த எடிசன், தன் இடது கையின் ஆட்காட்டி விரலால் தொய்வாயத் தளர்ந்து இருந்த மஹாதேவின் முகத்தை நிமிர்த்தினான்.

"நீங்க பேசக்குத்தான் மஹாதேவ். பட், மெகா க்ரிமினல். செல் - ஜென்மா என்கிற ஒரு அற்புதமான மருத்துவ விஞ்ஞான உண்மையை எங்க புரபசர் கண்டுபிடிச்சார். அவர் ஒரு தமிழர். இந்தியர். அவர்



கண்டுபிடிச்ச இந்த அரிய விஷயத்துக்காக ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்படணும். இனிமேல் பிறக்கப் போகிற குழந்தைகளும்கூட பெருமைப்படணும். ஆனா, நீங்க பெருமைப்படலை. அதை அழிக்கணும்ன்னு ஆசைப்பட்டு, வெளிநாட்டுச் சதிகளோடு சேர்ந்து கைகோர்த்துக்கிட்டீங்க. ஸ்விஸ் பேங்கில் உங்க பாலன்ஸ் ஏறணும்ங்கிறதுக்காக எனக்கும் புரபசர்க்கும் ட்ரியிள் எக்ஸ் இஞ்செக்ஷன் போட்டு மெண்டல் ஆக்கப் பார்த்தீங்க...! இது எப்பேர்ப்பட்ட பச்சைத் துரோகம்? ஒரு உயிரின் ஜீவநாடியான மரபணுவை ஆராய்ச்சிக் கூடத்தில் செயற்கையாக உருவாக்கி, அதுல வெற்றியும் பெறுவது சாதாரண விஷயம் இல்லை. இதுக்காக அவர் 15 வருஷம் உழைச்சார். மற்ற வெளிநாட்டு உயிரியல் விஞ்ஞானிகள் எவ்வளவோ முயற்சி பண்ணியும், அவங்களால செயற்கை செல்லை உருவாக்க முடியலை. அதுல நம்ம புரபசர் வெற்றி பெற்று ஒரு புதிய சாதனையைப் படைச்சிருக்கார். உயிரியல் வரலாற்றில் இது ஒரு மகத்தான திருப்புமுனை. ஒரு புதிய சகாப்தம். மனிதனை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கிற பல நோய்களுக்கு, இந்தச் செயற்கை செல் தீர்வாய் அமையப்போகிற நாள் ரொம்பத் தூரத்தில் இல்லை. இந்தச் செயற்கை செல்லை உருவாக்கற விஷயத்தில் மத்திய அமைச்சர் தேசாய் புரபசர்க்கு உறுதுணையாய் இருந்தார். ஆராய்ச்சி வெற்றி பெற அரசு சார்பில் பல கோடிக்கணக்கான ரூபாயை மான்யமாகக் கொடுத்தார். சோதனை வெற்றி பெற்றதும் அவர் சொன்ன முதல் வார்த்தை - 'செல் - ஜென்மாவை வெற்றிகரமாய் உருவாக்கிட்டீர்கள். இது நடைமுறைக்கு வரும்வரை இது பற்றியச் செய்திகள் வெளியே வரக்கூடாது. இன்னமும் அந்த முயற்சி சோதனையின் அளவில்தான் இருக்கிறது என்று, இந்தியாவை பகையாக நினைக்கும் நாடுகள் நம்பிக்கொண்டு இருக்க வேண்டும்' என்று சொன்னார். புரபசரின் பேச்சுக்களும், அமைச்சர் தேசாயின் பேச்சுக்களும் சதிகாரர்களால் ஒட்டு கேட்கப்படலாம் என்ற சந்தேகத்தில் அவர்கள் சங்கேத வார்த்தைகளைப் பயன்படுத்தி பேசிக்கொண்டார்கள். அதில் ஒரு வார்த்தை **பரிசோதனை எலி**. பொதுவாய் பரிசோதனை எலி என்று சொன்னால், லேப்பில் ஏதோ ஒரு சோதனைக்காக பயன்படுத்தும் ஒரு எலி என்று எல்லோரும் நினைத்துக்கொள்வார்கள். ஆனால்... நானோ, புரபசரோ, தேசாயோ அந்த வார்த்தையைப் பேசினால் அந்த வார்த்தைக்கு தேசத்துரோகி - ஆபத்தான

நபர் என்று அர்த்தம். ப்ரீதாவை பரிசோதனை எலி என்று சொன்னதும் அந்த அடிப்படையில்தான்...!"

எடிசன், தன் நீண்ட பேச்சை நிறுத்திவிட்டு மினரல் வாட்டர் பாட்டில் எடுத்து ஒரு வாய்த் தண்ணீரைத் தொண்டையில் சரித்துக் கொண்டு இருக்கும்போதே, புரபசர் நமோ நாராயணன் பேச்சைத் தொடர்ந்தார்.

"உங்க ஆள் மனோரஞ்சிதம், ஒரு ப்ரஸ் ரிப்போர்ட்டராய் மட்டும் இருந்திருந்தா - பேட்டி கொடுத்துட்டு உடனடியாய் அவளைத் திருப்பி அனுப்பியிருப்போம். பட், அவ ஒரு ப்ரஸ் ரிப்போர்ட்டர் மட்டும் இல்லை. அவள் அதற்கும் அப்பாற்பட்டவள் என்பதை, அவள் வைத்து இருந்த அதி நவீன காமிரா, கையடக்க பாம் டாப், கட்டியிருந்த வாட்ச், கழுத்தில் போட்டிருந்த ஒரு பவள மாலை ஆகியவை காட்டிக்கொடுத்தன. அந்தப் பவளமாலையை அவள் மயக்கமாய் இருந்த சமயத்தில் சோதித்துப் பார்த்தபோது ஒவ்வொரு பவளமும் ஒரு சின்ன சயனைட் குப்பி என்பது தெரிந்தது. அதற்கு பிறகு அவளை வெளியே விடுவோமா என்ன..? அவளுக்கு மயக்கம் தெளிஞ்சதும் விசாரித்தோம். எப்படி எப்படியோ விசாரித்தோம். அவ உண்மையை ஒத்துக்கலை.

பொதுவாய் இந்த ரிசர்ச் சென்டர்க்குள் மனநலம் சரியில்லாத சில பெண்களைக் கூட்டி வந்து 'செல் - ஜென்மா' ட்ரீட்மெண்ட் குடுத்துப் பார்ப்போம். மனோரஞ்சிதம் என்னை பேட்டி எடுக்கிறதுக்காக வந்தபோது, வசந்தி என்கிற ஒரு மனநோயாளிப் பெண் எக்ஸ்பரிமெண்ட் செல்லிலிருந்து எப்படியோ வெளியே வந்து, கீழே விழுந்து அடிபட்டு ரத்தக் காயத்தோடு என்னைப் பார்க்க வந்தா. அதை மனோரஞ்சிதம் பார்த்துட்டா. அந்தப் பொண்ணு யார்ன்னு கேட்டு என்னை கிராஸ் கொஸ்டியன் பண்ணினாள். அந்த நிலைமையில் மனோரஞ்சிதத்தை வெளியே அனுப்பக் கூடாதுன்னு நானும் எடிசனும் முடிவு எடுத்து அவளை பயமுறுத்த - எங்களுடைய செயற்கை கண்டுபிடிப்பு உயிரினமான நீடில் கோப்ராவை எடுத்து அவளுடைய கழுத்தில் விட்டோம். அது கழுத்தில் ஒரு ஊசியளவு துளை போடுமே தவிர உள்ளே போகாது. அதே இடத்தில் ஒட்டிக் கொண்டு இருந்துவிட்டு சிறிது நேரம் கழித்து கீழே விழுந்துவிடும். ஆனால், அந்த நீடில் கோப்ரா உடம்பின் உள்ளே போய்விட்டதாக நினைத்து மனோரஞ்சிதம் புலம்பிக் கொண்டிருந்தாள். அதற்குப் பிறகு, நாங்களும் அவளை பயமுறுத்தி அவள் யார்



என்பதை தெரிந்து கொள்ள பலவழிகளில் முயற்சி செய்தோம். அவள் பயப்பட்டாளே தவிர, கடைசி வரைக்கும் அவள் உங்களைப்பற்றி ஒரு வார்த்தைக்கூட சொல்லவில்லை. அதற்குப் பிறகு, நாங்கள் அவளை உளவுத்துறை பிரிவிடம் ஒப்படைத்து விட்டோம்."

நமோ நாராயணன் பேசிக்கொண்டு இருக்கும்போதே-

அவருடைய செல்ஃபோன் வைப்ரேஷனில் அழைத்தது.

அழைப்பது யார் என்று பார்த்தார்.

தேசாய்.

"எடிசன்...!"

"ஸார்."

"தேசாய் கூப்பிடறார். உள்ளே சரியாய் டவர் கிடைக்காது. பேசிட்டு வந்துடறேன்..."

"ஓ.கே... ஸார்..."

நமோ நாராயணன் லாக்கப்புக்கு வெளியே வந்தார். போலீஸ் அதிகாரிகள் காத்துக் கொண்டிருக்க அவர்களைத் தாண்டி ஓர் ஓரமாய் நின்றுகொண்டு பேச ஆரம்பித்தார்.

"சொல்லுங்க ஸார்."

"மாட்டிகிட்ட மஹாதேவ் என்ன சொல்றார்?"

"நாட்டுக்கு துரோகம் பண்ண இருந்த எல்லாத்தையும் ஒத்துக்கிட்டார்"

"வாக்கு மூலம் கொடுத்துட்டாரா?"

"க்ளியர் ஸ்டேட்மெண்ட், கையெழுத்துப் போட்டுக் குடுத்துட்டார், டாக்டர் பவன்குமார், புனிதா, ப்ரீதா எல்லாரும் கொஞ்சம்கூட பிசிறு இல்லாமே வாக்குமூலம் கொடுத்து கையெழுத்து போட்டு கொடுத்ததோடு இல்லாமே, சட்டம் தர்ற தண்டனையை அனுபவிக்கவும் தயார்ன்னு சொல்லிட்டாங்க..."

"அப்ப... பிரச்னை ஓவர்..."

"ஓவர்..." நமோ நாராயணன் உற்சாகமாய்ச் சொல்ல, மறுமுனையில் தேசாய் குரலைத் தாழ்த்தினார்.

"சரி... இனிமேல் நாம பிசினஸை ஆரம்பிப்போமா?"

"பார்ட்டி வந்துட்டாங்களா ஸார்?"

"வந்துட்டாங்க... கனடா பார்ட்டி. பத்துலட்சம் டாலர் பேசி முடிச்சுடலாமா..?"

"முடிங்க.. ஸார்..."

"வாழ்க பாரதம்"

"வாழ்க பாரதம்"

(முற்றும்)